S.273

உ

குமரன் துணை.

வைத்தியர்கள் யாவரும் புகழப்பெற்ற

# வைத்திய கல்லாடம்.

ஸ்ரீலஸ்ரீ இராமதேவரென்ற

**யாகோபு அவர்கள்**

திருவாய்மலர்ந்தருளிய

சாஸ்திரங்கள் பதினேழுக்கும் செய்பாகங்
களும் அரும்பதவுரையும் சேர்ந்தது.

ஸ்ரீலஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் பரம்பரை

**மு. நமசிவாயக் குருக்களவர்களின்**

ஓலையேட்டுப் பிரதியின்படி

மதுரை, புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம.

**குருசாமிக்கோனார் சன்**

அவர்களாற்றமது

மதுரை வடக்கு மாசிவீதி, குருசாமிக்கோனார் தெரு,

**ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்**

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை ரூ 1937 1—4—0

*Registered Copy Right.*

உ

பராபரம் துணை.

# முகவுரை.

அறிதற்கரிய வைத்திய வாத சாஸ்திரங்களை முற்று முணர்ந்த கன தனவான்கள் யாவருக்கும் ஓர் விக்ஞாபனம் யாதெனில் :—

நீண்டகாலங்களுக்கு முன் வைத்திய வாத யோக ஞானங்களில், மகா வல்லவரான "இராம தேவர்" ஒரு சமயம் மக்கமா நகருக்குச் சென்று இசுலாத்திற் சேர்ந்து 'யாகோபு' என்னும் நாமதேயத்தைப் பெற்று ஆங்குள்ள நபிகள் சபாஷெனக் கூறிமன மகிழும்படியாகத் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய வாத சாஸ்திரங்கள் பதினேழின் ஓலைச் சுவடிகள் அரும் பதவுரையுடன் பற் பல இடங்களிலு மிருந்து வரக்கிடைக்கப் பெற்றேன். அவ்வாறு கிடைக்கப் பெற்ற ஷை ஓலைச்சுவடிகளை முதற்பதிப்பில் அரும்பதவுரை களைச் சேர்க்காது மூலத்தை மாத்திரம் அச்சிட்டு விற்பனைசெய்து வந்தேன். வைத்தியர்கள் யாவரும் கல்லாடர் அரும்பத வுரையை அச்சிட்டு வெளிப்படுத்து வீர்களென என்னை விரும்பிக் கேட்டுக் கொண்டதின் நிமித்தம் இன்னுமேதேனும் ஷை ஓலைச் சுவடிகள் கிடைத்தால் சரிபார்த்து உரைகளை அச்சிடலா மென்றெண்ணி யிருந் தேன். அதற்கேதுவாக மதுரை ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவா அவர்களிடமிருந்தும் ஐராவதநல்லூர் கோழிக்கொடி ஸ்ரீ லஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் பரம்பரை M. நமச்சிவாயக் குருக்களவர் களிடமிருந்தும் ஷை யாகோபு அவர்கள் பாடிய சிற்சில வைத்திய ஓலைச்சுவடிகள் கிடைக்கப்பெற்றேன். அச்சுவடிகளையும், என்னிட மிருந்த சுவடிகளையும், சரிபார்க்க உரைகள் சரியாக யிருந்தது, அன்றியும், அச்சுவடிகளின் கடைசியில் வைத்தியக் கல்லாடமாகிய இப்புத்தகத்தி லிருக்கிற பாடல்களும் செய்பாக அரும்பதவுரை களுமிருக்கக் காணப்பெற்றேன். அவைகளைப் பரிசீலனை செய்யுமள வில் மிகவும் பொருத்தமாக விருந்தது. உடனே அச்சிட்டு வெளி யிட எண்ணினேன். அப்பொழுது சிலர் வைத்தியக் கல்லாடமாகிய பாடல்களை கல்லாடர் பாடினரென்றும், சிலர் யாகோபு பாடின

ரென்றும், பற்பலவிதமாய்க் கூறினார்கள், அதற்கு யான் எவர் பாடினாலென்ன வியாதிகளுக்குத்தக்க ஔஷத முறைகள் சரியாக விருக்கின்றதா வெனக் கவனிக்கவேண்டுமே யல்லாது மற்றேதுமில்லை யெனச் சொல்லிவிட்டு யாவரும் மனமகிழுறும்படி இக்கல்லாடத் தையும் மேற்கண்ட யாக்கோபு சாஸ்திரங்கள் 17-ன் அரும்பதவுரை யையுஞ்சேர்த்து அச்சிட்டு முடித்தேன். ஆகையால் வைத்திய சிரோ மணிகள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கிச் சந்தேக விபரீ தங்களை நன்குணர்ந்து ஔஷதப் பிரயோகஞ் செய்வீர்க ளெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோனார்.

---

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் :—

யாகோபு முனிவரால் இயற்றிய 17-சாஸ்திரங்களுக்கும் உள்ள மூலங்களுக்கு அரும்பதவுரையாகிய யாகோபு கல்லாட மென்ற இந்தச் சாஸ்திரத்தை என்னால் அச்சிடப்பெற்று கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இப் புத்தகத்தையாவது இதில் கண்டிருக்கிற பாகங் களை யாவது ஒருவரும் அச்சிடலாகாது மீறி அச்சிடுவரேல் 1867-ஹூ 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி யான் கோறும் நஷ்டத்திற்கு உத்திரவாதியாகவும் பினல்கோட்டா ரவர்கள் கேள்விக்கு ஜவாப்தாரி களாகவு மிருப்பார்களென்பதை யாவரும் கவனிப்பீர்களாகவும்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்,

குரு. இராமசாமிக் கோன்,

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

உ

பரமபதி துணை.

# வைத்தியக் கல்லாடம்.

## அரும்பத வுரை.

காப்பு—வேண்பா

ஆரணந்தேர் கல்லாட மென்னுமொரு வைத்தியத்தைக்
காரணமாய்ப் பூவிற் கழறுதற்குப்—பூரணநா
தன்முதல்வ னீன்றருள்சு தன்கணநா தன்னெழிலார்
நன்மலர்த்தால் போற்றிடுவோம் நாம்.

நூல்

பூரணமாங் *கல்லாடந் தன்னைப் பூவிற்
புகழாகக் கூறியதோர் விபரங்கேளு
ஆரணமாம் வைத்தியத்தின் காண்டமொன்று
அரிதான வாதத்தின் காண்டமொன்று
தாரணமாம் ஞானத்தின் காண்டமொன்று
சாதனைசெய் யோகத்தின் காண்டமொன்று
காரணமாம் விளக்கமுடன் காண்டம் நாலும்
கருதியநற் பறையருளாற் பாடினேனே. (1)

## நாதகுருத் தைலம்

பரைநாதம் பலம்பூதஞ் சுவையா தீதப்
பாங்கான வெடியுப்பு வினையேசேரு
கிரகசா ரங்களஞ்சு செவியே வாங்கு
கிருபையுள்ள மால்தேவி களஞ்சுமூன்று
திரசாதி சூரனுமவ் விடையே நட்சத்
திரங்களஞ்சு நவநீதங் திக்குமாகும்
உரமான சரக்கதனை நவநீ தத்தோ
டுண்மையாய்க் கல்வமதில் மைபோ லாட்டே. (2)

---

* இக்கல்லாடத்தை வைத்திய வாத யோக ஞான காண்டங்களெனப் பகுத்துக் கூறியிருக்கிறு றென் றறிக.

உண்மையா யரைத்தபின்பு கலசத்திட்டு
உத்தமனே குழித்தயிலம் வாங்கிக்கொள்ளு
கண்ணியாம் நாதகுரு தைலமாச்சு
கருவான தைலமிது கிடையாதப்பா
பண்ணுகிற மருந்துவகைக் கெல்லாமாகும்
பண்பான இதிற்கொஞ்ச மிட்டுப்பார்த்தால்
மண்ணில்வரும் குருமுப்பு இதற்கொவ்வாது
மானிலத்தோர் பிழைப்பதற்காய் விளம்பினேனே. (3)

அரும்பத வுரை

பரைகாத மென்பது—கெந்தகம், பலம்பூத மென்பது—ஐந்து பலம். சுவையாதீத்ப் பாங்கான வெடியுப் பென்பது — வெடி யுப்பு, வினையே சேரென்பது—(நல்வினை தீவினை) இரண்டுசேரு, கிரக சாரம் என்பது—(கிரங்கள் நவமாகையால்) நவச்சாரம், செவி யென்பது—இரண்டாகும், மால்தேவி யென்பது—அரிதாரம், திர சாதிசூர னென்பது—வீரம், நட்சத்திர மென்பது—பூரம், நவநீத மென்பது—வெண்ணெய், திக்கென்பது—எட்டுஎன்ப.

செய்பாகம்

கெந்தகம் பலம் 5, வெடியுப்பு பலம் 2, நவச்சாரங் களஞ்சு 2, அரிதாரங் களஞ்சு 3, வீரங்களஞ்சு 3, பூரங்களஞ்சு 1, பசுவின் வெண்ணெய் பலம் 8, ஆகிய இந்த ஆறுசரக்குகளையுங் கல்வத்திட்டு வெண்ணெய்யைச் சேர்த்தரைத்துக் குழித்தைலம் வாங்கிய அந்தத் தைலமே நாதகுரு தைலமாகு மென்றறியவும்.

## வான்மெழுகு

விந்து விந்துசெந் தூர நாதமிகு
*வீர மோடுசிவ காமியும்
வெள்ளை சிங்கிநட் சத்தி ரம்புகர்
வீறு மாண்குறியு மெட்டுபின்
தொந்த வாளமுரு கன்பு ராணமொடு
தூப தீபபரி சமனிடை
சுத்தி யாவதிலை பாருபாரு பரி
சுத்த மானகலு வத்திலே

*வீரதார சிவகாமியும் எனவும், தொந்தமான முருகன் புராணமொடு எனவும் சில ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுகிறது.

சிந்தை கொண்டுபதி னாறு மொன்றுபடச்
சேர்த் தரைத்துவிடு தூளதாய்ச்
*சிக்கி ரத்திலிடு நாதமா மதனைச்
சேரு நாத குரு தைலமே
முந்தி விட்டுமொரு சாமம் நாலுமரை
முற்றுமே மெழுகு ளுந்ததாய்
மோச மின்றிபனை வெல்லந் தன்னிலிடு
முறிவு பத்தியமு மில்லையே (4)

இல்லை யில்லைகப வாத சன்னிசுர
மெட்டு காசமொடு குட்டமும்
ஏறு கின்றவிரை வாத சூலைரணம்
யீளை தோஷமட்ட குன்மமுஞ்
சொல்லு குன்மவலி மார டைப்பினொடு
சூதகத் தொடும கோதரஞ்
சோகை மஞ்சட்கா மாலை சத்திப்புக்
தொல்லைப் போக்கொடு பவுத்திரம்
கல்ல டைப்புதலை வலிகி ரந்திவரு
கண்ட மாலை சல தாரையிற்
காணும் நீரிழிவு குத்தலான முகில்
காச ரோக முத லானதும்
எல்லை விட்டுஎழு கடல் கடந்துபிணி
என்ன பாடுபடு மறிகிலோம்
இந்த வான்மெழுகு எந்த நாளுமுயி
ரெண்ண லாகு மிது திண்ணமே. (5)

அரும்பத வுரை

விந்து வென்பது—இரசம், விந்துசெந்தூர மென்பது—இரச செந்தூரம், நாத மென்பது—கெந்தி, சிவகாமி என்பது—கௌரி, வெள்ளை என்பது—வெள்ளைப் பாஷாணம், சிங்கி யென்பது—மிருதார்

*சீக்கிரத்திலெடு என வேறுசில ஏட்டுப்பிரதிகளிலுங் காணப்படுகிறது.

சிங்கி, நட்சத்திர மென்பது—பூரம், புகர் என்பது—வெள்ளி, வீறு மாண்குறி யென்பது—லிங்கம். எட்டுபின் என்பது—அபின், தொந்த வாள மென்பது—நேர்வாளம், முருகன் புராணமென்பது—காந்தம், தூபதீபமென்பது—சாம்பிராணி, சூடன், பரி யென்பது—தங்கம், என்ப.

## செய்பாகம்

இரசம், இரசசெந்தூரம், கெந்தி, வீரம், கௌரி, வெள்ளைப் பாஷாணம், மிருதார் சிங்கி, பூரம், வெள்ளி, லிங்கம், அபின், நேர்வாளம், காந்தம், சாம்பிராணி, சூடன், தங்கம் ஆகிய இச்சரக்குகள் 16-ம் சமனிடைவீதம் வாங்கிச் சுத்திசெய்து முற்கூறிய நாதகுரு தைலத்தை விட்டு நான்கு சாமமரைத்து மெழுகு பதத்திலெடுத்து உளுந்துப் பிரமாணம் உருட்டிப் பனை வெல்லத்தில் கொடுக்க மேற்கண்ட 5-வது பாட்டிற் கூறியபடி சகல ரோகங்களுந்தீரும் கரப்பான் பதார்த்தங்களை நீக்கவும். ஆனல் யோகிகளுக்குப் பத்தியமில்லை.

## வசனம்

சிலஏட்டுப்பிரதிகளில் இந்தப்பாட்டு 14-சரக்கென்றும் பாட்டுகள் வித்தியாசமா யிருக்கிறது ஆகையால் பெரியோர்களுக்குத்தெரிந்ததை தெரிந்தவாறே செய்து கொடுத்தாலும் வியாதியைக் கண்டிக்கிறது.

விந்து விந்து செந்தூர நாதமொடு
வீர மானசிவ காமியும்
வெள்ளை சிங்கிநட் சத்தி ரம்புகர்
வீறு மாண்குறியு மெட்டுடன்
தொந்த மானமுரு கன்புராணமொடு
தூப தீபபரி சமனிடை
சுத்தி செய்துநீ பாரு பாருபரி
சுத்த மானகலு வத்திலே
சிந்தை கொண்டுபதி னலுமொன்றுபட
சேர்த் தரைத்தெடு தூளதாய்
சீக்கி ரத்திலிடு நாத மாமதனை
சேரு நாதகுரு தைலமே

மூந்தி விட்டுமொரு சாமம் நாலுமரை
முற்றுமே மெழுகு ளுந்ததாய்
மோச மின்றிபனே வெல்லந் தன்னிலிடு
முறிவு பத்தியமு மில்லையே. (6)

## நந்தி மெழுகு

ஆதியிலே நந்தீசர் மெழுகு சொன்னர்
அருமையுள்ள மெழுகதுவுஞ் சொல்லக்கேளு
நீதியாய் ஏலரிசி வால்மிளகும்
நிலைமையுள்ள அதிவிடையாம் கிராம்புநாலும்
சாதிவகை விராகனிடை யொன்றுப்வாங்கிச்
சரியாகத் தான் வருத்து இடித்துத்தூளாய்
கோதில்லாச் சூரணமா யாக்கிவைத்தே
குருசொன்ன படிசெய்ய வாக்யங்கேளே. (7)

வாக்கியமாம் சேங்கொட்டை தன்னிலேதான்
மகிமையுட னெண்பதுவுந் தானெடுத்து
தூக்கியே கொட்டைகளின் மூக்கைவெட்டித்
துணிவாக சாணிப்பால் தன்னில்போட்டு
தாக்கியே வேகவைத்துக் கழுவிவிட்டு
சரியான படியெடுத்துத் துண்டாய்வைத்து
பாக்கியமா யெட்டிவிதை தன்னிலேதான்
பரிவாக யிரண்டுபத்து விதையெடுத்தே. (8)

எடுத்தந்த விதையை நவ்வல் பட்டைச் சாற்றில்
இதமாகத் தான்போட்டுக் கொதிக்கவைத்து
தடுத்தந்த விதைதனையுங் கழுவிவைத்து
தயவாகப் பசுநெய்ப்படி முக்கால்வாங்கி
விடுத்தந்தக் கொட்டைகளை நெய்யிற் போட்டு
வேகவைத்துக் கொட்டையெடுத் தெரிந்துவிட்டு
மடுத்தந்த நெய்யதனில் பனைவெல்லந்தான்
வகையாகப் பலமெட்டு நொருக்கிப் போட்டே. (9)

போட்டவுடன் பாகாக்கிவைத்துக் கொண்டு
புகழான சூரணத்தை யதிலேபோட்டு
தேட்டமுடன் தேனுபடி முக்கால்விட்டு
திருவான மெழுகுபதந் தனிலிறக்கி
நாட்டமுட னிஞ்சியபின் சுண்டைக்காய்போல்
நலமாய்க்கால் மண்டலந்தான் கொண்டாராகில்
பாட்டமுள்ள வியாதியெல்லாம் போரேனென்று
பறந்தோடிப் போகுமிந்த மெழுகிற்றானே. (10)

தானேதான் கிரந்தியுட மேகம் போகும்
தகைமூல பவுந்திரமுஞ் சிறங்குபோகும்
மானேதான் சூதகத்தின் வாய்வுபோகும்
மதிமுடக்குச் சூலையுட விஷநீர்போகும்
கோனேபார் விஷப்பாண்டு வீக்கந்தீரும்
கொதிப்பான பித்தகுன்மங் குடிவிட்டோடும்
வானேதான் மெழுகுபத் தியமேயில்லை
மதிப்பான மெழுகுதனைக் கொடுத்துப்பாரே. (11)

நந்தி மெழுகு செய்பாகம்

ஏலம் வால்மிளகு அதிவிடையம் கிராம்பு வகைக்கு விராகனிடையொன்று வாங்கி இளவருப்பாய் வருத்துச் சூரணஞ் செய்து சேங்கொட்டை 80 எடுத்து மூக்கைவெட்டிச் சாணிப்பாலிற் போட்டு வேகவைத்துச் சுத்தமாய்க்கழுவி யெடுத்தபின் எட்டிக் கொட்டை இருபதெடுத்து நவ்வல்மரப் பட்டைச் சாற்றில் வேகவைத்து நன்றாய்க் கழுவிச் சுத்திசெய்து எடுத்துவைத்துக் கொண்டு முக்கால்படி பசுவ நெய்யைச் சட்டியில்விட்டு எட்டிக்கொட்டையுஞ் சேங்கோட்டையும் போட்டுக் காய்ச்சி கொட்டை பிளகின பதத்தில் கொட்டையாவுமெடுத் தெறிந்துவிட்டு கருப்பட்டி யெட்டுப் பலத்தைப் பொடித்து அந்த நெய்யில் போட்டுப் பாகுகாய்ச்சி மேற்கண்ட சூரணத்தைப் போட்டுக் கிண்டி வேகவைத்துத் தேன்படி முக்கால் விட்டுக் கிண்டியிறக்கி இஞ்சியபின் கொம்பு டப்பியில் யெடுத்து வைத்துக்கொண்டு சுண்டக்காய்ப் பிரமாணம் காலை மாலை பத்துநாள் சாப்பிட கிரந்தி மேகம், சொறி, சிறங்கு, மூலப்பவுந்திரம், சூதகத்திரட்டு, சூதகவாய்வு, பித்தகுன்மம், முடக்குச்சூலை, விஷநீர், விஷப்பாண்டு, வீக்கங்கள் தீரும் பால் நெய் வெள்ளாட்டுவத்தல் கூட்டவும். கரப்பான் பண்டம் பழையசோறு நல்லெண்ணை கடுகு தள்ளவேண்டும். இச்சாபத்தியம்.

## நந்தீசர் சஞ்சீவி மெழுகு

பாரப்பா பூரம்லிங்கம் லவங்கம் வாளம்
பரிவாக வகைவகைக்கு வாங்கக்கேளு
சீரப்பா விராகன்ரெண் டரைதான்வாங்கி
சிறப்பான வீரமொரு களஞ்செடுத்து
தேரப்பா இவைநாலுஞ் சுத்திசெய்து
நேர்மையுடன் யாவையுந்தான் பொடித்தெடுத்து
காரப்பா சுக்கேலங் கோரோசனை
கரிம்ஞ்சள் வகைக்கொரு விராகன்வாங்கே. (12)

வாங்கியே யிவைகளையும் பொடித்துக்கொண்டு
வகையான பனைவெல்லம் பலமோபத்து
தாங்கியதோர் கல்வத்தில் தூளைக்கொட்டி
சரிசமனுக் கருப்பட்டி தானும்போட்டு
நோக்கியே தானரைத்துச் சிமிழில்வைத்து
நுணுக்கமுட னுளுந்தளவுப் பிரமாணந்தான்
பாங்காகக் கருப்பட்டிக் குள்ளே வைத்து
பரிவாகக் கொடுத்திடவே பறக்குந்தானே. (13)

தானென்ற விஷப்பாண்டு விஷசீர்சோகை
சரியான வீக்கங்கள் இளைப்பு யிளை
வானென்ற உப்பிசங்கள் சகலமான
வாய்வுகளுந் தீர்ந்துவிடும் பத்தியந்தான்
கோனென்ற கரப்பானின் பதார்த்தமாகா
குருவான நல்லெண்ணை கடுகுமாகா
வேனென்ற இம்மெழுகை யுண்டபோதே
வியாதியெல்லாங் கடல்புக்கு மேன்மைபாரே. (14)

### சஞ்சீவி மெழுகு செய்பாகம்

பூரம் லிங்கம் சுத்திசெய்த நேர்வாளம் கிராம்பு இவைநாலும் வகைக்கு விராகனிடை இரண்டரை வீதமும் வீரம் கோரோசனை கரிமஞ்சள் ஏலரிசி சுக்கு வகைக்கு ஒருவிராகனிடை வீதம் வாங்கி பூரம் லிங்கம் வீரம் நேர்வாளம் இவைகளைச் சுத்திசெய்து பொடியாக்கி

பத்துப்பலம் பனைவெல்லம் வாங்கித் தூளாக்கி மேற்கண்ட தூள் களையும் சூரணங்களையும் கருப்பட்டித் தூளுடன் கலந்து கல்வத்தில் இரண்டுசாம மரைத்துக்கொம்புடப்பியில்வைத்து உளுந்தளவுஎடுத்து கருப்பட்டிக்குள் வைத்துக்கொடுக்க விஷப்பாண்டு, விஷநீர், சோகை, வீக்கங்கள், யிளைப்பு, யீளை, வயிறுப்பிசம், சகலமான வாய்வுகளும் போகும். பத்தியம் கரப்பான் பதார்த்தம் நல்லெண்ணை கடுகாகாது பசும்பால் நெய் சேர்க்கவும் வெள்ளாட்டு வத்தல் சேர்க்கவும்.

## நந்தீசர் சண்டமாருத மெழுகு

பாரேநீ சண்டமாருத மெழுகு
பறங்கிப்பட்டை கடுக்காய்த்தோ லிரண்டுதானும்
நேரேதான் வகைக்குநால் பலமே வாங்கு
நேர்மையுள்ள திரிகடுகுச் சித்திரமூலம்
காரேதான் வகைக்கிரண்டு பலமே வாங்கு
கசகசா ஒருபலம்வெப் பாலரிசி
தாரேதான் கார்போக அரிசிரெண்டும்
சரியாக வகைக்கரைதான் பலமும் வாங்கே. (15)

வாங்கப்பா சாதிக்காய் சாதிபத்திரி
மகத்தான கிராம்பேலம் சித்திரத்தை
ஆங்கமுள்ள வால்மிளகு மதுரமேழும்
அடைவாகக் காற்பலமாய் வாங்கியேதான்
சாங்கமா யிவையாவுஞ் சூரணித்து
சரியான படிதூளாய் வைத்துக்கொண்டு
ஏங்காம லின்னமுந்தான் மருந்தைக்கேளு
இனிமையுடன் நன்றாகச் சொல்லுவேனே. (16)

சொல்லுங்கோ ரோசனைகுங் குமப்பூவுந்தான்
சுகமாக வகைக்குக்காற் பலமே வாங்கி
நல்லதொரு தாளகமும் வீரம்லிங்கம்
நலமாக வகைக்குப்பல மொன்றெடுத்து
வல்லரசச் செந்தூரம் பூரம்தானும்
வகைக்குக் காற்பலமாகச் சுத்தியாக்கி
செல்லமதா யிவைகளையும் பொடிதான் செய்து
திறமாக மெழுகுசெய்ய வகையைக்கேளே. (17)

கேளப்பா சூரணமு மருந்துமொன்றாய்
　　　கிருபையுட னொன்றாக்கி வைத்துக்கொண்டு
பாளப்பா போகாது திரிபலாதி
　　　பாங்குடனே தான்வாங்கிக் கியாழமிட்டு
வாளப்பா கல்வத்தில் சூரணத்தை
　　　மகிழ்வாகத் தான்போட்டுக் கியாழம்ஊற்றி
கோளப்பா யில்லாமல் நாலுசாமங்
　　　குழுறவே தானரைத்து உலர்த்தித்தானே. (18)

தானேதோ னுலர்ந்தபின்பு தேனைவிட்டு
　　　தகமையுடன் முச்சாமந் தானரைத்து
கோனேதான் சிமிழதனி லடைத்துவைத்துக்
　　　கொடுமிளகுப் பிரமாணம் பனைவெல்லத்தில்
கானேதான் சொன்னபடி காலைமாலை
　　　நன்றாகச் சாப்பிட்டுப் புளியைநீக்கு
தேனேதான் வெள்ளாட்டு வத்தல்சேரு
　　　திறமையுட னைந்துநாள் தின்றுபாரே. (19)

தின்றுபார் குடல்வாய்வு சூலைவாய்வு
　　　திமிர்வாய்வு எரிவாய்வு மேகவாய்வு
நன்றுடைய சூதகத்தின் முடக்குவாய்வு
　　　நலமில்லாப் பாண்டுடனே யீரல்வாய்வு
இன்றோடே போரேனென்று யெல்லாவாய்வும்
　　　இனிமையுடன் றானோடுஞ் சொல்லாமற்றான்
என்றுமே வாராது வாயுவெல்லாம்
　　　இகத்தோர்க்கா யிம்மெழுகைச் சொல்லினேனே. (20)

நந்தீசர்—சண்டமாருத மெழுகு செய்பாகம்

பரங்கிப்பட்டை பலம் 4 கடுக்காய்த் தோல் பலம் 4 திரிகடுகு பலம் 2 கொடிவேலிப்பட்டை பலம் 2 கசகசா பலம் 1 கார்போக அரிசி பலம் ½. வெப்பாலை யரிசி பலம் ½. சாதிக்காய் பலம் ¼, சாதி பத்திரி பலம் ¼. ஏலம்பலம் ¼. கிராம்பு பலம் ¼ சித்திரத்தைபலம் ¼. வால்மிளகு பலம் ¼. அதிமதுரம் பலம் ¼. ஆகச்சரக்கு 14-ம்

வாங்கிச் சூரணித்து வைத்துக் கொண்டு கோரோசனை பலம் $\frac{1}{4}$ குங்குமப்பூ பலம் $\frac{1}{4}$ நுணுக்கிவைத்து தாளகம் பலம் 1 வீரன் பலம் 1 லிங்கம் பலம் 1 பூரம் பலம் $\frac{1}{4}$ இந்த நாலும் வாங்கிச் சுத்தி செய்து தூளாக்கி இரசசெந்தூரம் பலம் $\frac{1}{4}$, வாங்கி ஆக 21 சரக்கு மொன்றாய் சேர்த்து திரிபலாதி கியாழமிட்டு மேற்கண்ட சரக்குகளுக்கு 4 சாமம் விட்டரைத்து யெடுத்து உலர்த்தி தேன்விட்டு மூன்றுசாம மரைத்து கொம்பு டப்பியில் வைத்து மிளகுப் பிரமாணம் பனை வெல்லத்தில் வைத்துக் காலை மாலை ஒன்பது வேளைகொடுக்க முடக்குவாதம், திமிர் வாதம், பாண்டுரோகம், சூலைவாய்வு, மேகவாய்வு, குடல்வாய்வு, மண்டை வாய்வு, சூதகவாய்வு, ஈரல்வலி வாய்வு, பாரிசவாய்வு, முதல் யெல்லா வாய்வுகளும் சொல்லாமல் ஓடிவிடும் பசும்பால் நெய் வெள்ளாட்டு வத்தல் சேர்த்துக் கொள்ளவும் பத்தியம் கரப்பான் பதார்த்தங்களும் நல்லெண்ணை கடுகு நீக்கவேண்டியது.

## கிரந்தி சூலைக்குப் புகை

பண்ணிதுமா மரத்துவெள்ளைப் படிகங்கேளு
பலமொன்றுங் கடிதடத்துக் கிறைவனவ்வார்
கண்ணிழந்த பகவானும் புசுண்டனோசை
கத்திவிட்ட காமது விராகன் ஒன்று
எண்ணிபசும் பாலுக்கு மூன்றுந்தம்பி
எடுத்துமே பலம்ரெண்டு சேர்த்தரைத்து
புண்ணியனே திரியுருட்டிக் கொழுத்திப்பார்க்க
போகாதே நோயெல்லாம் புலம்பிப்போமே. (21)

பார்த்தபின்பு தீருகின்ற ரோகங்கேளு
பரவுகின்ற ரணக்கிரந்தி பாண்டுசோகை
சீர்த்தியுள்ள கால்தடிப்பு வற்றிப்போகுந்
திரமான சூலையெல்லாங் காணுதோடும்
நேர்த்தியுடன் பிளவைகண்ட மாலைநீங்கும்
நீங்காத சொறிசிறங்கு நிலைகெட்டோடும்
ஆர்த்தியுடன் கூற்றுவன்போல் வந்தநோய்கள்
அகன்றோடுங் கல்லாட மொழியீதாமே. (22)

அரும்பதவுரை

மா—பெருமை பொருந்திய, மரத்துவெள்ளைப் படிக மென்பது-பளிங்குபோலப் பிரகாசிக்கும் வெள்ளைக் குங்கிலியம், (நிதம்பத்துக் கரசனுன) கடிதடித்துக் கிறைவன்—லிங்கம், கண்ணிழந்த பகவான் என்பது—சுக்கிரன், (அதாவது) வெள்ளி, புசுண்டன் ஓசை என்பது —காகம்ஒசை (அதாவது) காடிக்காரம், பாலுக்கு மூன்றுந் தம்பி-- பசு வெண்ணெய் என்ப.

சேய்பாகம்

வெள்ளைக் குங்கிலியம் பலம் 1, லிங்கம் பலம் 1, வெள்ளி, காடிக்காரம் விராகனிடை 1, பசுவின் வெண்ணெய் பலம் 2. இவைகளை மேற்படி பசுவெண்ணெய்யிற் சேர்த்து அரைத்து சுத்தமான ஒரு வெண்மைத் துணியிற்பூசித் திரியுருட்டிப் பசுவின் நெய்விட்டுத் தீப மேற்றி நோயாளிக்கு முக்காடிட்டு ஷை தீபத்தைப் பார்த்துக்கொண்டிருக்குப்படி செய்ய வியர்வை யுண்டாகும். பிறகு முக்காட்டை நீக்கி அவ்வியர்வையைத் துடைத்துப் பின்பு மூக்கிலும் புகை பிடித்து காய்ச்சாத பசுவின்பால் காற்படி கொடுக்க மேற்கண்ட 22-வது பாட்டிற் கூறிய சகல வியாதிகளும் நீங்கு மென்றறிக.

## வீரச்சுண்ணம்

எழுத்தாதி யாந்தகட்டைக் கிண்ணஞ்செய்து
எழிலந்து பூதத்தின் நடுவேவைத்து
பழுத்தபின்பு மீனுகூடி மைந்தன் றன்னைப்
பாய்ச்சியதன் மேற்சட்டி பதியமூடு
வழுத்துகின்ற கடுங்காரச் சுண்ணமாகும்
வழலைமுப்புக் குருவதுவு மிதற்கீடில்லை
சுழுத்திகளை யறிந்தசிவ ஞானிமைந்தன்
சூட்சமிதன் வகைதெரிந்து செய்வான்பாரே. (23)

அனுப்பானம்

பாரேநீ இம்மருந்தின் முறையைக்கேளு
பகருமுத்தக் காசுவிஷ்ணு கிராந்திதன்னை
நேரேதான் கொண்டுவந்து கியாழமிட்டு
நேர்மையதாய்க் கொடுத்திட்டாற் சயமெட்டும்போம்
சேரேநீ கொடிவேலிப் பட்டைக் கியாழஞ்
செலுத்திடவே குன்மங்கள் சூலைவாய்வு
தேரேபோங் திரிகடுகு லேகியத்திற்
சேர்த்துண்ண வியாதிபோம் மதித்துப்பாரே. (24)

அருஞ்பதவுரை

எழுத்தாதியாந்தகட்டை யென்பது—அயத்தகடு, எழிலைந்து பூதத்தின் நடுவென்பது—பஞ்சபூதங்களுக்கு மத்தியமாகிய அக்கினி மீனூகூபி மைந்தனென்பது—வீரம், அதாவது சத்தி அல்லது பார்வதியின் புத்திரன் வீரபத்திரன்) என்ப.

செய்பாகம்

இரும்புத் தகட்டைக் கிண்ணம்போற் செய்து அதைப்பழுக்கக்காய்ச்சி அக்கிண்ணத்துள் வீரத்தைப்போட்டு மேற்சட்டி மூடி ஒருநாழிகை கழிந்தபின் சட்டியைத் திறந்து பார்க்கப் பதங்கமேறியிருக்கும். அப்பதங்கத்தை ஓர்குப்பியிலடைத்து மேற்கண்ட 24-வது பாட்டிற் கூறியபடி அனுப்பானங்களில் தேக பலத்துக்குத் தக்கவாறறிந்து சிரகத்தளவு கொடுக்கச் சகல வியாதிகளும் நீங்குமென்றறிக.

## கண்ணோய்க்கு மருந்து

மதிபிறந்த மொழிதனிலக் கினியைத்தள்ள
வசமான அண்டமா மதையவித்துக்
கதிபெறவே மஞ்சளுட கருவைநீக்கிக்
கற்கண்டை வெண்கருவிற் றூனுஞ்சேர்த்து
விதியுடனே குறடதனூற் றணலில்வாட்ட
வேண்டியநற் புனல்வரும்நீ யதையெடுத்து
அதிவிரைவாய்க் கண்ணிலிடக் கண்ணோய் தீரும்
அறிந்துகொள்வாய் கல்லாட மகிமைதானே. (25)

கொள்ளப்பா கண்ணதனி லாறுவேளை
கொண்டவுடன் மூன்றேநாள் தன்னிற்றீரும்
தள்ளப்பா உறுத்தலுடன் வீக்கம்போகும்
தாங்காத கண்சிவப்பு மாறிப்போகும்
விள்ளப்பா சதைபெருகி நீர்சொறிந்து
விதமுற்ற எரிச்சலொடு விஷங்கள்போகும்
கள்ளமில்லை கண்ணோய்கள் யாவுந்தீரும்
கல்லாடர் சொன்ன விந்நூல் பொய்யாகாதே. (26)

அரும்பதவுரை

மதியென்ற பதத்தில், தி என்ற எழுத்தைத்தள்ள ம, என்ற எழுத்துக்குச் சந்திரனெனப் பொருளாம். அச்சந்திரனுக்குத் தானம் ஆகாயமாதலால் அதற்கு அண்டமெனப் பெயராம். அண்டமென் பது-முட்டை என்ப.

சேய்பாகம்

அண்டமென்ற கோழிமுட்டையை அவித்து அதன் மஞ்சட் கருவை நீக்கி வெள்ளைக் கருவினுள் (அதாவது) முன் மஞ்சட் கரு விருந்த இடத்தில் வெள்ளைக் கற்கண்டைப் பொடிசெய்து வைத்து நூல்சுற்றி ஒரு இரும்புக் குறட்டினுல் அம்முட்டையைப் பிடித்துக் கொண்டு கரிநெருப்பில் இலேசாய் வாட்டச் செயநீர் வரும். அதை ஓர் சீசாவிலடைத்துச் சிறுதுளி கண்ணிலூற்றக் கண்ணிலுள்ள சகல நோய்களுந் தீரும்.

## வெட்டைக்கு நவநீதம்

ஆகுவா கனன்மெச்சுஞ் சாறெடுத்து
அவன்பிதா விடைதாரங் கிருதம்ரெட்டி
வாகுபெறு மலைபதார்த்த மொழியைச்சேர்க்க
வசமான கற்கண்டா மதனைச்சேர்த்துப்
பாகுபெற மத்திக்க வெண்ணெய்யாகும்
பாங்காகத் தானருந்த பிணிகள்யாவும்
ஏகுதற்கு நாளொன்றுக் கிருநேரம்நீ
எலுமிச்சங் காயளவு உருட்டிக்கொள்ளே. (27)

கொள்ளப்பா தேசிக்கா யளவுவீதங்
குணமுடனே மூன்றுநா ளாறுவேளை
விள்ளப்பா வெட்டையொடு மேகம்போகும்
மேலான கிரந்திசொறி சிறங்குபோகும்
கள்ளமுள்ள மூலச்சூ டதுவும்போகும்
கல்லாட மருந்ததனுற் கருமநோய்கள்
எள்ளளவு மிருக்காது ஓடிப்போகும்
ஏங்கியே பறந்தோடு மிசைந்துகாணே. (28)

அரும்பதவுரை

ஆருவாகனன் மெச்சுஞ் சாறென்பது—ஐங்கரன் மன மகிழும் வில்வ இலைச்சாறு. அவன் பிதாவிடையென்பது—சிவபெருமான் வாகனமாகிய ரிஷபம், தார மென்பது—அவ்விருஷ பத்தின் மனைவியாகிய பசு, கிருத மென்பது அப்பசு வினுடைய கிருதம், நெய், வாகு வெறுமலை யென்பது—வலிமையாகிய கல், பார்த்து என்பது—கண்டு, (கல்லைகண்டு) இரண்டையுஞ் சேர்க்கக் கற்கண்டாம் என்ப.

செய்பாகம்

வில்வச்சாறுபடி மாகாணி, பசுவின் நெய்படி அரைக்கால், கற்கண்டெடை சமன், இவைகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கல்வத்தி லிட்டு வெண்ணெய்போ லாகும்வரை அரைத்து எலுமிச்சங்கா யளவுவீதம் மூன்றுநா ளாறுவேளை சாப்பிட வெட்டை வெள்ளை முதலான ரோகங்களும் மேற்கண்ட 28-வது பாட்டிற் கூறிய நோய்கள் யாவும் நீங்கும். கரப்பான் பார்த்தங்களை நீக்கிப் பத்தியமா யிருக்க வேண்டுமென்றறிக.

## மார்க்கண்டன் நெய்

கரித்தோலும் நரித்தோலுங் கருவேல்தோலுங்
கலந்திடித்துத் தூளைவடி கட்டிக்கொண்டு
உரித்தான கதலிப்பழந் தன்னிற்சேர்த்து
ஒன்றாகப் பிசைந்துவைக்கச் செய்நீராகும்
வருத்தமிலா நல்லெண்ணெய் பசுவின்நெய்யும்
வாகான நெல்லிக்காய்ச் சாறும்வாங்கிப்
பொருத்தமாய் வகைக்குச்சேர் படிமுக்காலாய்ப்
புகழ்சட்டி யிட்டுநல்ல மருந்தைக்கேளே. (29)

நாட்டமுடன் தாளிசமே லங்கிராம்பு
நலமான சாதிக்கா யரத்தையோடு
தாட்டிகமாய் நிலப்பனையு மதுரமேழுந்
தான்வகைக்குப் பலமுக்கா லாகவாங்கி
மேட்டிமையில் லாததனைப் பசும்பால்தன்னில்
மேன்மைபெறத் தனித்தனியா யரைத்துநீயும்
பாட்டினுள்மேற் சொன்னநெய்சா றென்றாய்ச்சேர்த்துப்
பக்குவமாய்ச் சட்டியிட் டடுப்பிலேற்றே. (30)

ஏற்றியே தீயெரித்துப் பதமாய்க்காய்ச்சி
இதமாக நெய்யைவடித் தெடுத்துக்கொண்டு
போற்றியே நவநாளோர் கரண்டிவீதம்
புகட்டவே நீரிழிவு பிரமேகங்கள்
சாற்றியதோர் நவமூலங் கிராணிவெட்டை
தான்தீரும் புளிநீக்கித் தயவாயுண்ணக்
கூற்றுவனைச் செயித்தமார்க் கண்டன்நெய்யைக்
கூறினே னகிலமதிற் குறிப்பாய்த்தானே. (31)

அரும்பதவுரை

கரித்தோல் என்பது—அத்திப்பட்டை, நரித்தோ லென்பது—நவ்வற்பட்டை, கருவேல்தோல் என்பது—கருவேலம்பட்டை என்ப.

செய்பாகம்

அத்திப்பட்டை, நவ்வற்பட்டை, கருவேலம்பட்டை, இம் மூன்று பட்டைகளின், மேற்பரணை நீக்கி இடித்துத் தூள் வகைக்குப் பலங்கால், கனிந்த வாழைப்பழம் இருபத்தைந்து, அதன்தோல் போக்கி ஷை தூள் மூன்றையுஞ் சேர்த்துப் பிசைந்து பனியில் வைக்கச் செயநீராகும்.

அச்செயநீர் படி முக்கால், நல்லெண்ணெய், படிமுக்கால், பசுவிற் நெய் படிமுக்கால், நெல்லிக்காய்ச் சாறு படிமுக்கால், இவைகளை ஒன்றாக ஓர் சட்டியிலூற்றி தாளிசப் பத்திரி, ஏலம், கிராம்பு சாதிக்காய், அரத்தை, அதிமதுரம், நிலப்பனை, ஆகிய இச் சரக்குகள் ஏழும் வகைக்குப் பலம் முக்காலாக வாங்கித் தனித் தனியாய்ப்பசுவின் பால் விட்டரைத்து மேற்கண்ட சட்டியிற் கலக்கிப் பதமாய்க் காய்ச்சி வடித்து சிறுகரண்டி வீதம் ஒன்பதுநாள் கொடுக்க ஷை 31-வது பாட்டிற் கூறியபடி சகல வியாதிகளும் நீங்குமென்றறிக.

## கெற்ப முண்டார்க

அகிலமதி லாதுவா கனன்றன்மெச்சும்
அடைவான இலைசமூ லத்தைவாங்கி
மகிதலத்தி லேயுலர்த்தி யெடுத்துக்கொண்டு
வாசமுள்ள சீரகம்வெக் தயமுமேலஞ்

சுகிப்பதற்கு வங்கமுத லவ்வைச் சேர்த்துச்
சூரனெனும் மதுரம்வகை பலமேகாலாஞ்
சகியாமற் கிருட்டிணனைக் கோபிகைகள்
தான்கட்டி வைத்தஇடந் தன்னிற்போடே. (32)

எல்லாவற் றையும்போட்டுச் சூரணித்து
இயல்கான கக்குறத்தி யுடன்குழப்பி
உல்லாச மாகநெல்லிக் காயளவாய்
உண்மையுடன் ருனுருட்டி முருகன்வேளை
சல்லாப மாகநன்கு சாப்பிட் டாக்காற்
சரியான கெற்பமது தானுண்டாகுஞ்
சொல்லாதே இம்மருந்தை வெளியி டாதே
சுகமாகக் கல்லாடர் சொன்னவாரே. (33)

அரும்பதவுரை

ஆகுவாகனன் மெச்சும் அடைவான இலைசமூலம் என்பது—வில்வ இலை வேர்பட்டை, வங்கமுத லவ்வைச் சேர்த்து என்பது—(வங்கமென்ற பதத்திற்கு முன், ல, வைச் சேர்த்தால்) லவங்கம், (இலவங்கம்) என்ருகும். அதாவது கிராம்பு, சூரனெனு மதுரமென்பது. அதிமதுரம், கிருஷ்ணனைக் கோபிகைகள் கட்டி வைத்த இடம்—உரல், கானகக் குறத்தி யென்பது—கொம்புத் தேன், முருகன்வேளை என்பது—ஆறுவேளை என்ப.

செய்பாகம்

வில்வத்தின் சமூலம், சீரகம், வெந்தயம், ஏலம், இலவங்கம், அதிமதுரம், இவைகள் வகைக்குப் பலங்கால்வீதம் ஒன்ருய்ச்சேர்த்து உரலிலிட்டு இடித்துச் சூரணித்துத் தேனிற் கலந்து பிசைந்து நெல்லிக்காயளவு ஆறுவேளை புசிக்கும்படி செய்யக் கெற்ப முண்டாகுமென்றறிக.

## தாமிரக்குருச் செந்தூரம்

சுக்கிலஞ்சுக் கிரன்நாதஞ் சாரத்தோடு
சூதங்கற் பூரமனோ சிலையு மாகுந்
தக்கபுரு டோத்மனுட மலையாளொன்று
தான்சிவந்த மலரொன்று வுங்கமொன்று

மிக்கதொரு நோன்பென்ற பெண்தானென்று
மேதினியிற் கலைமகளின் நிறத்தி லொன்று
புக்குவநல் லயமுடனே காந்தம்வீரம்
பகர்ந்தசரக் கத்தனையுஞ் சுத்திசெய்யே. (34)

சுத்திசெய்த சரக்கதனைக் கல்வத்திட்டு
சுகதுக்க மிரண்டறியு மிலைச்சார்விட்டு
பத்தியாய் நாற்சாம மரைத்துவில்லை
பருதியினி லேவைத்து உலர்த்திப் பண்பாய்
சித்திபெறப் பாண்டமதிற் படிரெண்டுப்பைச்
சீராகப் பாத்திரத்தில் வில்லைவைத்து
முத்திபெற மேல்மூடிச் சீலைசெய்து
முடிவாக ரவிதனிலே காயவையே. (35)

காயவைத்த மருந்தையெடுத் தடுப்பிலேற்றிக்
கனலெரிப்பாய் ஒருசாதி விராகாற்றாலும்
நேயமுடன் நவசாமஞ் சென்றபின்பு
நீயுமதை யாற்றியபின் னெடுத்துப்பாரு
ஆயமுடன் செந்தூரம் முருக்கம் பூப்போல்
ஆகியதைச் சீரகத்தி னளவுகொள்ளு
தாயவளைத் தினம்போற்று அனுப்பானத்தைச்
சாற்றுகிறேன் செந்தூரஞ் சேர்க்கக்கேளே. (36)

அனுப்பானம்

செந்தூரந் தனையெடுத்து வாமிபூசை
செய்திடுவாய் வஸ்துசுத்தி வைத்துப்போற்றி
பந்தகமாய்ச் செந்தூரம் பதனஞ்செய்து
பாங்காகக் கொடுக்கிறதோர் பாகங்கேளு
அந்தமுள்ள கலவியினாற் றேகம்நொந்து
அதில்வந்த சுகசன்னி தோஷத்திற்குச்
சிந்தனைகள் வையாமற் செந்தூரத்தைச்
சீரகத்தி னளவெடுத்துக் கொள்வாய் நன்றே. (37)

நல்லதொரு இஞ்சிச்சாற் றைமுறித்து
நலமான தேன்விட்டுக் குழப்பிக்கொண்டு
வல்லபமாய்ச் செந்தூரங் கூடச்சேர்த்து
வகையுடனே தான்கொடுக்கச் சன்னிதோஷஞ்
சொல்லாம லோடிவிடு மின்னுங்கேளு
சூழ்வினையாள் நீரிழிவு தோன்றுமானல்
மெல்லவே அனுப்பான விபரந்தன்னை
மேதினியி லெவர்களுமே கழறுார்பாரே. (38)

காட்டில்வளர் ஆவரைப்பூக் கொழுந்துசேர்த்து
கணக்குடனே சீரகத்தைக் கலந்துஆட்டித்
தாட்டிகமாய் மெழுகுபதத் திருட்டிக்கொண்டு
தக்கதொரு செந்தூர மதனுள்வைத்து
மேட்டிமைகள் செய்யாமற் சாப்பிட்டாக்கால்
மேகவகை நீரிழிவு விலகிப்போகும்
பாட்டினுட பயனறிந்து மருந்துசெய்தாற்
பண்டிதனு மிவனென்று பகருவாரே. (39)

பகரக்கேள் வாயுவென்ற ரோகத்திற்குப்
பாங்கான சுக்கரைத்து மருந்தைவைத்துச்
சிகரத்தேன் கூட்டியுண்ண வாய்வெல்லாம்போஞ்
சேய்பாலிற் றுனருந்த வரட்சிதீரும்
பகலிரவாய் வந்தவலிக் குன்மந்தீர
பாரில்கொடி வேலிவேர்ப் பட்டைவாங்கி
மிகவுமதை யரைத்திருட்டி மருந்தைவைத்து
மேன்மைபெறக் கொண்டிடவே வியாதிபோமே. (40)

பூட்டப்பா ஈளைசய மெட்டுந்தீரப்
புகழான அனுப்பானம் புகழக்கேளு
கூட்டுதிரி கடுகுநெய் தேனைச்சேர்த்துக்
கூரியதோர் செந்தூரங் கூட்டியுண்ணப்
பூட்டகமாய்ச் சொல்லவில்லை வெளியாய்ச்சொன்னேன்
புகலக்கேள் முன்றுநா ளாறுவேளை
காட்டப்பா பசும்பால்நெய் சேர்த்துக்கொள்ளு
காராட்டு வற்றல்பாசிப் பயர்தானுமே. (41)

கரியைச்சேர் கருவாடு மச்சமாகா
கனிபயறு உழுந்துமொச்சை கலவியாக
முரிவாகும் பூசணிக்காய் சேர்க்கலாகா
முக்கியமாங் கரப்பான்பண் டங்களாக
சரியான நல்லெண்ணெய் கடுகுமாகா
தயிர்மோரு பழையசா தங்களாகா
அரிதான செந்தூரங் கொண்டபேர்க்கு
அந்தியத்திற் கபவாதை யணுகிடாதே. (42)

## அரும்பதவுரை

சுக்கிலமென்பது—இரசம், சுக்கிரனென்பது—வெள்ளி, நாதமென்பது—கெந்தி, சாரமென்பது—நவச்சாரம், சூதகக் கற்பூரமென்பது—இரசகற்பூரம், புருடோத்மன் மனையா ளென்பது—அரிதாரம், சிவந்தமல ரென்பது—தாமிரம், நோன்பென்ற பெண் என்பது—கௌரி, கலைமகளின்நிற மென்பது—வெள்ளைப் பாஷாணம் அயம் என்பது—இரும்புப்பொடி, சுகதுக்க மிரண்டறியு மிலைச்சாறென்பது—குப்பை மேனிச்சாறு, நவசாமம் என்பது—ஒன்பது சாமம் என்ப.

## செய்பாகம்

இரசம், வெள்ளி, நவச்சாரம், இரசகற்பூரம், மனோசிலை, அரிதாரம், தாமிரம், வெள்ளீயம், கௌரி, வெள்ளைப் பாஷாணம் இரும்புப்பொடி, காந்தம், வீரம், ஆகிய இந்தப்பதினொன்கு சரக்குகளையுஞ் சமனெடையாக வாங்கிச் சுத்தி செய்து குப்பை மேனிச்சாற்றினால் நான்கு சாமமரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஒரு சட்டியி லிரண்டுபடி உப்பைக் கொட்டி அதன் மேல் ஷை வில்லையைவைத்து உப்பால் மூடியபின் மேற்சட்டி கொண்டு மூடி சீலைமண்செய்து காயவைத்து அடுப்பேற்றி ஒருசாதிவிறகால் தீயை ஒன்பது சாமமெரித்து ஆறவிட்டுப் பிரித்துப் பார்க்கச் செந்தூரமாயிருக்கும். அதைமேற்கண்ட 37, 38, 39, 40, 41, 42-ப், பாட்டுகளிற் கூறிய அனுப்பானங்களில் வியாதி களுக்குத் தகுந்தபடி கவனித்துச் சீரகத்தளவு கொடுக்கச் சகல வியாதிகளுந் தீருமென்றறிக.

## மார்க்கண்டன் மெழுகு

ஆதியாஞ் சோதியுடன் சிவவிந்தாகும்
அடங்காத ருத்திரநட்சத் திரமுமாகும்
நீதியுடன் திரிவிடமன் னேர்பத்தாகும்
நின்மலமாந் தந்தியுட பருப்புபத்தாம்
பாதியாம் நாளரைநீ பசுவின்நெய்யிற்
பாரதனில் மிளகளவு தேனிற்கொள்ள
சாதியாஞ் சதையடப்பு நீரடைப்பு
சகலவித பித்தமெல்லாந் தணிந்துபோமே. (43)

அரும்பதவுரை

ஆதியாஞ்சோதி என்பது — லிங்கம், சிவவிந்தென்பது—இரசம், ருத்திரநட்சத்திர மென்பது—வீரம், பூரம், திரிவிடமென்பது—சுக்கு திப்பிலி மிளகு, தந்தியுட பருப்பு என்பது—நேர்வாளத்தின் பருப்பு, பாதியாம் நாளரை யென்பது—ஒருபகல் நாற்சாமம் என்ப.

செய்பாகம்

இலிங்கம், இரசம், வீரம், பூரம் வகைக்கு விராகனிடையும் சுக்கு, திப்பிலி, மிளகு, விராகனெடை பத்தும், நேர்வாளப் பருப்பு விராகனெடை பத்தும், வாங்கிச் சித்தி செய்து கல்வத்திலிட்டு பசுவின் நெய் விட்டரைத்து மிளகுப் பிரமாணந் தேனிற் கலந்துண்ண நீரடைப்பு, பித்தம், வாய்வு முதலான ரோகங்கள் யாவுந் தீருமென் றறிக.

## திரிமூர்த்தி மை

இனியரசம் பரைநாதந் நந்தியோடு
ஈசனுட முக்கண்ணி னேட்டைச்சுட்டுக்
கனிவாக எடுத்ததனை ஆறவைத்துக்
கானகத்தின் குறத்திவெல்லந் தன்னைவாங்கித்
தனித்தனியே மருந்துயுமன் கல்வஞ்சேர்த்துத்
தன்மையுடன் முக்கண்பால் தன்னைவிட்டுப்
புனிதமுடன் மைப்பதத்திற் றுனரைத்துப்
பூசைசெய்து சிமிழதனி லடைத்துவையே. (44)

வைத்தபின்பு பணவிடைதான் நாவிற்றேய்த்து
மகிழ்வுடனுள் ளேகொடுத்தாற் றீரும்நோய்கள்
ஈத்திவரும் புறதோஷம் வாததோஷம்
நலமில்லாப் பெண்தோஷஞ் சுரத்தின்தோஷஞ்
சத்திப்புச் சுரம்விக்கல் மேல்மூச்சோடு
சயமீளை மதிமயக்கம் நேத்திரதோஷஞ்
சித்தமுடன் சிலேத்துமத்தாற் கண்டதோஷம்
சில்விஷங்கள் வாட்டமுற்று ஒடுங்குமே. (45)

அரும்பதவுரை

பரைநாத மென்பது—கெந்தகம், தந்தி என்பது—நேர்வாளம், முக்கண்ணினோட்டை என்பது—தேங்காய்ஓடு, கானகத்தின் குறத்தி வெல்ல மென்பது—தேன் பனைவெல்லம், முக்கண்பா லென்பது—தேங்காய்ப்பால் என்ப.

செய்பாகம்

இரசம், கெந்தகம், சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு, தேங்கா யோட்டைச் சுட்டகரி இவை நான்கையுஞ் சமனெடையாய்ச் சேர்த்தும் தேன் பனைவெல்லம் மேற்கண்ட சரக்கினெடை சேர்த்தும் வைத்துக்கொண்டு தேங்காய்ப்பால் விட்டரைத்து மெழுகு பதத்தில் வழித்தெடுத்துப் பணவெடை கொடுக்க மேற்கண்ட 45-ம் பாட்டிற் கூறிய வியாதிகள் யாவும் நீங்குமென்றறிக.

# வெட்டை மேகத்திற்கு

வாதாடு காளியும்நே ராரைகண்ணி
மகிழ்சிற்று மணக்கெண்ணெய் பசுவின்பாலும்
மாதாவாஞ் செவ்விளநீர் தன்னைவாங்கி
வைத்தபின்பு கடுக்காய்த்தூ ளன்னமிட்டு
ஆதார மாகவதைப் பனியில்வைத்து
அதிலிறங்குஞ் செயநீரைப் பண்பாய்வாங்கி
மீதான சாரேழுஞ் சமனுய்க்கூட்டி
விராகனெடை பூரமொன்று தயவாய்ச்சேர்த்தே. (46)

சட்டியிட்டு அடுப்பேற்றிக் கனலைமூட்டி
தைலபதம் பார்த்திறக்கி வைத்துக்கொண்டு
திட்டமுடன் கரண்டிநிறைத் தைலந்தன்னை
சிறப்பாக உண்டுவரத் தீரும்நோய்கள்
பட்டமரம் போலாக்கும் வெட்டைமேகம்
பக்கவலி கக்கிருமற் பதறியோடுந்
தொட்டதொரு பத்தியந்தான் கரப்பான்பண்டஞ்
சுகபோகந் தனைநீக்கி வகையோடுண்ணே. (47)

அரும்பதவுரை

வாதாடு காளி என்பது—மணத்தக்காளி, ஆரையென்பது—வல்லாரை கண்ணியென்பது—பொன்னாங் கண்ணி, அன்னமென்பது—கற்றாழைச்சோறு என்ப.

செய்பாகம்

மணத் தக்காளிச்சாறு, பொன்னாங் கண்ணிச்சாறு, வல்லாரைச் சாறு, பசுவின்பால், செவ்விளநீர், சிற்றாமணக் கெண்ணெய் இவைகள் வகைக்குப்படி மாகாணியுங், கற்றாழைச் சோற்றிற் கடுக்காய்த் தூளைப் போட்டுப் பிசைந்து பனியில் வைத்தெடுத்த செயநீர்படி மாகாணியும், ஒன்றாய்க் கலந்து ஒருசட்டியிலூற்றி இரச கற்பூரம் ஒருவிராகனிடை பொடிபண்ணிப் போட்டுக் காய்ச்சி தயிலபதத் திலிறக்கிச் சிறுகரண்டி யளவுவீதம் மூன்றுநா ளாறுவேளை சாப்பிட்டு வர மேற்கண்ட 47-வது பாட்டிற் கூறியபடி வியாதிகள்யாவுந் தீருமென்றறிக.

## சொறிசிரங்கு

வையமளந் தோன்சயனம் வளர்சடையோன்
மகிழ்நாத விந்துவுடன் சமனாய்வாங்கி
பொய்தனைச்சொன் னோன்சாற்றிற் போட்டரைத்து
புன்மையில்லா தேவழித்து மெய்பிற்பூசிச்
செய்யகோ ரைக்கிழங்கை வெந்நீர்விட்டுச்
செம்மைபெறத் தானரைத்து ஸ்நானஞ்செய்தால்
ஐயமிலை சொறிசிரங்கு சொல்லாதோடும்
அழகான மேனிமிக மேலாம்பாரே. (48)

அரும்பதவுரை

வையமளர்ந்தோன் சயனமென்பது—நாகம், வளர்சடையோன் மகிழ்நாத விந்தென்பது—கெந்தகம், ரசம், பொய்தனைச் சொன்னான் சாறென்பது—தாழையின் சாறு.

செய்பாகம்

நாகத்தையும், ரசத்தையுமொன்றாய்ச் சேர்த்துருக்கி எடுத்துக் கொண்டு கெந்தகத்தைச் சேர்த்துக் கல்வத்திட்டுத் தாழைச்சாற்றை விட்டரைத்துத் தேகமுழுவதும் பூசிச் சிறிதுநாழிகை சென்றபின்பு கோரைக்கிழங்கை வெந்நீர் விட்டரைத்துத் தேகத்திற்றேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்ய சொறி, சிரங்கு முதலியவைகள் தீரும்.

## குருப்பட்டுக் கருப்பு

மேலான நோன்புடன்மால் தேவிஒன்றும்
மீனாகூடி மைந்தனையவ் வெடையேசேர்த்து
சீலமுடன் தனுசுநட்சத் திரமுங்கூட்டிச்
சிறப்பான எண்பதொடு தாயைச்சேர்த்து
பாலான கலைமகளின் நினமும்விந்து
பகர்நாத மாண்குறியும் பண்பாய் வாங்கிக்
கோலமுட னிவையாவுஞ் சமனாய்ச்சேர்த்துக்
கூறக்கேள் சுத்திசெய்து எடுத்துக்கொள்ளே. (49)

குணமான மருந்துதனை யரைக்கக்கேளு
குறிப்பாகப் பூனைதொழுஞ் சாற்றினாலும்
மணமான வேர்தனுட சாற்றினாலும்
மால்சிவந்த மலர்ப்பருத்திச் சாற்றினாலும்
கணமான உத்தமதா ளிச்சாற்றாலுங்
கவனமுடன் அரைவகைக்குச் சாமம்மூன்று
உணர்த்தபின்பு அரசனிலை யிருபதுக்குள்
உகந்தரைத்த வில்லைதனை வைத்துமூடே. (50)

மூடியதைப் பட்டுநூல் தன்னாற்சுற்றி
முக்கியமாய்ச் சீலைமண் ணேழுஞ்செய்து
நாடியேநீ இருசாம மெரித்துப்பின்னும்
நன்றாக ஆறவைத்தம் மருந்தெடுத்துத்

தேடிடவே சிப்பியின்நீர் சாமம்ரெண்டு
திறமாக அரைத்துவில்லை காயவைத்துச்
சூடியென்ற சீலைசெய்து குக்குடத்திற்
சுகமாகப் புடத்தினில்வைத் தெடுத்துக்கொள்ளே. (51)

எடுத்திடுவாய் குருப்பட்டுக் கருப்புதன்னை
இதன்பேரைக் கேட்டபிணி யாவுமோடும்
விடுத்தமுறை பொய்யிலையிம் மருந்தைநீயும்
வெந்தயத்தி னளவெடைதா னெடுத்துக்கொண்டு
தொடுத்ததொரு முறைக்காய்ச்சல் சன்னிதோஷந்
துடைவாளை ரணங்கிரந்தி சொறியாந்தேமல்
அடுத்தமுறை இவைக்கெல்லாம் நெய்தேன்கூட்டி
அருந்திடுவாய் பத்தியங்கேள் புளியாகாதே. (52)

ஆகாது பத்தியமா யிருந்தநாளும்
அன்புபெறக் கார்த்தோர்க்கு ரோகம்போகும்
பாகாக உலகோர்க்கு வைத்தியகாண்டம்
பகர்ந்தவிதன் மறைப்புதனைக் கண்டோரெல்லாஞ்
சாகாமல் வெகுகால மிருக்கலாகுஞ்
சகலசித்துக் கண்டறிந்தோன் சித்தனவான்
வாகான வேதைகளைச் செய்வோற்குற்ற
வகாரகாண் டம்பெரிதாய் வகுத்திட்டேனே. (53)

அரும்பதவுரை

மேலான நோன்பு என்பது—கௌரி, மால்தேவி யென்பது—தாளகம், மீனகூடிமைந்தன் என்பது—வீரம், தனுசு யென்பது—மனோசிலை, நட்சத்திரம் என்பது—பூரம், எண்ப தென்பது—அயம் அதாவது இரும்பு, தாயென்பது—காந்தம், கலைமகளின்நிற மென்பது வெள்ளைப் பாஷாணம், விந்தென்பது—இரசம், நாத மென்பது—கெந்தி, ஆண்குறி என்பது—இலிங்கம், பூனைதொழுஞ் சாறென்பது குப்பைமேனிச் சாறு, சிவந்த மலர்ப் பருத்திச்சாறு யென்பது—செம்பருத்திச் சாறு, உத்தமதாளிச்சாறு என்பது—வேலிப்பருத்திச் சாறு என்ப.

செய்பாகம்

கௌரி, தாளகம், வீரம், மனோசிலை, பூரம், அயம், காந்தம், வெள்ளைப் பாஷாணம், இரசம், கெந்தி, இலிங்கம், ஆகிய இந்தப் பதினொன்று சரக்குகளையுஞ் சுத்திசெய்து கல்வத்திலிட்டுக் குப்பை மேனிச் சாறு, வெற்றிலைச் சாறு, செம்பருத்திச் சாறு, வேலிப் பருத்திச் சாறு, இந்தநான்கு சாற்றிலும் வகை 1-க்கு மூன்றுசாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து இருபது பூவரச யிலையில வைத்து மூடிப் பட்டுநூலைக் கனமாய்ச்சுற்றி ஏழு சீலைசெய்து ஒருபட்டியினுள் வைத்து அடுப்பேற்றித் தீயெரிக்கக் கரிபோலக் காணும் உடனே அதை யெடுத்து மறுபடியுஞ் சிப்பிநீரால் நான்கு சாமமரைத்து வில்லைதட்டிக் காயவைத்துச் சீலைமண் செய்து உலர்ந்த பின்பு குக்குடப் புடமிட நீறும் அந்நீற்றை எடுத்து வெந்தயத்தி னளவு முற்கூறிய அனுப்பானங்களி லிட்டுப் புசிக்க மேற்கண்ட 52-வது பாட்டிற் சொல்லிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகு மென்றறிக.

## வைத்தியக் கல்லாடம்.

*வைத்தியக் காண்டம்.

முற்றிற்று.

---

*இந்த வைத்திய காண்டத்திற்கு மட்டும் ஒரு ஏட்டுப்பிரதியில் உரையெழுதி யிருந்தது. அதன்படி அச்சிட்டிருக்கிறேன்.

இப்படிக்கு,

**இ. ராம. குருசாமிக் கோன்,**

புத்தக்ஷாப், புதுமண்டபம், மதுரை

உ

பாமபதி துணை.

# வகாரகாண்டம்.

பெரிதான வாதத்தின் காண்டந்தன்னைப்
பிரியமுடன் சொல்லுகிறே னதனைநன்கு
சரியாகத் தான்பார்த்துக் கருத்துட்கொண்டு
சற்குருவைத் தானடைந்து வகையாய்க்கேட்டு
குறியான ஆறுதா ரத்தைக்கண்டு
குணமிகுத்த சுழிமுனையின் றிறப்பறிந்து
நெறியான நாதவிந்தை வாங்கியிந்த
நீநிலத்திற் றனியிடங்கண் டிருந்திடாயே. (1)

இடத்திருந்து வாதமதைச் செய்யாமற்றான்
எங்கியலேத் தேதிரிந்தால் வருமோ வாதம்
உடைத்தல்லோ சொல்லுகிறேன் கருமானத்தை
ஊ, ஆ, ஓ எனுமெழுத்து கெங்கையாச்சு
சடைத்துநீ மலையாதே அதுதான்நாதந்
தனைவாங்கிச் சவுக்கார வழலைதோய்த்துப்
புடத்திவிட் டெரித்தவுடன் சுண்ணமாகும்
பொன்னுகும் மாற்றேறும் பொருந்திப்பாரே. (2)

வேறு

சுடுவாதி சூதமொடு சுக்கிரனி வீட்டெடைசேர் தொன்மையாக
நடுவாதி யாட்டிவில்லை நாடியிடு வன்னிதனில் நலமாஞ் சுண்ணங்
கொடுவாதி வெள்ளியம் நூற்றுக்கு ஒன்றிடவே குணமாம்வெள்ளி
படுபாதி வேலைசெய்து அறியாது விடுதல்பரி காசந்தானே. (3)

பட்டஅயம் அரிதாரம் பரிவான நீலனெடை பாதிசேர்த்து
முட்டவரை காய்ந்தவில்லை சட்டியிட்டு எடுத்தாறி முன்போலாகத்
திட்டமுடன் பூரமிட்டு அரைத்துவில்லை உலர்த்திபுடஞ் சிறிதாயிட்டு
இட்டமுடன் காரமிட்டு வெள்ளியேழ்சேர்த்துருக்கஎட்டுமாற்றே. (4)

### வேறு

பெண்ணடி யாதிமூலம் பேசுவார் பெரியோர் ஞாலங்
கண்ணடி யிந்தநீரைக் கலந்தறி யாதவா தி
விண்ணடி யிட்டபோது வேறொரு செயநீ ருண்டோ
மண்ணடி விட்டபோதே வாயடி ஊமையாமே (5)

### வேறு

விரும்பு நாத குருத்தயி லந்தன்னை
அரும்பு போலெடுத் தானதைப் பின்புநீ
இரும்பு செம்பி விசைத்திட் டுருக்கினாற்
பரும்பொன் னாணிக்கும் பத்தரை யாகுமே. (6)

துத்த நாகர் துகளற அற்றபின்
அத்த நாகத்தி னவ்வெடை சூதமும்
மத்தன் சாறுடன் மான்செவிக் கள்ளியுஞ்
சித்த ரூபியுஞ் சேர்த்தரை சேலையே. (7)

சத்த சேலையுந் தானது செய்துநீ
சுத்தமாகச் சுடுரவி காய்ந்தபின்
பத்தமாகப் பதினோர் புடமிட
ஒத்த ஆணிக்§குரை செய்ய லாகுமே. (8)

உப்பும் புளியு முடன்கார சாரமும்
தப்பில்லாச் சூடனுந் தனிநீல கண்டரும்
*ஒப்ப வரைத்து உருட்டி எரித்தபின்
அப்பினுள் வேதையு மாகு மறிந்திடே. (9)

### வெண்பா

மக்ராணி நான்கும் வழுத்துமிசை யுஞ்சேர்க்க
பாகா வராகம் பலிக்குமே—தேகவிட்டைக்
காமலத்தி லொன்றுதள்ளிக் கண்டான் குறிவைத்து
நேமபுடம் போடுகட்டும் நேர். (10)

செம்பதனிற் சுக்கிரனைச் சேர்த்துருக்கி நாதமுடன்
தம்பமிலா வீரந் தனைச்சேரென்—றம்புவியில்
முன்னோர்கள் சொன்ன முறையீதா மெல்லோர்க்குஞ்
சொன்னோம் வழியாய்த் துறை. (11)

---

§ உறை என்றும் பாடம்.

* ஒப்ப வரைக்க வுடன்குரு வாதமாம், அப்பினுள்வேதை
யனந்தமென் றறிந்திடே என்றும் பாடம்.

தாமிரத்தைச் சுட்டுத் தவள நிறமாக்கி
நீமநிம்பச் சாற்றில் நிறைத்தாட்டி—நேமமுடன்
வெள்ளையிட்டு வீரமிட்டு வீரமெடை சூதமிட்டுக்
கொள்ளையிடச் சொன்னார் குரு. (12)

வெள்ளைமுருங்கை விரைத்தயிலந் தன்னாலே
வள்ளலெனும் வீரத்தை மாட்டியரை—கொள்ளிவைக்குஞ்
பிள்ளைக்குஞ் சொல்லாதே பேராம் ரவிதகட்டிற்
தள்ளிவிடும் வெள்ளித் தொழில். (13)

ஆமே குருத்தயிலம் ஆண்குறியிற் றூக்கத்
தாமே மெழுகாந் தனிரவியிற்—சேமமுறத்
தாக்கி யுருக்கிவிடத் தக்கதொரு மாற்றேழு
பாக்கியமாம் பொன்னாகும் பார். (14)

நவிலவருங் காந்தகிரி நற்கிரியோ டிந்தப்
புவியதனிற் பொன்கிரியைப் பூட்டக்—கவியிலுரை
காட்டிவிட்டே னிப்பாலிற் கார்க்கடல்நீர் சேர்க்கைவிட்டாற்
கூட்டுமச் சானுறவாங் கூறு. (15)

நாதவிந்தை யின்னதென நன்குற் றுணரார்க்கு
வாதவித்தை லேசாக வந்திடுமோ—பேதமறக்
கற்றோர்க ளேமமதைக் கண்டுதெரிவா ரவரைப்
*பெற்றோர்க்குத் தோன்றுதிப் பேர். (16)

பேரா முவர்ப்பூவும் பேசுகடல் நீர்ப்பூவுஞ்
சீராக வேசேர்த்துச் சீக்கிரமாய்—நேரார்
பருதிதனிற் காயவைத்துப் பண்பனிநீர் கூட்ட
உருமுப்பூ வாகுமென வோது. (17)

ஓதரிய மாசி உயர்பூ ரணைநாளிற்
பேதமிலா வாசிதனைப் பேணுதலாஞ்—சாதனையோ
டேற்றிச் சுழிமுனையி லின்பமுறும் நாதவிந்தைப்
போற்றியுடன் வாங்குபசும் பொன். (18)

* பெற்றோர்க்குத் தோன்றுதிப்பேர் என்றும் பாடம்.

வாங்குசுத்த கெங்கையுப்பை வாகாக வேகரைத்து
நீங்கவதன் சத்தெடுத்து நீள்ரவியிற்—பாங்காய்
உலர்த்திப் பசளைநீ ரோர்புடத்தி விட்டால்
மலர்ப்பசும்பொன் ஞாகு மகிழ். (19)

ஆகும் ரவிநான்கி லானகுரு வொன்றீய
ஆகும் வயதுபத்து அக்கணமே—வேகும்
புடத்திற்கு நிற்கும் புகழ்மாற் றதிகஞ்
சடத்திருந்த நாதமதின் சார்பு. (20)

சார்பாஞ் செயநீரிற் றூயெனுமால் தேவிதனைச்
சார்பாகத் தோய்த்துச் சரிவழலை—சார்பென்ற
உப்பை ரவியிலிட்டு ஒங்குபுடம் போட்டெடுக்கத்
தப்பில்லா தேமமாஞ் சாற்று. (21)

சாற்றிடுகல் லூசாத்தின் றன்மைதனை யுற்றுணரா
தேற்றிடவெங் கெங்குமன மேங்கியலைக்—தாற்றலொடு
பச்சிலையா மூலிகையிற் பண்ணுதலே வாதமென
இச்சையுறக் கூறுவது மேன். (22)

கூறும்நா தாந்தக் குருத்தைல நாதமதை
வீறுடன் செம்பதன் மேலிட்டுத்—தேறுதலாய்ப்
பூப்புடத்தி லிட்டாற் புகழ்களிம்பு நீங்கிநிலைச்
*சேப்பசும்பொன் போலாகுந் தேர். (23)

தேர்ந்த ரவித்தகட்டிற் செம்மையுரோ மத்தயிலம்
ஆர்ந்த சுருக்கிட்டன் பாகவுடன்—சார்ந்தநல்ல
வீர மரைசேர்த்து வீரடங்கக் குக்குடத்திற்
சாரமுள்ள பொன்னாகுந் தான். (24)

பொன்னாத விந்ததனாற் போர்ந்தநல்ல வேகதைமிகும்
அன்னியவேர்ப் பச்சிலையா லாகாது—நன்னயஞ்சேர்
ஊசரத்தின் நீர்பிரித்து ஒங்கியதிட் சைமுடிக்க
வாசமுப்பூ வாகுமென வாழ்த்து. (25)

* சேப்பு—சிவப்பு.

முப்பூவா லென்றும் முடியும் ரசவாதம்
அப்புவுப்பு மொன்றென் றறிவாய்நீ—இப்பூவைக்
கண்டு வழியறிந்தோர் காண்பார்க ளேமமதை
விண்டுசொல்லா ரன்னவரை வேண்டு. (26)

வேண்டுந் தருக்கமிட்டு வெகுலேசாய் வாதமதை
ஈண்டுசெய்வோ மென்ன இயம்புவோர்—ஆண்டு
முடிந்தாலுங் காணார் முறையறியார் சுட்டு
மடிந்தாலுங் காணார் வழி. (27)

காணார்கள் வாதமெனக் காசினியோர் கூறுகின்ற
வீணான வார்த்தையிது மெய்யாமோ—காணாது
வாய்மதத்தா லேசிரச வாதமில்லை யென்பாரைத்
*தாய்தெரியா மூடரெனச் சாற்று. (28)

சாற்றுகின்ற ஏமமதைத் தானுணர்ந்து செய்தாக்கால்
ஏற்ற ரசவாத மெய்துமே—போற்றுந்
தனிமாற் றதிகமிகுந் தாரணியோர் வாழ்கக்
கனிவாகச் சொன்னதிது காண். (29)

கல்லாடப் பாட்டின் கருத்தை யறிந்தாக்கால்
எல்லார்க்கு வாத மெளிதாகும்—நல்ல
மோன விபர முழுதுந் தெரிவதற்கு
ஞானகாண் டத்தையினி நாடு. (30)

வகாரகாண்டம்.

முற்றிற்று.

---

* தாய்—தங்கம்.

உ

பரமபதி துணை.

# ஞானகாண்டம்.

மூலமுத லாதார முக்கோணச் சக்கரத்துள்
ஞாலமென வந்துதித்த நற்பரமாஞ்—சீலமிகும்
கோலமத யானைமகிழ் குண்டலியின் வட்டமுறை
நீலமணி யாள்பரமே நேர். (1)

நேரான பூரணமாம் நின்றநிலை யோகவெளிப்
பேரான நாதவொலி பேசுமே—சீரான
காரணமாய் அம்பரத்திற் கண்ணொளியாம் விண்ணொளியிற்
சீரணமாஞ் சூட்சநிலை செப்பு. (2)

செப்புங் கலைமதியார் சேர்ந்தமணி பூரகத்தில்
ஒப்புநிலை வங்கென்று ஓதுங்கள்—தப்பில்லை
அப்ப விருந்தபதி யாருமறி யார்வழியை
இப்புவியிற் காண்பா ரியம்பு. (3)

இயல்பாங் கதிர்முடிமே லேறிவிளை யாடும்
*வயலே திருவிளங்கும் வாழ்வே—கயிலை
உயர்நாத விந்துமுடி ஓங்கார உச்சி
நயமே சிவாயமணி நாதம். (4)

மாமணிசி வாயநம மால்வாசி வீடதனில்
ஆமணுவ கண்டமதி சூரியனாய்—நேமக்
கனியைந் தெழுத்தாய்க் கடந்தசுழி மேலாய்த்
தனியிருந்த நன்மலையின் சார்பு. (5)

தானான ஞானவொளி தாண்டிநின்ற தோர்மகிமை
மானார்கள் நன்கறிய வாய்க்குமோ—மேனோக்கம்
பூணாச் சலமதியாற் பூட்டாமல் யோகநிலை
வீணாய்த் திரிந்தலைவர் வீண். (6)

* வயல்—வெளி.

விண்ணரியார் சூட்சவெளியொளியை நாடிமனக்
கண்ணரியார் ஞானங் கடந்தசுழி—தன்னையினி
உண்ணவறி யாரமுதம் ஓமென் றுகாரமதிற்
றிண்ணமெய்ஞ்ஞா னந்திகட்டா தே. (7)

திகட்டா தமுதந் திகழ்நாவில் நின்று
புகட்டு மிருவினையும் போக்கும்—அகற்று
*பகட்டளவாய் நிற்கும் பாருபிர பஞ்சம்
முகட்டருளைக் காணுநிலை முத்தி. (8)

முத்திநிலைச் சூட்சவெளி மூடர்களுக் கெட்டாது
பத்தியுடன் அஞ்செழுத்தாற் பார்த்திடவே—கத்தனருள்
எத்திசையுங் காணு மினிய நிரஞ்சனமாஞ்
சத்திசிவங் காணுமணஞ் சார்ந்து. (9)

காணார்கள் கண்டுவிட்டாற் கற்பூர தீபவொளி
தோணுமலேகெட்டாற் றொல்லுலகிற்—காணாமல்
மாணவகேள் முத்திநிலை மாதவநஞ் சுண்டவனை
வேணுமென நீவிரும்பு வேண்டி. (10)

உச்சி நடுவதனி லோரா யிரமிதழிற்
சொச்சமற நின்றிலங்குஞ் சோதிதனை—இச்சையுடன்
பார்த்திருக்தோர் தூங்கார் பசிக்கெட்டாப் பாவிகள் வீண்
சாத்திரங்க ளோதுவார் தான். (11)

ஞானகாண்டம்.

முற்றிற்று.

---

இக்கல்லாடநூல் ஓலை எட்டுச் சுவடியி லிருந்தவரை அச்சிட்டிருக்கிறேன், இதிற்கண்ட பாட்டுகளைத்தவிர இன்னும் வேறு அதிகப்பாட்டுக ளடங்கிய ஓலைச்சுவடிகள் வைத்திருப்பவர்கள் என்னிடம் அனுப்பினால் சேர்த்து அச்சிட்டு அனுப்பலாகும்.

இராம. குருசாமிக் கோன்,
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

---

* பகட்டு—தந்திரம் அல்லது மயக்கு.

உ

பரமபதி துணை.

# இராமதேவ ரென்ற
## யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
# வைத்திய சிந்தாமணி 700-க்குப்
## பரியாஷை
### அ ரு ம் ப த வு ரை.

## முதலாவது சாஸ்திரம்.

1—வது பாட்டு பூரணி என்பது-தேவி.

13-வது பாட்டு வன்னிகற்ப மென்பது-உலாந்தா லிங்கம்.

18-வது பாட்டு தேவேந்திரன் மரபு என்பது-தேவர்கள்.

19-வது பாட்டு எகுவுஎன்பது-உருக்கு, முள்ளிலைச் சாறென்பது— எட்டிச்சாறு.

21-வது பாட்டு கெந்தி என்பதி-கெந்தகம், ரவியென்பது-சூரியன் மேனிச்சாறு என்பது-குப்பைமேனிச் சாறு.

22-வது பாட்டு முக்கடுகு யென்பது-சுக்கு, மிளகு, திப்பிலி.

23-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, ரவி— என்பது-சூரியன்.

24-வது பாட்டு வர்ணகெந்தி என்பது-கெந்தகம், வனத்து எரு என்பது—காட்டெரு.

25-வது பாட்டு வீரமென்பது-சவ்வீரம், கெந்தி என்பது-கெந்தகம், வன்னியென்பது-வன்னியிலை, குமரிச்சாறு என்பது— சோற்றுக் கற்றாழைச்சாறு.

27-வது பாட்டு காந்தத்தாலெடுத்த அயப்பொடி யென்பது-அரப்பொடி ராவியிருப்பதைக் காந்தத்தாலெடுப்பது, நிம்பக்கனி என்பது-எலுமிச்சங்கனி.

அயமுங் காந்தமுஞ் சேர்ந்த சத்துவை எலுமிச்சங் கனிக்குள் வைத்துப் பனியில்வைத்தெடுத்துத் தோலையும் அபச்சத்தையும் நீக்கி எலுமிச்சம் பழத்தை மட்டும் சாப்பிடவும்.

30-வது பாட்டு கெந்தி என்பது-கெந்தகம்.

32-வது பாட்டு அருக்கன்பா லென்பது—எருக்கன்பால்.

33-வது பாட்டு பெட்டிவெல்ல மென்பது-பனங்கருப்பட்டி.

34-வது பாட்டு பொட்டலை என்பது-வெடியுப்பு, பொற்றலைச் சாறென்பது-கரிப்பான் சாறு.

36-வது பாட்டு கல்லுப்பு என்பது திருப்புல்லாணியுப்பு, சோர னென்பது-வெடியுப்பு, நீலகண்டனிலை யென்பது-வெற்றிலை.

38-வது பாட்டு ஆகுவாகனன் மெச்சுஞ்சாறென்பது-கையாஞ்சாறு.

39-வது பாட்டு ஐவிரலிவித் தென்பது-ஐவிரலிவிரை, சிறுநாகவிரை என்பது-சிறுநாகப் பூவிரை, அருக்கன் வேர்ப்பட்டை என்பது-எருக்கன் பட்டை.

40-வது பாட்டு கல்லுப் பென்பது-சஞ்சியுப்பு, புண்ணுக் கென்பது-அரப்பு.

41-வது பாட்டு கரியபிள்ளை யாட்டமுரி யென்பது-வெள்ளாட்டு அமுரி

44-வது பாட்டு சேரானின் பாலென்பது-சேங்கொட்டைப் பால்.

45-வது பாட்டு புண்டரீகக் கொழுப்பென்பது-வெள்ளாட்டுக் கொழுப்பு அல்லது பெருச்சாளிக் கொழுப்பு.

46-வது பாட்டு சோரனின் கொட்டை யென்பது-சேங்கொட்டை தாரெள்ளு என்பது-எள்ளு, திரிகடுகு என்பது-சுக்கு, திப்பிலி, மிளகு, நெல்லிமுள்ளி என்பது-நெல்லி வற்றல்.

48-வது பாட்டு நாறும்பூ என்பது-கெந்தகம், விளங்க மென்பது-வாய்விளங்கம், திரிகடுகு என்பது-சுக்கு, திப்பிலி, மிளகு,

51-வது பாட்டு பொட்டிலுப்பு என்பது-வெடியுப்பு,

52-வது பாட்டு படைராஜனுப்பு என்பது-வெடியுப்பு

53-வது பாட்டு காரிரெட்டி என்பது-காரீயம்.

54-வது பாட்டு ரவியென்பது-செம்பு.

55-வது பாட்டு சோரனது என்பது-நாகம், பொட்டலை என்பது-வெடியுப்பு.

56-வது பாட்டு சாரமென்பது-நமச்சாரம், ஏமமென்பது—தங்கம், ரவி யென்பது-செம்பு.

57-வது பாட்டு பொட்டலை யென்பது-வெடியுப்பு, நீலமென்பது-துருசு.

59-வது பாட்டு திலமென்பது-எள்ளு, செல்லாத யிடங்கள் என்பது-பெண்கள் சாவகாசம்.

60-வது பாட்டு பூனைவணங்கியிலை என்பது-குப்பைமேனி இலை, பானு வென்பது-சூரியன்.

61-வது பாட்டு விந்து என்பது—விரை- கதலிப்பழ மென்பது-வாழைப்பழம்.

62-வது பாட்டு தெருக்கிலை யென்பது-எருக்கிலை, ரவியென்பது-சூரியன்.

63 வது பாட்டு சத்திநாதமென்பது-கெந்தகம், வீரிப்பா லென்பது-எருக்கன்பால்.

64-வது பாட்டு பெருவாயன் என்பது—கழுதை.

65-வது பாட்டு காட்டினுட ஆமணக்கென்பது-காட்டாமணக்கு, வச்சிரப்பா லென்பது சதுரக்கள்ளிப்பால்.

66-வது பாட்டு பெருவாய் நீரென்பது-கழுதை யமுரி

68-வது பாட்டு நாலிக்க மென்பது திராபித்தலை, நாறும்பூவென்பது-கெந்தகம், பப்பாளி யென்பது-பப்பாளிப்பழம்.

69-பாட்டு பெரியோர்களுண்ணுங் கற்பமென்பது-கஞ்சா.

71-வது பாட்டு கன்னிகை யென்பது-கற்றாழை, வன்னிகற்ப மென்பது-லிங்கரசம், வாழ்மடந்தை யென்பது-அரிதாரம், ரவியென்பது-செய்பு, ஏமமென்பது தங்கம்.

72-வது பாட்டு பாரை உப்பென்பது-திருப்புல்லாணி சமுத்திரத் தண்ணீர்க்குள் எடுக்கிற உப்பு, பண்ணை யென்பது-வெடியுப்பு, பழச்சாறு என்பது—எலுமிச்சம் பழச்சாறு, மேற்படி என்பது—முன் சொன்ன மூன்றும், மேனியிலை யென்பது—குப்பைமேனி யிலை, இங்கியென்பது—மேலே போடுதல்.

73-வது பாட்டில் வெண்மெழுகென்பது—தேன் மெழுகு, கல்லுப்பு என்பது-கஞ்சியுப்பு.

75-வது பாட்டு சந்தனமென்பது-சந்தனக்கட்டை, கந்தர்ப்பச்சைக் கற்பூரமென்பது-பச்சைக்கற்பூரம்.

77-வது பாட்டு சடத்தினுட அமுரியென்பது-சிறுநீர், பூநீரை எண்ணெய் வாங்குமென்பது-முப்பு முடிப்பதற்காக எடுக்கக் கூடிய உவருப்பில் எண்ணெய்ச் சத்தை வாங்குவது.

78-வது பாட்டு காவட்டப்புல் கதிரென்பது-மலைத்தாகம், புல்லின் கதிர் அதாவது வாசனைப்புல்.

79-வது பாட்டு பொட்டலை என்பது-வெடியுப்பு, திரிநாளென் பது-மூன்று நாள்.

80-வது பாட்டு கன் மிளகு என்பது-மிளகு, முந்நீர் யென்பது-முன் சொன்ன ஓமத்திராவகம்.

82-வது பாட்டு உள்ளி யென்பது-வெள்ளைப் பூண்டு, முக் கண்ண னென்பது-தேங்காய்.

83-வது பாட்டு கருப்பட்டி யென்பது-பனை வெல்லம், பாணி யென் பது-தண்ணீர்.

84-வது பாட்டு திரிகடுகென்பது-சுக்கு, திப்பிலி, மிளகு, பாணி யென்பது-தண்ணீர், திரிநாளென்பது-மூன்றுநாள்.

86-வது பாட்டு திரிபலை யென்பது-கடுக்காய், தான்றிக்காய்-நெல்லிக்காய்.

87-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, திரிநாளென்பது-மூன்றுநாள்

88-வது பாட்டு சூதமென்பது-ரசம், படையோ னென்பது-வெடியுப்பு, காரமென்பது-சீனக்காரம்.

89-வது பாட்டு படைராஜ னென்பது-வெடியுப்பு, வளைய மென் பது-சீனக்காரம், ரவி என்பது-சூரியன்.

90-வது பாட்டு ரவி யென்பது-சூரியன், நசையென்பது-வியாதி.

93-வது பாட்டு அப்பென்பது-தண்ணீர்.

94-வது பாட்டு வாணவுப்பென்பது-வெடியுப்பு, பாணி என்பது-தண்ணீர், பருத்திப் பச்சையென்பது- கதிர்ப்பச்சை, காரவுப் பென்பது-மேலேசொன்ன இரண்டுப்பு.

95-வது பாட்டு முன்சாறென்பது-உதியஞ்சாறு, குளத்து முட்டையென்பது-காட்டெரு.

97-வது பாட்டு பாதிரிவேர் என்பது-பாதிரி மரத்தின்வேர்.

98-வது பாட்டு மதுவென்பது பனங்கள்ளு

100-வது பாட்டு பச்சையரு நெல்லியென்பது-நெல்லிக்காய், தான்றியென்பது—தான்றிக்காய், திரிநாளென்பது—மூன்று நாள், திரிகடுகு என்பது சுக்கு, திப்பிலி, மிளகு,

101-வது பாட்டு நாரும்பூ என்பது—கெந்தகம், சூதமென்பது, ரசம்.

102-வது பாட்டு முக்கடுகு என்பது-சுக்சு, திப்பிலி மிளகு.

104-வது பாட்டு வட்டத்திருப்பி என்பது-வட்டத் துத்தி, திரிகடுகென்பது-சுக்கு திப்பிலி மிளகு, சங்கிலேத்தோல் என்பது-சங்கவேர்த்தோல், விடைய மென்பது-அதிவிடையம், மணியபினி என்பது-சுத்தமான அபின்,

107-வது பாட்டு குமரிச்சாறென்பது-சோற்றுக் கற்றாழைச் சாறு சம்பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு.

109-வது பாட்டு வடமென்பது-வெடியுப்பு, வளையமது என்பது-சீனக்காரம்.

112-வது பாட்டு சத்தியென்பது-கெந்தகம், நிம்பக்கனி யென்பது-எலுமிச்சம்பழம், கண்டர் செம்பு என்பது—துருசுச்செம்பு வண்டில் என்பது-வெங்காரம்.

113-வது பாட்டு சுடரென்பது-சூடன், மதி யென்பது-வெள்ளி.

115-வது பாட்டு சத்தியென்பது—கெந்தகம், முன்னீரென்பது—வெடியுப்புத் திராவகம், சுடர் என்பது-சூடன்.

116-வது பாட்டு மதியென்பது-வெள்ளி, ஏமமென்பது-தங்கம்,

117-வது பாட்டு பழச்சாறென்பது-எலுமிச்சம் பழச்சாறு.

118-வது பாட்டு காடியென்பது—புளித்த தண்ணீர், பின்னதன் பாலென்பது—தென்னங்கள்ளு, முட்டை யென்பது—எருமுட்டை.

119-வது பாட்டு ஏரண்டத் தைலமென்பது-விளக்கெண்ணே. காட்டெருமைப் பாலென்பது-எருக்கன்பால்.

120-வது பாட்டு ரவியென்பது-சூரியன், அகத்திச்சா றென்பது, அகத்திக் கீரைச்சாறு.

122-வது பாட்டு தீங்கருந் தேனென்பது-கொம்புத்தேன்.

123-வது பாட்டு பாறுப்பு என்பது திருப்புல்லாணி யுப்பு, மேனி யென்பது-குப்பைமேனி.

124-வது பாட்டு பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு.

126-வது பாட்டு பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு.

127-வது பாட்டு உருசைதரும்பூ வென்பது-கஞ்சியுப்பு மேனிச் சாறென்பது-குப்பைமேனிச்சாறு, சத்தி யென்பது-கெந்தகம்.

128-வது பாட்டு வண்டர் என்பது-துருசு, வண்டில் என்பது-வெங் காரம்.

130-வது பாட்டு மதியென்பது-வெள்ளி.

131-வது பாட்டு ஏமமென்பது-தங்கம், வேதைமுக மென்பது-உருக்குமுகம்.

132-வது பாட்டு தேவியென்பது-தாளகம், மேனிச்சா றென்பது-குப்பை மேனிச்சாறு, ரவியென்பது-சூரியன், ரவியென்பது செம்பு.

133-வது பாட்டு ஆலாத்தி என்பது-சூடன்

134-வது பாட்டு மதியென்பது-வெள்ளி-செந்தூரம் என்பது-ரசசெந் தூரம்.

135-வது பாட்டு வாழ்மடந்தை யென்பது-அரிதாரம், பதங்கரச மென்பது-வாலைரசம், குருவென்பது-வாலைரசம், நிம்பச்சாறு-என்பது-எலுமிச்சம் பழச்சாறு, கண்டர்ரவி என்பது-துருசுச் செம்பு.

136-வது பாட்டு வண்டில் என்பது-வெங்காரம், துய்யனென்பது-வெள்ளி, சித்தரூபி என்பது-இந்திரகோபப் பூச்சி, கன்னிப்பா லென்பது-அமுதப்பால்.

137-வது பாட்டு மதியென்பது-வெள்ளி, ஏமமென்பது-தங்கம்.

138-வது பாட்டு காந்தம் இடித்த பொடி யென்பது-அரபொடி, நிம்பக்கனி யென்பது-எலுமிச்சங்கனி, ரவிபுட மென்பது—சூரியபுடம்.

140-வது பாட்டு வெற்பு என்பது-மலே, உவர்மண்ணுச் சுண்ணம் என்பது—பூநீர்ச் சுண்ணம்.

142-வது பாட்டு வாரணத்தின் முட்டை யென்பது கோழிமுட்டை.

143-வது பாட்டு அண்டம் என்பது- கோழிமுட்டை, நிம்பச்சாறு என்பது-எலுமிச்சம்பழச்சாறு, ஏமமென்பது- தங்கம்.

144-வது பாட்டு ரவிமதியென்பது-செம்புவெள்ளி.

145-வது பாட்டு அயமென்பது- இரும்பு, காரமென்பது- பொரிகாகாரம், பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, ரவி யென்பது-செம்பு, மதியென்பது-வெள்ளி- ஏமமென்பது-தங்கம்.

146-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், இரதமென்பது—சூதம், ரவி யென்பது-செம்பு.

147-வது பாட்டு கதலித் தண்டென்பது—வாழைத்தண்டு, குமரியன்ன மென்பது-சோற்றுக் கற்றாழை.

149-வது பாட்டு வங்கமென்பது—வெள்ளீயம்.

150-வது பாட்டு காரியென்பது-காரீயம்.

151-வது பாட்டு கள்ளமுது போக்கி யென்பது—சுத்திசெய்வது, அயத்தாற் கிண்டு என்பது-இருப்புக் கரண்டியாற் கிண்டுவது குமரி யென்பது சோற்றுக் கற்றாழை, அரனுடைய பட்டை யென்பது-பூவரசம் பட்டை.

153-வது பாட்டு கொட்டை யென்பது-கொட்டை முத்து, வச்சிராங்கிப்பாலென்பது—சதுரக் கள்ளிப்பால்.

157-வது பாட்டு சாரதியென்பது-துருசு, சுண்ணச்சீலை யென்பது-சுண்ணந் தடவிய வஸ்திரம்.

158-வது பாட்டு கங்காளனென்பது—துருசு, கண்டர் என்பது—துருசு

159-வது பாட்டு சூதமென்பது-ரசம், மணிபோலாகு மென்பது—ரசமணியாகும்.

160-வது பாட்டு அரசனென்பது-ரசம், ஏமமென்பது-தங்கம்.

161-வது பாட்டு கனிந்த நறும்பழமென்பது-வாழைப்பழம்.

165-வது பாட்டு கருமத்தன் என்பது-கருஊமத்தை, குமரி யென்பது—சோற்றுக்கற்றாழை.

168-வது பாட்டு முன்சாரென்பது-புரசம்பட்டை யிலை பூ இவைகளின் சாறு, குமரியன்னம் என்பது—சோற்றுக்கற்றாழை, முன்சாம்பல் என்பது-புளிமரச் சாம்பல்.

172-வது பாட்டு கெந்தி யென்பது—கெந்தகம், நாவியென்பது—கருநாவி, காயமென்பது—பெருங்காயம், பூண்டென்பது—வெள்ளைப் பூண்டு, பருதியின் பால் என்பது-எருக்கன்பால்.

173-வது பாட்டு உதையவன் பாலென்பது-எருக்கன்பால், நிம்ப எண்ணெய் என்பது-வேப்பெண்ணெய்.

174-வது பாட்டு கெந்தி யென்பது—கெந்தகம், தாரமென்பது—அரிதாரம், சூதமென்பது-ரசம், நிம்பச்சா றென்பது—எலுமிச்சம்பழச் சாறு.

175-வது பாட்டு நிம்பசாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு, கரிசாலை யென்பது-கரிப்பான், கதிரவன்பாலென்பது-எருக்கன்பால்.

176-வது பாட்டு வாசுகி யென்பது நாகம், நகர்தீயிட்டோன் யென்பது-அனுமான், அவன் தந்தை யென்பது-வாயு.

177-வது பாட்டு தந்திவிரை யென்பது-நேர்வாளம், சிவவிந்தென்பது-ரசம்.

179-வது பாட்டு வசம்புள்ளி என்பது-வசம்பு வெள்ளைப் பூண்டு.

180-வது பாட்டு கெந்தி என்பது-கெந்தகம், ரசமென்பது—சூதம், தாரமென்பது-அரிதாரம், பொட்டிலுப்பென்பது-வெடியுப்பு.

181-வது பாட்டு கெந்தியென்பது-கெந்தகம், நந்திபண்ணையுப் பென்பது-முன்சொன்ன வெடியுப்பு.

183-வது பாட்டு கருத்தாடென்பது-வெள்ளாடு, உள்ளி யென்பது-வெள்ளைப் பூடு.

184-வது பாட்டு பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு.

185-வது பாட்டு பொன்னுருக்குங் காரமென்பது-பொரிக்காரம்.

186-வது பாட்டு அண்டமென்பது-முட்டை, துலாந்திர மென்பது-சட்டியிற் படாமற் றூக்கிக் கட்டுதல்.

188-வது பாட்டு வெள்ளை வெங்காயமென்பது—வெள்ளைப் பூண்டு, பட்டை யென்பது-பறங்கிப் பட்டை.

191-வது பாட்டு அன்னங் கொதிக்கையி லென்பது-சோறுவேகும் போது ஒருதுணியில் வெள்ளெருக்கன்காயை வைத்துமுடிந்து வேகிற சாதத்திற் துலாந்திரங்கட்டி எடுப்பது.

192-வது பாட்டு நாபியென்பது-கருநாபி, கெந்தி யென்பது-கெந்தகம், சிலை யென்பது-மனோசிலை, இந்துவென்பது-இந்துப்பு, தார மென்பது—அரிதாரம், வாள மென்பது—நேர்வாளம், திரிகடுகு என்பது—சுக்கு திப்பிலி மிளகு, திரிபலை யென்பது-கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

194-வது பாட்டு அன்னமிடு முன்னிடும் பூவென்பது—சஞ்சியுப்பு, அப்பென்பது-தண்ணீர்.

195-வது பாட்டு புட்டிவெல்ல மென்பது-பனைவெல்லம்.

196-வது பாட்டு விதிபிறந்த மதியென்பது-கருநாவி, நாவிக்கொடி அன்னமென்பது-சோற்றுக் கற்றாழை.

197-வது பாட்டு குமரியன்ன மென்பது-சோற்றுக் கற்றாழை, தேங்காயோடு என்பது-தேங்காய்ச் சிரட்டை.

198-வது பாட்டு திரிகடுகு என்பது-சுக்கு திப்பிலி மிளகு, சாரந்தாரமென்பது-நமச்சாரம் அரிதாரம்.

199-வது பாட்டு காட்டெருமைப் பாலென்பது-எருக்கன்பால்.

201-வது பாட்டு உள்ளி யென்பது-வெள்ளைப்பூண்டு.

202-வது பாட்டு திரிகடு கென்பது-சுக்கு திப்பிலி மிளகு, உள்ளி என்பது-வெள்ளைப்பூண்டு, அன்னமென்பது-சோறு.

204-வது பாட்டு விந்தையென்பது—ரசம், வீட்டில் நெருப்பென்பது-அகத்திக்கீரை.

206-வது பாட்டு கழற்சியென்பது—கழற்சிப் பருப்பு, கெந்தியென்பது-கெந்தகம், உப்பென்பது-கஞ்சியுப்பு.

208-வது பாட்டு உள்ளி யென்பது-வெள்ளைப் பூண்டு.

209-வது பாட்டு எலிக்கொல்லி யென்பது—எலிப்பாஷாணம், தேவி யென்பது-அரிதாரம்.

212-வது பாட்டு பொட்டலை யென்பது-வெடியுப்பு.

214-வது பாட்டு நீலனென்பது-துருசு, கிழிஞ்சிநீரென்பது-சிப்பிச் சுண்ணம்.

215-வது பாட்டு அரன்பீசமென்பது-ரசம்.

216-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், அன்னச்சா றென்பது—சோற்றுக் கற்றாழைச்சாறு.

217-வது பாட்டு வாழ்மடந்தை என்பது—அரிதாரம், அன்னமென்பது-சோற்றுக் கற்றாழை.

222-வது பாட்டு வன்னிபற்ப மென்பது-ரசபதங்கம்.

225-வது பாட்டு காரியென்பது-கருவங்கம்.

226-வது பாட்டு அசமநீரென்பது-வெள்ளாட்டுநீர்.

227-வது பாட்டு ரவியென்பது-செம்பு, ஏமமென்பது-தங்கம்.

229-வது பாட்டு காரியென்பது—கருவங்கம், வன்னி யென்பது—லிங்கம், அன்னமென்பது-கற்றாழை.

231-வது பாட்டு துய்யனென்பது—வெள்ளி, குருவென்பது—ஷெசெந்தூரம், ஏமமென்பது—தங்கம்.

232-வது பாட்டு தந்தியென்பது—நேர்வாளம், பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு.

233-வது பாட்டு இரதமென்பது-சூதம், சத்தியென்பது-கெந்தகம், பாலென்பது-அமுதப்பால்.

235-வது பாட்டு வன்னியென்பது-லிங்கம்

237-வது பாட்டு தந்திவிரை யென்பது-யானைநெருஞ்சி விரை, பாணி என்பது-தண்ணீர்.

238-வது பாட்டு சாகரத்தின் மலமென்பது—கடல்நுரை, சோகி யென்பது—பலவரை, தாரமென்பது—அரிதாரம், அன்ன மென்பது-சோற்றுக் கற்றாழை.

240-வது பாட்டு திரிகடுகென்பது-சுக்கு திப்பிலி மிளகு.

241-வது பாட்டு அண்டவெண்கரு வென்பது—கோழிமுட்டையின் வெள்ளைக்கரு.

242-வது பாட்டு கிளிஞ்சிநீரென்பது-சிப்பிச்சுண்ணம்.

244-வது பாட்டு அஞ்குசமென்பது—காந்தம், சத்திசூதமென்பது—கெந்தகம் சூதம்.

245-வது பாட்டு தந்திவிரையென்பது—நேர்வாளம், நெல்லிமுள்ளி யென்பது—நெல்லிவற்றல்.

248-வது பாட்டு கண்டரென்பது—துருசு, தேவியென்பது—தாளகம், பாணி யென்பது—தண்ணீர், வண்டிலென்பது—வெங்காரம்.

249-வது பாட்டு ரூபியென்பது—இந்திர கோபம், அன்னமென்பது கற்றாழை.

250-வது பாட்டு வண்டிலென்பது-வெண்காரம்.

252-வது பாட்டு மதியென்பது வெள்ளி, எமமென்பது-தங்கம்.

253-வது பாட்டு தேவிவிந்தென்பது-கெந்தகரசம், சித்தரூபியென் பது-இந்திரகோபம்.

255-வது பாட்டு சிந்துருவலியில்லை யென்பது-புளியிலை.

256-வது பாட்டு வச்சிரமென்பது—பிரண்டை, போதக மென்பது—ஓமம், நிம்பயிர்க்கு என்பது-வேப்பம்பிர்க்கு, பூநீரென்பது-உவர்ப்பூநீர்.

257-வது பாட்டு பாணியென்பது-தண்ணீர்.

261-வது பாட்டு அரபொடியென்பது-இருப்புப்பொடி.

262-வது பாட்டு கையான் யென்பது-கரிப்பான், பாணி யென்பது-தண்ணீர்.

264-வது பாட்டு பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு.

266-வது பாட்டு நிம்பஎண்ணெய் யென்பது-வேப்பெண்ணெய்.

267-வது பாட்டு கன்னியாகுமரி யென்பது-கெந்தகம்.

268-வது பாட்டு ரஸ்தாளி யென்பது-வாழைப்பழம்.

269-வது பாட்டு முப்பழமென்பது-வாழை மா பலாப்பழம்.

270-வது பாட்டு தந்தியென்பது—நேர்வாளம், திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

271-வது பாட்டு காணியிலை யென்பது—பொன்னாங்கண்ணி.

272-வது பாட்டு வெண்குந்தி யென்பது—வெள்ளைக்குங்கிலியம்.

273-வது பாட்டு கதிரவன்பேர்கொண்டயிலை யென்பது—எருக்கனிலை, நாகவல்லியிலையென்பது—வெற்றிலை.

275-வது பாட்டு அண்டமென்பது—கோழிமுட்டை.

277-வது பாட்டு அண்டமளவு என்பது—முட்டையளவு.

278-வது பாட்டு சூதமென்பது—ரசம், கெந்தமென்பது—கெந்தகம், குமரியென்பது—சோற்றுக் கற்றாழை.

279-வது பாட்டு கொம்மட்டியென்பது—பேய்க்கொம்மட்டி, தந்திவிரையென்பது—நேர்வாளம்,

280-வது பாட்டு கரிசாலை யென்பது—கரிப்பான், பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

284-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, அரைப்பொடியென்பது—இரும்புப்பொடி.

286-வது பாட்டு ஐந்தெண்ணெயென்பது — புங்கெண்ணெய் நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய் இலுப்பெண்ணெய்.

289-வது பாட்டு புளிமரத்தின் பிராணியென்பது—புளியம்பட்டை.

290-வது பாட்டு சேரானின் கொட்டை யென்பது—சேங்கொட்டை.

292-வது பாட்டு நிம்பப்பழமென்பது-எலுமிச்சம்பழம்.

294-வது பாட்டு கழற்பருப்பென்பது—கழற்சிப்பருப்பு, கருங்கொள் என்பது—கருங்காணம்.

295-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, அண்டமென்பது—மனிதன் பீஜம்.

296-வது பாட்டு சேராங்கொட்டை யென்பது—சேங்கொட்டை.

297-வது பாட்டு கூவிளமென்பது வில்வம், சீரமென்பது—சீரகம், கார்போக மென்பது—கார்போக அரிசி, கருஞ்சீரமென்பது கருஞ்சீரகம்.

298-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு, திரிபலை யென்பது—கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

304-வது பாட்டு புற்றிலுள்ள சோறென்பது—புற்றுஞ்சோறு.

305-வது பாட்டு வன்னியிலை யென்பது—வன்னிமரத்தினிலை.

309-வது பாட்டு கேசரி யென்பது—குங்குமப்பூ. திரிபலை யென்பது கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்

311-வது பாட்டு நெருஞ்சகத்தி யென்பது—நெருஞ்சியிலை அகத்தி இலை, திரிபலை யென்பது—கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய், கருமத்தங்கா யென்பது—கருவூமத்தங்காய்.

313-வது பாட்டு அப்பு என்பது—தண்ணீர்.

315-வது பாட்டு திரிபலை யென்பது—கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

318-வது பாட்டு நிம்பப்பிசின் என்பது—வேப்பம்பிசின், நிம்பஇலை என்பது—வேப்பிலை.

319-வது பாட்டு முசுக்கையென்பது—முசுமுசுக்கை.

321-வது பாட்டு வனமிருக்த மூலியென்பது—ஆவரையிலை.

322-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

323-வது பாட்டு காலாறு பறவை யென்பது—வண்டு, இப்பூரலென்பது—இம்புறுயிலை.

324-வது பாட்டு வீரகெந்தி யென்பது—வீரம் கெந்தகம்.

327-வது பாட்டு ஆனைக்கால் மூலியென்பது—யானையடியிலை, தாரம் என்பது—அரிதாரம்.

328-வது பாட்டு மடந்தை யென்பது—அரிதாரம், கருவென்பது—கோழிமுட்டைக் கரு

329-வது பாட்டு காரியத்தில் வால்மீகரிஷி பிறந்தபுற்றில் அப்புற்றுஞ் சோற்றை யெடுத்துத்தூவ நீரும் மென்றறிக.

330-வது பாட்டு மேனியிலை யென்பது-குப்பைமேனி, கையானென்பது—கரிப்பான்.

331-வது பாட்டு நாறும்பூ யென்பது—கெந்தகம்.

332-வது பாட்டு பொற்றலை யென்பது—கரிப்பான்.

333-வது பாட்டு நாறும்பூ வென்பது—கெந்தகம்

334-வது பாட்டு துய்யானென்பது-வெள்ளி, காரியென்பது-காரீயம், அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை.

335-வது பாட்டு காரியென்பது—காரீயம்.

336-வது பாட்டு நிம்பமூலி யென்பது—வேம்பு, அரன்பீச மென்பது—ரசம்.

338-வது பாட்டு குமரகுருபரனேறும் பட்சி யென்பது-மயில், சிகை யென்பது—ரோமம்.

339-வது பாட்டு நிம்பயெண்ணெய் என்பது—வேப்பெண்ணெய்.

340-வது பாட்டு குமரனுடமனைவி மூலமென்பது—வள்ளிக்கிழங்கு, சித்தர்மூல மென்பது—கொடிவேலி வேர்.

342-வது பாட்டு கறைகண்ட னென்பது—துருசு, கருப்பியென்பது—இரும்பு, நாற்றமென்பது—கெந்தகம், பண்ணை யென்பது—வெடியுப்பு.

343-வது பாட்டு சிவன்மூலி யென்பது—சிவனார் வேம்பு, வாலுளு யென்பது—வாலுளுவை யரிசி.

344-வது பாட்டு கண்டர் என்பது—துருசு, கிழிஞ்சிற் சுண்ணமென்பது—சிப்பிச் சுண்ணம்.

346-வது பாட்டு அன்னமென்பது-கற்றாழை, கண்டர் என்பது-திருசு, அங்கியென்பது-மேலேபூசுவது.

347-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, கிளிஞ்சிச் சுண்ணமென்பது-சிப்பிச்சுண்ணம், மேனியென்பது-குப்பைமேனி, பிரிதிவுயென்பது—மண்.

348-வது பாட்டு ரவியென்பது—செம்பு, கருப்பியென்பது-இரும்பு, குருவென்பது—முப்புக்குரு.

349-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

351-வது பாட்டு மதியென்பது-வெள்ளி, கருப்பி யென்பது-இரும்பு.

352-வது பாட்டு விக்கென்பது—ரசம், சத்தியென்பது—கெந்தகம், திரிபலாதி யென்பது—கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய், தக்தியென்பது—நேர்வாளம்.

353-வது பாட்டு கிராவணமென்பது—வங்கம், குமரிச்சா றென்பது-கற்றாழைச்சாறு.

354-வது பாட்டு அன்னமென்பது-கற்றாழை, மதுவென்பது-தேன்.

355-வது பாட்டு அழுக்ககற்றும் பூவென்பது-பூநீர், கற்சுண்ணமென்பது—சுண்ணும்பு, ஞானிசினையென்பது—கோழிமுட்டை.

356-வது பாட்டு மடலரி யென்பது—அரிதாரம், அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை.

357-வது பாட்டு நாற்றம் என்பது—கெந்தகம், நாரியென்பது—தாளகம், இரதமென்பது—சூதம், நாரியர்பால் என்பது—அமுதப்பால்.

358-வது பாட்டு புளிச்சான் என்பது—புளிச்சக்கீரைச் செடி.

360-வது பாட்டு காயமென்பது—பெருங்காயம்.

361-வது பாட்டு கருவையெடு என்பது—வேதைக்குரு, வெடியென்பது—வெடியுப்பு, குழலாள் பாலென்பது—அமுதப்பால், வேதைக்குருவென்பது—இரசவாதக்குரு.

363-வது பாட்டு பொட்டலை யென்பது—வெடியுப்பு.

364-வது பாட்டு சுண்ணமென்பது—சுண்ணும்பு, நீலனென்பது—துருசு.

366-வது பாட்டு தனப்பாலென்பது—அமுதப்பால், ரவியென்பது—துருசு.

367-வது பாட்டு அன்னமென்பது — கற்ருழை, மதியென்பது—வெள்ளி.

369-வது பாட்டு கெந்தி என்பது—கெந்தகம், பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு, வாயு வென்பது—அரபொடி, ரவி யென்பது—செம்பு, மதியென்பது—வெள்ளி.

371-வது பாட்டு படைதுறத்தும் ராஜனென்பது—வெடியுப்பு.

372-வது பாட்டு சிவன் லிங்தென்பது—சூதம், கெந்தி யென்பது—கெந்தகம், காட்டெருமைப் பாலென்பது—எருக்கன் பால்.

373-வது பாட்டு தந்திவிரை யென்பது—நேர்வாளம்.

374-வது பாட்டு சத்திராதமென்பது—கெந்தகம், தந்தி யென்பது—நேர்வாளம், திரிகடுகு என்பது—சுக்கு திப்பிலி மிளகு.

375-வது பாட்டு எஃகுஎன்பது-உருக்கு, காரியென்பது-கருவங்கம், சோறு என்பது—கற்ருழைச் சோறு, வெடியென்பது—வெடியுப்பு, பாணியென்பது—தண்ணீர், வாழ்மடந்தை என்பது—அரிதாரம்.

376-வது பாட்டு சோரனென்பது—வெடியுப்பு, ரவியென்பது—செம்பு.

379-வது பாட்டு முன்சாறென்பது—கொள்ளுக்கியாழம், காரி என்பது—கருவங்கம்.

380-வது பாட்டு பொற்றலை யென்பது—கரிப்பான், ரவி யென்பது—சூரியன்.

381-வது பாட்டு வன்னிகற்ப மென்பது—லிங்கரசம், முன்சாறென்பது—பொற்றலைக் கரிப்பன்சாறு, திரிகடுகு என்பது—சுக்கு திப்பிலி மிளகு.

382-வது பாட்டு வன்னி யென்பது—லிங்கம்,

383-வது பாட்டு சேராங்கொட்டை யென்பது—சேங்கொட்டை அன்னமென்பது—கற்றாழைச் சோறு.

384-வது பாட்டு எலிக்கொல்லி யென்பது—எலிப்பாஷாணம், வன்னி யென்பது—லிங்கம், மேனியென்பது—குப்பைமேனி, மது வென்பது—தேன்.

385-வது பாட்டு வெய்யோ னென்பது—சூரியன்

386-வது பாட்டு இருளகற்று மிலையென்பது—எருக்கிலை, நாற்றமென் பது—கெந்தகம்.

387-வது பாட்டு தர்திவிரை யென்பது—நேர்வாளம்.

390-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், ரவியென்பது—செம்பு, மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

391-வது பாட்டு தலைகுனிந்து தொங்குகின்ற பக்ஷியென்பது—பழமுண்ணும் வௌவால், கருநாகமென்பது—கருவங்கம்.

397-வது பாட்டு கருநாகமென்பது—கருவங்கம், வெடியென்பது—வெடியுப்பு, அன்னமென்பது—கற்றாழை, வாழ் மடந்தை என்பது —அரிதாரம், சோராலாட்டி யென்பது—கற்றாழைச் சோராலாட்டி என்ப.

398-வது பாட்டு ரவியென்பது—செம்பு, மதியென்பது—வெள்ளி.

399-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு, பாறையுப்பென்பது—திருப்புல்லாணி யுப்பு, பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச் சாறு.

400-வது பாட்டு சோரனென்பது-வெடியுப்பு, உப்பென்பது-பாறை யுப்பு, கையானென்பது—கரிப்பான், ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

401-வது பாட்டு சத்துருவைச் செயம்பண்ணும் உப்பென்பது—வெடியுப்பு, திரிநாளென்பது—மூன்றுநாள்.

402-வது பாட்டு திரிகடுகு என்பது—சுக்கு திப்பிலி மிளகு.

409-வது பாட்டு ஊரல்பரியென்பது—செம்பு, நாற்றமென்பது—கெர்தகம், மதியென்பது—வெள்ளி.

410-வது பாட்டு சித்திரையிற் பூத்துதிர்ந்தபூ வென்பது-பூநீறு, கடற் குருவியென்பது—கஞ்சியுப்பு.

411-வது பாட்டு வழலையென்ற சுண்ணமென்பது—சவுக்காரக் குருச் சுண்ணம்.

412-வது பாட்டு தாய்தனைக் கொன்றவ னென்பது—வாழை.

413-வது பாட்டு வெண்ணாகமென்பது—வெள்வங்கம், வெடியென் பது—வெடியுப்பு, வெண்கருவென்பது—முட்டைக்கரு.

414-வது பாட்டு முந்நீரென்பது-அண்டச்செயநீர், கண்டரென்பது- துருசு, சுண்ணமென்பது—துருசுக்குரு.

415-வது பாட்டு கூத்தனென்பது—துருசு, பண்ணையென்பது—ரசம் என்றும், வெடியுப்பென்றுங் கூறுவர், வீரனுமே என்பது— சவ்வீரம், நாற்றமென்பது—கெந்தகம், பழமென்பது—எலு மிச்சம்பழம், முன்சாறென்பது...எலுமிச்சம்பழச்சாறு.

416-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

417-வது பாட்டு போர்க்களத்திற் சண்டை செய்யும் உப்பென்பது— வெடியுப்பு, அன்னமென்பது—கற்றாழைச்சோறு, அன்ன பேதி என்றுங் கூறுவார், புளியென்பது-சீனக்காரம், குமரிச் சாறென்பது—சோற்றுக்கற்றாழைச் சாறு, கருநாகமென்பது —கருவங்கம்.

418-வது பாட்டு பொட்டலை யென்பது-வெடியுப்பு, பாணியென்பது- தண்ணீர், நாறும்பூ வென்பது—கெந்தகம், பழமென்பது— எலுமிச்சம்பழம்.

419-வது பாட்டு நீலனென்பது-துருசு, பழமென்பது—எலுமிச்சம் பழம், ரவியென்பது—செம்பு, பெருவாயின் நீரென்பது— கழுதை நீர்.

420-வது பாட்டு நீரிடையென்பது—செயநீர், சத்தியிதுவென்பது— சித்தியாகு மென்ப.

423-வது பாட்டு சிங்கியென்பது மிருதார்சிங்கி, அன்ன மென்பது— சோற்றுக் கற்றாழை.

424-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

425-வது பாட்டு நீலகண்டரென்பது—துருசு, நாற்றமென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம் பழம், ரவியென்பது—செம்பு.

426-வது பாட்டு வடிவுகொண்ட சூரனுடகனீ யென்பது—மாங்கனி, மோதகமென்பது—ஓமம், நெல்லி முள்ளியென்பது—நெல்லி வற்றல். பழத்தோலென்பது—வாழைப் பழத்தோல், நிம்ப பத்திர மென்பது—கரிவேப்பிலை.

427-வது பாட்டு வச்சிரத்தின் மூலிவே ரென்பது—எருக்கன் வேர் என்றும், சதுரக் கள்ளிவேர் என்றும், பிரண்டைவேர் என்றும், கூறுவர்.

428-வது பாட்டு தக்கனைத் தரித்தவன் மூலி யென்பது—சிவனர் வேம்பு, நாறும்பூ வென்பது—கெந்தகம்.

429-வது பாட்டு தந்தி யென்பது—நேர்வாளம், நெல்லி முள்ளி யென்பது—நெல்லி வற்றல்.

431-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

432-வது பாட்டு கல்லுப்பென்பது—திருபுல்லாணியுப்பு, பழமென் பது—எலுமிச்சம்பழம்.

433-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்

434-வது பாட்டு கல்லுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு, இஃது அகப்படாமற் போனல் கஞ்சியுப்பைச் சுத்திசெய்து சேர்த் துக் கொள்ளவும்.

435-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

436-வது பாட்டு இணங்கனென்பது—வெடியுப்பு, பாணியென்பது—தண்ணீர்.

438-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

441-வது பாட்டு சுடர்க்கொடியோ னென்பது—சூடன், தனப்பா லென்பது—அமுதப்பால்.

442-வது பாட்டு மதுவென்பது—தேன், நசல் என்பது—சீக்கு.

343-வது பாட்டு எலிக்கொல்லி யென்பது—எலிப்பாஷாணம்.

444-வது பாட்டு கல்லுப்பு என்பது—கஞ்சியுப்பு.

445-வது பாட்டு முக்கணனைப் போல ஏறுமென்பது—திருகிய தேங்காய்ப்பூ நிறம்போல் பதங்கமேறி யிருக்கு மென்றறிக.

447-வது பாட்டு எக்கியத்திற் பலிகொடுப்ப தென்பது—வெள்ளாடு, திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு, பாணியென்பது—தண்ணீர்.

449-வது பாட்டு முக்கண் என்பது-தேங்காய், தந்திவிரை யென்பது-நேர்வாளம்.

451-வது பாட்டு கணபதி முன் தீபமதையென்பது—சூடன்.

452-வது பாட்டு முக்கண் என்பது—தேங்காய், மூத்தோன் விநாயகன் கையிற் பிடித்ததென்பது—யானைக்கொம்பு, வெடி சேர்த்தென்பது — வெடியுப்பு, திரிகடுகென்பது — சுக்கு திப்பிலி மிளகு.

453-வது பாட்டு வங்கமென்பது—ஈயம், வெடியென்பது-வெடியுப்பு.

454-வது பாட்டு கண்டரென்பது—துருசு.

455-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, வேதையென்பது—ரசவாதம், என்றறிக.

457-வது பாட்டு திலகமென்பது—எள்ளு,

461-வது பாட்டு பொட்டலை யென்பது—வெடியுப்பு, பேதியென்பது—அன்னபேதி, பொரியென்பது—பொரிகாரம்,

462-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு, பொட்டலை யென்பது—வெடியுப்பு.

463-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

466-வது பாட்டு நீலனென்பது—துருசு, பழமென்பது—எலுமிச்சம் பழம்.

468-வது பாட்டு ஆட்டமுரியென்பது—வெள்ளாட்டு நீர், அன்ன மென்பது—கற்றுழை.

469-வது பாட்டு முன்னமுரி யென்பது—வெள்ளாட்டு நீர்.

470-வது பாட்டு கன்னிப்பா லென்பது—அமுதப்பால்.

471-வது பாட்டு விந்தென்பது—ரசம், அன்னமென்பது—சோற்றுக் கற்றுழை, கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

473-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம், அன்ன மென்பது—சோற்றுக் கற்றுழை, ரவியென்பது—செம்பு.

474-வது பாட்டு ரவியென்பது—செம்பு, அனுமார் போலாமென் பது—சிரஞ்சீவி யா யிருப்பதாம்.

475-வது பாட்டு முதற்கற்பமென்பது—வங்கச்செந்தூரம்.

476-வது பாட்டு காரியென்பது—காரீயம், நாறும்பூ வென்பது-கெந்தகம், அன்னமென்பது—சோற்றுக் கற்றுழை, விஷ்ணுவின் மனைவி என்பது—அரிதாரம், ஊரிலுப்பு என்பது—கஞ்சியுப்பு.

477-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

478-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம், முதிர்ந்த நரைபோகு மென்பது—கருவங்கச் செந்தூரஞ்சாப் பிடப் போகுமென்ப.

479-வது பாட்டு அப்புவென்பது—வங்கம், உப்பு என்பது—கஞ்சியுப்பு, அன்னமென்பது—சோற்றுக் கற்றுழை.

480-வது பாட்டு விஷ்ணுவின் பெண்டீர் என்பது—அரிதாரம்.

481-வது பாட்டு விந்தென்பது—ரசம், சோறென்பது—சோற்றுக் கற்றுழைச் சோறு.

482-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

484-வது பாட்டு முக்கணுடையினையோ னென்பது—இளநீர், உள்ளி யென்பது—வெள்ளைப் பூண்டு.

485-வது பாட்டு இளையோனென்பது—இளநீர், நாற்றமென்பது—கெந்தகம்.

487-வது பாட்டு விஷ்ணுவின் மனைவி யென்பது—அரிதாரம்.

488-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

489-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், பொற்றலை யென்பது—கரிப்பான், ரவியென்பது—செம்பு.

490-வது பாட்டு பாலனுயெந்நாளு மிருப்பதற் கென்பது—அயச் செந்தூரஞ் சாப்பிடவேண்டு மென்ப.

491-வது பாட்டு அரனுடைய விந்தென்பது—ரசம், பெண்டீரென்பது—கெந்தகம்.

492-வது பாட்டு அன்ன மென்பது—சோற்றுக் கற்றாழை.

493-வது பாட்டு கையானென்பது—கரிப்பான், வன்னியென்பது—லிங்கம், முந்நீரென்பது—புகைநீர்.

495-வது பாட்டு கருநாகமென்பது—கருவங்கம், வெடியென்பது—வெடியுப்பு.

496-வது பாட்டு பொட்டலை யென்பது—வெடியுப்பு.

497-வது பாட்டு அரன்பீசமென்பது—ரசம்.

498-வது பாட்டு முந்நீரென்பது—புகைநீர்.

501-வது பாட்டு முன்தைலமென்பது—கெந்தகத் தைலம்.

503-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு, பழமென்பது—எலுமிச்சம்பழம்.

504-வது பாட்டு முன்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, மாயோனின் பெண்டீரென்பது—அரிதாரம்.

505-வது பாட்டு குருவென்பது—துருசுக்குரு, தாயென்பது—தங்கம்.

506-வது பாட்டு கேசரமென்பது—ரோமம்.

507-வது பாட்டு கேசரமென்பது—ரோமம், நீலனென்பது—துருசு, நாறும்பூ என்பது—கெந்தகம், திலகமென்பது—எள்ளு.

508-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம், ஏமமென்பது—தங்கம்.

509-வது பாட்டு நீலனென்பது—துருசு, நாறும்பூ என்பது—கெந்தகம், கொடியோனென்பது—சூடன், பழமென்பது-எலுமிச்சம்பழம்.

510-வது பாட்டு கருப்பென்பது—முன்சொன்ன மருந்து கருப்பாயிருக்குமென்ப, தாரமென்பது—அரிதாரம், பழமென்பது—எலுமிச்சம்பழம், திரிநாளென்பது—மூன்றுநாள்.

511-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

512-வது பாட்டு கசடறுத்த தாளக மென்பது — சுத்திசெய்த தாளகம், கரைகண்டன் என்பது—துருசு, காரமென்பது—சீனக்காரம், வெடியென்பது—வெடியுப்பு.

513-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன், கருப்பி என்பது—இரும்பு, ரவியென்பது-செம்பு, மதியென்பது-வெள்ளி.

514-வது பாட்டு படைராஜனென்பது—வெடியுப்பு.

515-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், கருப்பி யென்பது—இரும்பு.

516-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

517-வது பாட்டு திலதைலமென்பது—எள்ளெண்ணெய், முக்கண்பாலென்பது—தேங்காய்ப்பால்.

518-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, அருணனென்பது—சூரியன்.

519-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

520-வது பாட்டு நீலனென்பது—துருசு, நாறும்பூ வென்பது—கெந்தகம், கொடியோனென்பது—சூடன், பழமென்பது-எலுமிச்சம்பழம்.

522-வது பாட்டு கேசரமென்பது—ரோமம், திலதப்பாலென்பது—எள்ளுப்பால்.

524-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், வண்டிலென்பது—காரம்.

525-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

528-வது பாட்டு பொட்டலை என்பது—வெடியுப்பு, படியென்பது—சீனம், தாரமென்பது—அரிதாரம்.

529-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு.

531-வது பாட்டு தாரமென்பது—தாளகம்.

532-வது பாட்டு பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு, நீலனென்பது—துருசு.

535-வது பாட்டு வன்னியென்பது—லிங்கம், கருந்தேனென்பது—விளக்கழுக்கென்றும், கொம்புத்தேனென்றும் கூறுவர்.

536-வது பாட்டு பண்டுபோல் நீயிருக்கும் கற்பமென்பது—விடத்தலைக்கற்பம்.

537-வது பாட்டு சஞ்சீவிமூலியென்பது—சீந்தில், வன்னியென்பது-லிங்கம், தேன் என்பது—விளக்கழுக்கு.

538-வது பாட்டு நீலனென்பது—துருசு, கண்டரென்பது—துருசு.

544-வது பாட்டு நரைதிரையுங் காணாதோடுமென்பது—சிவனார் வேம்புத் தைலம், காயமென்பது—தேகம்.

545-வது பாட்டு கேசரமென்பது—ரோமம், திலகமென்பது-எள்ளு.

550-வது பாட்டு நிம்பச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, பாணி என்பது—தண்ணீர்.

552-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, புளியென்பது—குழம்புப் புளி.

554-வது பாட்டு தைலமென்பது—ரோமத்தைலம்.

555-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

558-வது பாட்டு அச்சமில்லா னென்பது—வெடியுப்பு, கொடியோ னென்பது—சூடன், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

561-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

566-வது பாட்டு கம்பியுப்பென்பது—வெடியுப்பு.

267-வது பாட்டு கொடியோ னென்பது—சூடன்.

674-வது பாட்டு அன்னமிடுமுன்னிடும்பூ வென்பது—கஞ்சியுப்பு, பண்ணையென்பது—வெடியுப்பு, அரன்பீசமென்பது—ரசம்.

578-வது பாட்டு இருகுரங்கினிலையென்பது — முசுமுசுக்கை, திரு மடக்தையென்பது—தாளகம்.

579-வது பாட்டு இருவங்கமென்பது-கருவக்கம் வெள்வங்கம், அன்ன மென்பது—சோற்றுக்கற்றாழைச்சோறு.

580-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு, வாழ்மடக்தையென் பது—அரிதாரம்.

581-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

582-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

584-வது பாட்டு இணங்கனென்பது—வெடியுப்பு, பாணியென்பது— தண்ணீர்.

586-வது பாட்டு கருங்குருவை யென்பது-கருக்குருவையரிசி, பாணி யென்பது—தண்ணீர்.

587-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

589-வது பாட்டு பிள்ளைமகனிளையோனென்பது—இளநீர்.

590-வது பாட்டு கையானென்பது—கரிப்பான்.

591-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

593-வது பாட்டு அரியரன் பீசமென்பது—தாளகரசம், மேனியென் பது—குப்பைமேனி.

594-வது பாட்டு சோறென்பது—சோற்றுக் கற்றாழை, மதிரவி யென்பது—வெள்ளி செம்பு.

595-வது பாட்டு செம்பையிலையென்பது—சிற்றகத்தியிலை.

596-வது பாட்டு வனத்தில் நிற்குமாவாரையென்பது—ஆவரைச்செடி, பாணியென்பது—தண்ணீர்.

600--வது பாட்டு கரும்பொன்னரென்பது—இரும்புப்பொடி, க்ரரி யென்பது—கருவங்கம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

601-வது பாட்டு கூத்தனுட செம்பு என்பது—துருசுச்செம்பு, மதி யென்பது—வெள்ளி.

611-வது பாட்டு சடைக்கஞ்சாவென்பது—உயர்ந்த கஞ்சா, பாணி யென்பது—தண்ணீர்.

614-வது பாட்டு கூவென்றசொற்கேட்டென்பது—கபிமார்களுடைய சந்தோஷம்.

615-வது பாட்டு காட்டெருமைப்பாலென்பது—எருக்கன்பால்.

616-வது பாட்டு வன்னிரசமென்பது—லிங்கரசம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

618-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

620-வது பாட்டு திரிகடுகோமமென்பது—சுக்கு திப்பிலி மிளகு ஓமம்.

622-வது பாட்டு வச்சிரத்தின் பாலென்பது—சதுரக் கள்ளிப்பால், அண்டவெள்ளைக்கருவென்பது—கோழிமுட்டை வெள்ளைக் கரு, எலிக்கொல்லி யென்பது—வெள்ளைப்பாஷாணம்.

624-வது பாட்டு நிம்பயெண்ணெ யென்பது—வேப்பெண்ணெய், தாமென்பது—அரிதாரம்.

625-வது பாட்டு வன்னியென்பது—லிங்கம்.

628-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், வன்னியென்பது—லிங்கம், மேனியென்பது—குப்பைமேனி.

629-வது பாட்டு வாழ்மடந்தையென்பது—தாளகம், குமரியென்பது—சோற்றுக்கற்றாழை.

631-வது பாட்டு தந்திவிரையென்பது—நேர்வாளம்.

633-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

635-வது பாட்டு வாசுகியென்பது—நாகம், இரதமென்பது—ரசம்,

639-வது பாட்டு நாகப்பூ வென்பது—சிறுநாகப்பூ.

640-வது பாட்டு விதிபிறந்த மதியோனும் வேகத்தோனென்பது—நாவி, வெள்ளைப் பாஷாணம்,

641-வது பாட்டு காரியென்பது—கருவங்கம், சோறென்பது—கற்றாழைச்சோறு.

642-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம், அன்னமென்பது—கற்றாழை ஏமவென்பது—தங்கம்.

644-வது பாட்டு சோரானின் கொட்டையென்பது-சேங்கொட்டை, சதா சிவன் பெண்டீர் என்பது—கெந்தகம், கருவென்பது—முட்டைக்கரு.

645-வது பாட்டு சருவகால மணிதருண் ணுமென்பது—கஞ்சியுப்பு, சதா சிவன் பெண்டீர் என்பது—கெந்தகம், கருவென்பது—முட்டைக்கரு.

646-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

647-வது பாட்டு கனதந்தி யென்பது—நெருஞ்சி, பெரியோர்களுண் ணுங்கற்ப மென்பது—முப்புக்குரு, நீராலாட் டென்பது—முப்புச் செயநீர்.

648-வது பாட்டு சேதுபந்தனமென்பது—ஸ்ரீராமர் இலங்கைக்குச் செல்ல அணைகட்டினது போல் அதிசாரங் கிராணியைக் க்கட்டுமா மென்ப.

649-வது பாட்டு திரிபலை யென்பது — கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

652-வது பாட்டு வச்சிரமென்பது—பிரண்டை, வன்னியென்பது—லிங்கம்.

654-வது பாட்டு வன்னிபற்பமென்பது—லிங்கபற்பம்.

655-வது பாட்டு அன்னமென்பது—அரிசிச்சோறு, பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு

656-வது பாட்டு சிகையென்பது—ரோமம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

658-வது பாட்டு நிம்பயிலை யென்பது—வேப்பிலை, பாணியென்பது—தண்ணீர், அரன்பீசமென்பது—ரசம்.

659-வது பாட்டு தந்திவிரை யென்பது—நேர்வாளம்.

662-வது பாட்டு காரியென்பது—கருவங்கம்.

663-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை சோறென்பது—கற்றாழைச் சோறு.

664-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

666-வது பாட்டு கையானென்பது—கரிப்பான், தந்தியென்பது—நேர்வாளம்.

667-வது பாட்டு நெல்லிமுள்ளி யென்பது—நெல்லிவற்றல்.

669-வது பாட்டு தந்திவிரை யென்பது—நேர்வாளம், நெல்லி முள்ளி யென்பது—நெல்லிவற்றல், கையானென்பது—கரிப்பான்.

672-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், விந்தென்பது—ரசம், பாணியென்பது—தணணீர்.

673-வது பாட்டு அங்கியென்பது — மருந்துமேற் கவசஞ்செய்தல், சுயமக்கினி யென்பது—செந்தூரம், வேலியென்பது—கொடிவேலி.

674-வது பாட்டு வேலியென்பது—வேலிப்பருத்திச்சாறு.

675-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், முத்தக்கா சென்பது-கோரைக் கிழங்கு, வேலியென்பது—கொடிவேலி,

676-வது பாட்டு கையானென்பது—கரிப்பான்.

678-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர், பச்சைப்பூர மென்பது—பச்சைக் கற்பூரம்.

679-வது பாட்டு சந்தனமென்பது—சந்தனத்தூள்.

680-வது பாட்டு மேஷப்பாலென்பது—வெள்ளாட்டுப்பால்.

684-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், குமரியென்பது—சோற்றுக் கற்றாழை.

686-வது பாட்டு நிம்பயெண்ணெயென்பது—வேப்பெண்ணெய்.

689-வது பாட்டு தந்தியென்பது—நேர்வாளம், பரமன்விந்தென்பது—ரசம்.

691-வது பாட்டு வெள்ளை யென்பது—பாஷாணம், பாணியென்பது—தண்ணீர்.

692-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம். பாணியென்பது—தண்ணீர், பொற்றலை யென்பது—கரிப்பான்.

693-வது பாட்டு முன்சாறென்பது—கரிப்பான் சாறு.

694-வது பாட்டு கெந்தியென்பது-கெந்தகம், பொற்றலை யென்பது-கரிப்பான்.

695-வது பாட்டு சோற்றிலென்பது—கற்றாழைச் சோற்றில்.

696-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், கெந்தியென்பது-கெந்தகம், வன்னியென்பது—லிங்கம்.

697-வது பாட்டு வன்னியென்பது—லிங்கம், பூமிபுடமென்பது—பூமிக்குட் புதைத்தெடுப்பது.

698-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

700-வது பாட்டு இராமதேவரென்பது—யாகோபு.

யாகோபு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய
வைத்திய சிந்தாமணி 700-க்கு
பரிபாஷை அரும்பதவுரை.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய சிந்தாமணி எழுநூறின் சூத்திரமாகிய

# குருநூல் ஐம்பதுக்கு

## பரிபாஷை—அரும்பதவுரை.

### இரண்டாவது சாஸ்திரம்.

2-வது பாட்டு பூநீரென்பது—தை, மாசி, பங்குனி மாதங்களில் உவர் நிலத்திற் பூக்கக்கூடிய உப்பாம், தசதீட்சை யென்பது—மேற் கண்ட பூநீருப்பைப் பத்துத்தடவை கரைத்தும் பத்துத் தடவை காயவைத்தும் உப்பெடுப்ப தென்றறிக, கரியுப் யென்பது—கஞ்சியுப்பைத் தண்ணீர்விட்டுக் கரைத்துப் பத் துத்தரங் காய்ச்சி உப்பெடுப்பதாம்.

3-வது பாட்டு வெடியுப்பை ஐந்துதரங் காய்ச்சி யெடுப்பதற்குப் பெயர் ஐந்தாங்காய்ச்சல் வெடியுப்பாம் என்ப.

4-வது பாட்டு வெள்ளைக்கல் லென்பது—உவர்நிலத்தி னடியிலிருக்கிற வெள்ளைக் கல்லாம், அக்கல்லைக் கொண்டுவந்து காளவாயலில் வேகவைத்து நீற்றிச்சுண்ணும்பு எடுப்பது, வீரம் பூரம் போட்டு என்பது—வீரம் பலமரைக்கால் பூரம் பலமரைக்கால் எனப.

6-வது பாட்டு சிறு பீளையென்பது—பீளைச்செடி, குருச்சுண்ணமென் பது—முப்பு.

7-வது பாட்டு சீலைமண் செய்தென்பது—மருந்தையுட் சட்டியில் வைத்து மேலே சட்டிமூடி வாய்வழியாய் ஆவிவராமல் மண் சீலைசெய்வது.

8-வது பாட்டு கண்புகைச்ச லென்பது—கண்ணுக்குப் புகைபோலத் தெரிவது.

9-வது பாட்டு குருவென்பது—முப்பூ, குக்குடமென்பது—கோழிப் புடம்.

10-வது பாட்டு வாய்ரோக மென்பது—வாய்ச்சூலை.

11-வது பாட்டு அமுதப்பாலென்பது—கன்னியர் முலைப்பால், குரு வென்பது—முப்பூ, குக்குடமென்பது—கோழிப்புடம்.

12-வது பாட்டு முறைக் காய்ச்ச லென்பது—மூன்று முறைக் காய்ச்சல்.

13-வது பாட்டு வங்கமென்பது—ஈயம்.

14-வது பாட்டு குருவென்பது—முப்பூ, வராகபுடமென்பது-பன்றிப் புடம், அப்புடத்திற்கு எரு 50.

15-வது பாட்டு சூதமென்பது—ரசம், ரவியென்பது—சூரியன்.

16-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

17-வது பாட்டு ஐங்கோலத் தைலமென்பது—அழிஞ்சித்தைலம், ரவி யென்பது—சூரியன்.

18-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

19-வது பாட்டு ஐங்கோலக்கரு வென்பது—பிண்டக்கரு.

20-வது பாட்டு குழித்தைலமென்பது—நெருப்பிட்டுக் குழித்தைல மிறக்குவது.

21-வது பாட்டு அழியாத்தேகத் தோடிருக்க என்பது—மூலிகைக் கற்பத்தைப் புசிக்க வேண்டுமென்ப.

22-வது பாட்டு துத்திச்சாறென்பது—மஞ்சள்நிறப் பூவுள்ள துத்தி யிலையைப் பிடுங்கி வந்து தண்ணீர் விட்டிடித்துச் சாறெடுப்பது.

23-வது பாட்டு ஊர்சத்தி யமுரியென்பது—கழுதைநீர், முத்தக்கா சென்பது—கோரைக் கிழங்கு.

24-வது பாட்டு முன்சாறென்பது—ஒன்பது வகைச்சாறு, குருவென் பது—முப்பூ.

25-வது பாட்டு ஒருகரண்டி யென்பது—ஒருபொட்டுக் கரண்டி என்ப.

26-வது பாட்டு கனக வுப்பென்பது—கஞ்சியுப்பு.

27-வது பாட்டு கலசமென்பது—சிறுகலயம்.

28-வது பாட்டு அயப்பொடி யென்பது—இரும்புப்பொடி, ரவியென்பது—சூரியன்.

29-வது பாட்டு முன்சாறென்பது—நாவற்பட்டைச்சாறு, குருவென்பது—முப்பூ.

30-வது பாட்டு தேனிலுண்ணவென்பது-சுயமானதேனிற் குளப்பிச் சாப்பிடுதலாம். அஃதைக் காலை மாலை ஆறுவேளை சாப்பிட வேண்டு மென்ப.

31-வது பாட்டு சுத்தஜல மென்பது—பனிநீர், ஆவின்பா லென்பது-பசுவின்பால்.

32-வது பாட்டு புத்தோடென்பது—புதுவோடு.

33-வது பாட்டு ஆவின்பாலென்பது—பசுவின்பால், ரவியென்பது—சூரியன்.

34-வது பாட்டு ஆவின்பாலென்பது—பசுவின்பால்.

35-வது பாட்டு தேசிநீரென்பது—கழுதைநீர்.

36-வது பாட்டு எழு சீலையென்பது—மண்சீலை, கெசபுடமென்பது—இரண்டு முழப்புடம்.

37-வது பாட்டு குருவென்பது—முப்பூ.

38-வது பாட்டு தாமிரமென்பது—செம்பு, முப்பாலென்பது—வெள்ளெருக்கன் பால், குருவென்பது—முப்பூ.

39-வது பாட்டு கெசப்புடமென்பது—இரண்டுமுழப்புடம், ஆவின் நெய்யென்பது—பசுவின்நெய்.

40-வது பாட்டு கரிசாலைச்சாறென்பது—கரிப்பான் சாறு.

41-வது பாட்டு குருவென்பது—முப்பூ.

42-வது பாட்டு அந்தஇலை யென்பது—கருந்துளசி.

43-வது பாட்டு ஒருசாமமென்பது—ஆறுநாழிகை.

44-வது பாட்டு குருவைப் பூசி யென்பது—முப்பூவைப் பூசுதல்,
மேற்சொன்ன இலையென்பது—கருவூமத்தனிலை.

45-வது பாட்டுகுருவென்பது—முப்பூ.

46-வது பாட்டு ரவியென்பது—சூரியன்.

47-வது பாட்டு கரியுப்பென்பது—கஞ்சியுப்பு.

50-வது பாட்டு முதல் 54--வது பாட்டுவரை நூற்கோர்வைகளின் விபரங்கூறியிருக்கிறார்.

55-வது பாட்டு என் பேர் இராமதேவரென்பது-முன்னம் இராமதேவராயிருந்தவர் பின்பு மக்கமாநகர் சென்று யாகோபென்று பெயர் பெற்றுக் கொண்டனராம்.

முக்கிய குறிப்பு :—யாகோபு திருவாய் மலர்ந்தருளிய வைத்திய சிந்தாமணி 700-ம் அதன்குருநூலாகிய இந்த 50-ம் இவர் சொல்லிய மற்ற பதினேழு நூல்கட்கும் பொதுநூலாகும்.

இன்னும் ஷை வைத்திய சிந்தாமணி 700ரில் வாதவைத்தியஞ் செய்வதற்குச் சுண்ணமுறைகள் ஏராளமாய்ச் சொல்லியிருப்பினும் அவைகளை விரித்துச் சொல்ல வேணுமென் றெண்ணங்கொண்டவராய் சுண்ணக்காண்டம் 600-ம் அதற்குச் சூஸ்திர சுண்ணம் 300-ம் அதற்குச் சூஸ்திரம் 155-ம் அதற்குச் சூஸ்திரம் 55-ம் தெளிவாய்ச் சொல்லி யிருக்கின்றனர்.

மற்றும் வைத்திய சிந்தாமணி 700ரில் வாதவைத்தியஞ் செய்வதற்குச் செந்தூர முறைகள் ஏராளமாய்ச் சொல்லியிருப்பினும் அவைகளை விரித்துக் கைபாக செய்பாகத்தோடு சொல்லவேணுமென்றெண்ணங் கொண்டவராய் செந்தூரம் 300-ம் அதற்குச் சூஸ்திரம் 155-ம் அதற்குச் சூஸ்திரம் 85-ம் மிகத் தெளிவாய்ச் சொல்லி யிருக்கின்றனர்.

இன்னும் வைத்திய சிந்தாமணி 700ரில் வாதக்களங்கு செய்யு முறைகளையும் அதைப் பஞ்சமித்திரஞ் செய்யவேண்டிய வகைகளையும் இடைபாகஞ் செய்பாகங்களையுஞ் சிறிது சொல்லியிருப்பினும் அதைவிரித்துச் சொல்ல வேண்டுமென்றெண்ணங் கொண்

டவராய் வாதக்களங்கு 300-ம் அதை மித்திரஞ் செய்வதற்குப் பஞ்ச மித்திரம் 300-ம் இடைபாகம் 16-ம் செய்பாகம் 16-ம் மிகத்தெளிவாய்ச் சொல்லி யிருக்கின்றனர்.

அன்றியும் வைத்திய சிந்தாமணி 700ரில் வைத்திய பாகங்கள் ஏராளமாய்ச் சொல்லியிருப்பினும் அதைவிரித்துச் சொல்லவேணுமென்றெண்ணங் கொண்டவராய் வைத்தியவாத சூஸ்திரம் 400-ம் அதற்கு சூஸ்திரம் 300-ம் அதற்கு சூஸ்திரம் 56-ம் இவைகள் யாவுக்குங் குருநூலாகத் தண்டகம் 110-ம் வைத்தியஞ் செய்யு முறைகளையும் மிகத்தெளிவாய்ச் சொல்லியிருக்கின்றனர்.

திருப்புல்லாணி யுப்பென்பது — இராமநாதபுரத்தைச் சார்ந்த முக்கிய திவ்ய க்ஷேத்திரமாகிய திருப்புல்லாணி யென்ற நகர்க்குப் பக்கத்தில் சமுத்திரமெனச் சொல்லா நின்ற ஓர் பெரிய தடாகமிருக்கிறது அந்தத் தடாகத்தில் பலரும் பாரையுப்பெடுக்கிறார்கள். அவ்விடத்திற் கவர்மெண்டார் பந்தோபஸ்து ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

சத்திநாதமென்பது—சமுத்திரத்தில் முத்துச்சிப்பி விளையுமிடத்துத் தண்ணீர்க்குள் உறைந்திருக்கிற உப்புநாத மென்றறிக.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய குருநூல் 50-க்கு
பரிபாஷை அரும்பதவுரை.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற
## யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
# சுண்ணக்காண்டம் 600க்கு
## பரிபாஷை அரும்பதவுரை.

### மூன்ருவது சாஸ்திரம்.

1-வது பாட்டு ஆனந்தமாய் நிறைந்ததென்பது—எங்கும் நிறைந்த பரப்பிரம சொரூபமாகிய கடவுள்.

2-வது பாட்டு நூல்தொகுப்பு என்பது—சாஸ்திரங்களை அளவு படுத்தல் (அதாவது) வரையரை செய்தலாம். ஒழுங்காய்ச் சொல்லுதல், சுருக்கிச்சொல்லுதல் எனினும் பொருந்தும்.

4-வது பாட்டு காயமென்பது—சரீரம்.

6-வது பாட்டு தாளகமென்பது—அரிதாரம், வங்கமென்பது—ஈயம், குருவென்பது—துருசுக்குரு.

9-வது பாட்டு பூநீரென்பது—முப்பூ, பருவம்வந்த பழச்சாறென் பது—பூநீராற்செய்து முடித்த வழலை, பூநீரெடுக்குங்காலத்தில் அப்பொழுதே அந்தப்பூநீரிலிருந்து பிரித்தெடுக்குங் குருநீரா மென்றறிக.

10-வது பாட்டு பூத்தபூவென்பது—பூநீர்.

11-வது பாட்டு பூநீரென்பது—உவர்நிலத்தின்கண் விளைந்ததையெடுக் கக்கூடிய உப்பு, கல்லுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு.

12-வது பாட்டு அமுரியென்பது—திராவகமிறக்கிய அமுரி.

14-வது பாட்டு பூநீரென்பது—உவர்மண்ணி லெடுக்கும் உப்பு.

16-வது பாட்டு நாகமல்லி யென்பது—நாகமல்லிச்செடி.

19-வது பாட்டு கிளிஞ்சியென்பது—சிப்பி.

23-வது பாட்டு குருவண்டென்பது—முப்புக்குரு வென்றும் கொழு ஞ்சி வண்டென்றுங் கூறுவர், குக்குடமென்பது—கோழி, அமுரியென்பது-சிறுநீர், அண்டமென்பது-கோழிமுட்டை.

26-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

27-வது பாட்டு கல்லுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு.

28-வது பாட்டு வேதையென்பது—தங்கம்.

35-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

42-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

43-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

45-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

48-வது பாட்டு பூநீரென்பது—உவர்மண்ணுப்பு, சீனமென்பது—சீனக்காரம், கல்லுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு.

49-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

62-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

69-வது பாட்டு பூநீரென்பதற்கு-வழலையென்றும், பிண்டமென்றும்—வெண்சாரை யென்றும் அண்டமென்றுங் கூறுவர்.

76-வது பாட்டு சிவமென்பது—ஜலம், அதுமழை விழும்போது சேர்ந்து விழக்கூடிய பனிக்கட்டி ஆலங்கட்டி என்றுகூறுவர்,

85-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

86-வது பாட்டு தெளிந்த நீரென்பது—முட்டைநீர்.

92-வது பாட்டு எஃகு என்பது—உருக்கு.

97-வது பாட்டு சூதமணி யென்பது—ரசமணி.

101-வது பாட்டு கெந்தியென்பது-கெந்தகம், பொற்றலை யென்பது—கரிப்பான்.

102-வது பாட்டு கையானென்பது—கரிப்பான்.

104-வது பாட்டு ரசசெந்தூரம் உண்டு தேரென்பது—கற்பகோடி காலமிருப்பதற்கு.

121-வது பாட்டு வாரிக்குள் சத்திகாதமென்பது — சமுத்திரத்தி லுறைந்திருக்கும் கல்லுப்பு, பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு.

123வது பாட்டு கிளிஞ்சிநீரென்பது—சிப்பியை நீற்றி எடுக்குஞ் சுண்ணாம்பு.

138-வது பாட்டு பரித்தகடென்பது—தங்கம்.

146-வது பாட்டு கல்லுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு.

149--வது பாட்டு கல்லுப்புக்கட்டி யென்பது—திருப்புல்லாணி யுப்பு.

157-வது பாட்டு நூலெல்லாம் பார்க்கவேணுமென்பது—வழிதுறை தெரிவதற்காக 17 நூல்களையும் பார்க்கவேண்டு மென்றார்.

165-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

177-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

184-வது பாட்டு பரியென்பது—தங்கம்.

186-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

191-வது பாட்டு அருணனென்பது—சூரியன்.

196-வது பாட்டு அண்டமென்பது—கோழிமுட்டை, செந்துருக்கத் திற்குள்ளிட்டென்பது—குகைக்குள்ளிட்டு.

199-வது பாட்டு அண்டமென்பது—கோழிமுட்டை.

200-வது பாட்டு பரியென்பது—தங்கம்.

205-வது பாட்டு ஆவெருத்தானென்பது—காளைமாடு.

207-வது பாட்டு ரவிபுடமென்பது—சூரியபுடம்.

208-வது பாட்டு அருணனென்பது—சூரியன்.

211-வது பாட்டு அண்டமென்பது—கோழிமுட்டை.

213-வது பாட்டு கருவளையலென்பது—கருத்த வளையல், அண்டத் தைலமென்பது—முட்டைத் தைலம்.

228-வது பாட்டு வேதையென்பது—வகாரம்.

248-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

249-வது பாட்டு கல்லுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு.

250-வது பாட்டு பழச்சாறென்பது — எலுமிச்சம்பழச்சாறு, அயமென்பது—இரும்பு.

254-வது பாட்டு சூடனிந்து என்பது—சூடன் பூநீரு.

256-வது பாட்டு சத்திராதமென்பது—சமுத்திரத்துக் குள்ளிருக்கிற கல்லுப்பு, பழமென்பது—எலுமிச்சம்பழம்.

257-வது பாட்டு கல்லுப்பென்பது—திருப்புல்லாணி யுப்பு.

259-வது பாட்டு கிளிஞ்சலென்பது—சிப்பி, அமுரியென்பது-சிறுநீர்.

267-வது பாட்டு லவணமென்பது—உப்பு.

271-வது பாட்டு சுத்தஜலமென்பது—அமுரி, அமுரி என்பது—சிறுநீர்,

274-வது பாட்டு கெந்தி யென்பது—கெந்தகம்.

278-வது பாட்டு அருணனென்பது—சூரியன்,

283-வது பாட்டு உமுரியிலை யென்பது—சமுத்திரத்துக்குப் பக்கத்திலுள்ள காட்டிலிருக்கிற ஒருவகைப் பச்சிலை.

290-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

292-வது பாட்டு கருவின்வேதை யென்பது—ரசவாதம்.

294-வது பாட்டு உப்பின் மெழுகைச் சாப்பிட்டால் நரைதிரையற்றுத் தேகஞ் சந்திரசூரியப் பிரகாசம்போலிருக்கு மென்ப.

303-வது பாட்டு லவணமென்பது—உப்பு.

805-வது பாட்டு ஏமமென்பது—தக்கம்.

308-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

309-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு.

311-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

312-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

325-வது பாட்டு கல்லுப்பென்பது—சத்திராதம்.

329-வது பாட்டு மேனிச்சாறென்பது—குப்பைமேனிச்சாறு.

333-வது பாட்டு முத்தீயென்பது—தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி.

335-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

344-வது பாட்டு கல்லுப்பென்பது—திருப்புல்லாணிப் பாரையுப்பு.

347-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனியென்பது—குப்பைமேனி.

348-வது பாட்டு மேனிச்சாறென்பது—குப்பைமேனிச்சாறு.

349-வது பாட்டு பொற்றலை யென்பது—கரிப்பான்.

362-வது பாட்டு கல்லுப்புக்கட்டென்பது—உப்புக்கட்டு.

366-வது பாட்டு கெதையென்பது—உப்பினுற்செய்த மாத்திரைக்கோல்.

378-வது பாட்டு பள்ளியென்பது—இஸ்லாமானவர்கள் காலை மாலை தொழக்கூடிய பள்ளிவாசல் அதாவது தேவாலயம்.

387-வது பாட்டு பாணியென்பது—பூநீரில்விட வேண்டிய தண்ணீர்.

395-வது பாட்டு சூதமணியாகு மென்பது—துருசுச் சுண்ணத்தை விராலியிலையிற்போட்டு நீரெடுத்து அந்தநீரைக் கரண்டியில் விட்டுச் சூதமென்ற ரசத்தை அதில் விட்டுக் காயவைக்க மணிபோற்கட்டிப் போகுமெனத் தெளிவாய்க் கூறியிருக்கின்றனர்.

397-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

408-வது பாட்டு சத்தென்பது—களங்கு, மதியென்பது—வெள்ளி.

409-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

411-வது பாட்டு மல்லிச்சாறென்பது—நாகமல்லிச்சாறு, கெந்தியென்பது—கெந்தகம்.

412-வது பாட்டு முத்தீயென்பது—தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினி.

415-வது பாட்டு மணிச்சாறென்பது—உத்தாமணிச்சாறு, உத்தாமணியென்பது—வேலிப்பருத்தி.

418-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

420-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

421-வது பாட்டு அன்னமென்றபேதி யென்பது—அன்னபேதி.

427-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

428-வது பாட்டு சோரனென்பது—வீரம்.

431-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், சிலையென்பது—மனோசிலை.

433-வது பாட்டு லவணமென்பது—உப்பு.

434-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

438-வது பாட்டு கள்ளிப்பாலென்பது—சதுரக்கள்ளிப்பால்.

440-வது பாட்டு வெள்ளையென்பது—வெள்ளைப்பாஷாணம், ப்பால் முறிந்த நீரென்பது—செயநீர், அயவகல் என்பது—இரும்புடப்பி.

446-வது பாட்டு எருக்கன்பால் தெளிந்தநீரென்பது—செயநீர், அயச்செப்பென்பது—இரும்புடப்பி.

447-வது பாட்டு குருவென்பது—ரசக்குரு வங்கக்குரு துருசக்குரு மூப்புக்குரு நாகக்குரு லிங்கக்குரு கெந்திக்குரு தாமிரக்குரு உப்புக்குரு வெடியுப்புக்குரு பாஷாணககுரு வீரக்குரு வெள்ளிக்குரு தங்கக்குரு தாளகக்குரு இன்னும் அனேகமாம்.

449-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

454-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

468-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

469-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

472-வது பாட்டு மஞ்சளென்ற கருவென்பது—முட்டைக்கரு.

473-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, சீனமென்பது—சீனக்காரம்.

474-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

478-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

483-வது பாட்டு அன்னமென்பது—கற்றுழை.

486-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி, நிகடையென்பது-குகை.

491-வது பாட்டு சீனமென்பது—சீனிக்காரம்.

500-வது பாட்டு ஐந்துசுண்ணமென்பது—நண்டு, நத்தை, சங்கு, வெடியுப்பு, கடல்நுரை.

502-வது பாட்டு உமிழ்நீரென்பது—வாய்நீர்.

503-வது பாட்டு நவலோகமென்பது—தங்கம், செம்பு, வெள்ளி, வங்கம், நாகம், அயம், வெங்கலம், பித்தளை, கருவங்கம் ஆக ஒன்பதென்றறிக.

507-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

508-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

511-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

516-வது பாட்டு கூக்குரலாய்ச் செய்யாதே என்பது—கூட்டமில்லாமலுஞ் சந்தடியில்லாமலு மிருக்கிற விடத்தில் மருந்துகளைச் செய்யவேண்டுமாம்.

519-வது பாட்டு முத்தியென்பது—தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினி, பனிரெண்டுங் கடந்தபின் னென்பது—சாமஞ் சென்ற பிறகு

541-வது பாட்டு துருசுக்குப் புருடனென்பது—அயம், துருசுக்கும் அயத்திற்குந் தாயென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

545-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

555-வது பாட்டு சீனமென்பது-சீனக்காரம், கிளிஞ்சிலென்பது-சிப்பி,

557-வது பாட்டு அண்டோடென்பது—கோழிமுட்டை ஓடு.

559-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

569-வது பாட்டு அன்னமென்பது—கற்றுழை.

578-வது பாட்டு வாங்கென்பது—தோத்திரம் அல்லது கலிமா.

581-வது பாட்டு வைத்தியமுன்னே சொன்னேனென்பது—வைத்திய சிந்தாமணியை முதலிற்சொல்லி இரண்டாவது களங்கு 300 ரைச்சொல்லி மூன்றுவது பஞ்சமித்திரம் 300ரைச்சொல்லினர் என்றறிக.

594-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

601-வது பாட்டு முதல் 604-வது பாட்டுவரை இராமதேவர் தான் சதுரகிரியிலிருக்கும்போது பாடிய நூல்களின் கோர்வைகளைச் சொல்லியிருக்கிறு யென்றறிக.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய சுண்ணக்காண்டம்

600-க்குப் பரிபாஷை அரும்பதவுரை.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சுண்ணக்காண்டம் அறுநூறுக்குச் சூஸ்திரமாகிய

# சுண்ணம் 300-க்கு

# பரிபாஷை அரும்பதவுரை.

## நான்காவது சாஸ்திரம்.

7-வது பாட்டு அயமென்பது-இரும்பு, பொட்டலுப்பென்பது-வெடி யுப்பு.

9-வது பாட்டு புஷ்டியென்பது—மஸ்டு, அதாவது வண்டல் அழுக்கு.

10-வது பாட்டு மடையனென்பது—துருசு.

12-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர், வங்கமென்பது—ஈயம்.

14-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

15-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

16-வது பாட்டு ரவியென்பது—செம்பு, கழுதையமுரியென்பது—கழுதை நீர்.

18-வது பாட்டு வங்கராஜனென்பது—ஈயம்.

19-வது பாட்டு வாதத்தின் கருவென்பது-வங்கம் தங்கம் நாகம் துருசு அயம் என்பனவாம். இவைஐந்துஞ் சேரிற் சரியான தங்கமாகும்.

20-வது பாட்டு புகைநீரில்லாத போனலென்பது—திராவகமில்லாது போனல் என்ப.

26-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு.

29-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

36-வது பாட்டு வேதையென்பது—தங்கம்.

39-வது பாட்டு ஆவாரை பஞ்சாங்கமென்பது—ஆவாரைச்செடியின் விரை இலை பூ பிஞ்சு வேர்ப்பட்டை.

40-வது பாட்டு கற்றுழையென்பது-சோற்றுக் கற்றுழை, புகைநீரென்பது—திராவகம்.

41-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

42-வது பாட்டு காகதுண்டியென்பது—காகநிமிளை காக்கைப்பொன்.

45-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

57-வது பாட்டு சீனமென்பது—சீனக்காரம்.

58-வது பாட்டு அண்டவெண்கரு வென்பது—கோழிமுட்டை வெள்ளைக்கரு.

59-வது பாட்டு முன்னீரென்பது—எருக்கன்பால், அண்ட வெண்கரு வென்பது—கோழிமுட்டை வெள்ளைக்கரு.

60-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

63-வது பாட்டு ராஜாவென்பது-துருசுக்குருச்சுண்ணம், வேதையென்பது—தங்கஞ் செய்யும் ரசவாதம்.

68-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம்.

72-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம்.

76-வது பாட்டு அரனென்பது—ரசம், வேதையென்பது—ரசவாதம்.

78-வது பாட்டு கற்றுழையென்பது—சோற்றுக் கற்றுழை.

79-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

83-வது பாட்டு குமரியென்பது—சோற்றுக்கற்றுழை.

86-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

87-வது பாட்டு குமரியென்பது—சோற்றுக்கற்றுழை, அன்னமென்பது—கற்றுழைச்சோறு.

90-வது பாட்டு தளக்கர்த்தனென்பது—வங்கம், லிங்கம்.

95-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

96-வது பாட்டு கற்றாழையென்பது—சோற்றுக்கற்றாழை, கன்னிப் பாலென்பது—அமுதப்பால்.

99-வது பாட்டு கற்றாழைஎன்பது-சோற்றுக்கற்றாழை, பழமென்பது எலுமிச்சம்பழம்.

100-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

101-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

107-வது பாட்டு கன்னியர் பாலென்பது—அமுதப்பால்.

108-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

109-வது பாட்டு கற்றாழை என்பது—சோற்றுக்கற்றாழை.

111-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம்.

112-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

113-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

121-வது பாட்டு நிகளை யென்பது—குகை.

122-வது பாட்டு நிகளை யென்பது—குகை.

125-வது பாட்டு கன்னிநீரென்பது—சோற்றுக்கற்றாழை நீர்.

126-வது பாட்டு முன்னுரைத்த நீரென்பது—ஷெ நீர்.

127-வது பாட்டு மதி யென்பது—வெள்ளி.

137-வது பாட்டு குமரிநீரென்பது—சோற்றுக்கற்றாழை நீர்.

138-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, சீனமென்பது—சீனக்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

141-வது பாட்டு கள்ளிப்பாலென்பது—சதுரக்கள்ளிப்பால்.

145-வது பாட்டு சுவானமென்பது—நாய்.

161-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

162-வது பாட்டு ¦ப்பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, கதிரென்பது—சூரியன்.

163-வது பாட்டு கற்றூழையென்பது—சோற்றுக்கற்றூழை.

164-வது பாட்டு கன்னியா குமரி என்பது—கற்றூழை, கந்தமென்பது—காந்தம், முன்னீரென்பது-சோற்றுக்கற்றூழைச்சாறு.

165-வது பாட்டு முன்கன்னி நீரென்பது—சோற்றுக் கற்றூழை நீர்.

168-வது பாட்டு துப்பாக்கூட்டி. யென்பது-தேனைச் சேர்க்கவேண்டும் யென்ப.

170-வது பாட்டு கெந்தி என்பது—கெந்தகம்.

171-வது பாட்டு கன்னிப்பாலென்பது—அமுதப்பால்.

181-வது பாட்டு குக்குடப்புடமென்பது—கோழிப்புடம்.

182-வது பாட்டு கன்னியாகுமரி யென்பது—சோற்றுக் கற்றூழை.

187-வது பாட்டு கிளிஞ்சி நீரென்பது—சிப்பி நீர், நீலனென்பது—துருசு.

188-வது பாட்டு கற்றூழைச்சாறென்பது — சோற்றுக் கற்றூழைச் சாறு.

189-வது பாட்டு கன்னிநீரென்பது—சோற்றுக் கற்றூழைச் நீர். குக்குடப்புடமென்பது—கோழிப்புடம்.

190-வது பாட்டு முன்னீரென்பது—சோற்றுக்கற்றூழைச்சாறு.

191-வது பாட்டு கன்னிநீ ரென்பது—சோற்றுக் கற்றூழைச்சாறு.

193-வது பாட்டு ரசகெந்தியென்பது—ரசம், கெந்தம்.

194-வது பாட்டு முன்னீரென்பது—சோற்றுக்கற்றூழை நீர்.

197-வது பாட்டு செம்மறியாட்டுப் பாலென்பது—செம்புலியாட்டுப் பால்.

198-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு.

199-வது பாட்டு கன்னிநீரென்பது—சோற்றுக்கற்றூழைச்சாறு.

200-வது பாட்டு கற்றூழைப் பாலென்பது — சோற்றுக்கற்றூழைப் பால்.

201-வது பாட்டு காரமென்பது—பொரிகாரம்.

202-வது பாட்டு பஞ்சமித்ர மென்பது—புல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், நெய், தேன், முதலியவைகளைக் கொண்டு சரக்குகளைப் பேதிக்கச்செய்வது.

204-வது பாட்டு கள்ளிப்பாலென்பது—சதுரக் கள்ளிப்பால், ரசகெந்தி யென்பது—ரசம் கெந்தகம்.

208-வது பாட்டு செம்பெடுக்குஞ் சரக்குகள்—அயம் காந்தம் துருசு கெந்தி அரிதாரம் வங்கம் தங்கம் நாகம் குடவன் முதலியன.

214-வது பாட்டு சீனமென்பது-சீனக்காரம், கல்லுப்பென்பது-திருப் புல்லாணி பாரையுப்பு, உருவியுப் பென்பது—நாயுருவி உப்பு.

212-வது பாட்டு கழுதைக்கத்தமென்பது—கழுதை லத்தி.

214-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம், புகைநீ ரென்பது—திராவகம்.

226-வது பாட்டு காயசித்தியென்பது—சரீரமழியாது நிலைத்திருக்கச் செய்தலாம்.

233-வது பாட்டு கழுதை முள்ளியென்பது—கழுதை முள்ளிச்செடி.

234-வது பாட்டு கெருடக் கிழங்கென்பது—கருடன் கிழங்கு, சிலையுங் கெந்தியென்பது—மனோசிலைகெந்தகம், சீனமென்பது—சீனக் காரம்.

235-வது பாட்டு அன்னமென்ற பேதியென்பது—அன்னபேதி.

236-வது பாட்டு இரதமகாலிங்கமென்பது—ரசம் லிங்கம்.

253-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம்.

255-வது பாட்டு கன்னிப்பாலென்பது—அமுதப்பால்.

256-வது பாட்டு கன்னியர்பாலென்பது—அமுதப்பால்.

257-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

261-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

267-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

269-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம், மதியென்பது—வெள்ளி.

276-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, சேவற் புடமென்பது—கோழிப்புடம்.

277-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

281-வது பாட்டு அண்டம்போற்சீவு என்பது — கோழிமுட்டையோட்டைப் போற்சீவுவது, அண்டோடு என்பது-முட்டையோடு.

282-வது பாட்டு வெண்கருவென்பது—கோழிமுட்டைக்கரு.

283-வது பாட்டு கருவென்பது-கோழிமுட்டைக்கரு, கிளிஞ்சிலென்பது—சிப்பி.

284-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

287-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், புகைநீ ரென்பது—திராவகம்.

293-வது பாட்டு கன்னியாகுமரியென்பது—கற்றாழை.

300-வது பாட்டு சுரபிமணியென்பது—ரசமலரி.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சுண்ணக் காண்டம் 600-க்குச் சூஸ்திரமாகிய சுண்ணம் 300-க்குப் பரிபாஷை அரும்பதவுரை.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

சுண்ணம் முந்நூறுக்குச்

# சூஸ்திரம் 155-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை.

### ஐந்தாவது சாஸ்திரம்.

3-வது பாட்டு ரவியென்பது—செம்பு, வேதையென்பது—ரசவாதம்.

15-வது பாட்டு கிளிஞ்சிலென்பது-சிப்பி, அண்டமென்பது-முட்டை சங்கென்பது—பாலுச்சங்கு, நத்தையென்பது — கண்மாய், குளம், முதலிய இடங்களி லிருக்கிற ஒருவகைப் பூச்சிக்கூடு, சுக்கான்கல்லென்பது—வெள்ளைக்கல்.

16-வது பாட்டு தருசுச்சுண்ணத்திற்கு—வழலையென்றுஞ் சவுக்கார மென்றுஞ் சாரையென்றும் பெயராம்.

21-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

23-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

24-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

35-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

37-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம், சீனமென்பது—சீனக் காரம்.

47-வது பாட்டு உமிழ்நீரென்பது—வாய்நீர்.

49-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

54-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம்.

58-வது பாட்டு உமிழ்நீரென்பது—வாய்நீர், குக்குடமென்பது— கோழிப்புடம்.

68-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு.

70-வது பாட்டு கன்னிப்பாலென்பது—அமுதப்பால்.

72-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம், தாரமென்பது—அரிதாரம்.

73-வது பாட்டு குக்குடமென்பது-கோழிப்புடம், புகைநீரென்பது-திராவகம்.

75-வது பாட்டு உமிநெருப்பென்பது—உமிப்புடம்.

86-வது பாட்டு வெள்ளைக்கல்சுத்தியென்பது—உவர்மண்ணில்தண்ணீரூற்றிக்கலக்கி அதில் வெள்ளைக் கல்லைப்போட்டு வற்றக்காய்ச்சிச் சுத்தஜலத்தில் கழுவியெடுப்பது.

87-வது பாட்டு மடையனென்பது—துருசு வெள்ளைத்துத்தம்.

90-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

93-வது பாட்டு கதலியென்பது—வாழை.

100-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

105-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

107-வது பாட்டு சீனமென்பது—சீனக்காரம்.

110-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

112-வது பாட்டு மயிர்க்குச்சியென்பது—புருசு.

113-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

118-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம்.

119-வது பாட்டு வெடியென்பது—வெடியுப்பு.

120-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

121-வது பாட்டு எண்ணெயென்பது—எள்ளெண்ணெய்.

123-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

131-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

132-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

149-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

154-வது பாட்டு வழுத்தினேன் சுண்ண மென்ற காண்டந்தன்னை யென்பது—சுண்ணஞ் செய்யக் கூடியவர்கள் சுண்ணக் காண்டம் 600-ம் சுண்ணம் 300-ம் பார்த்து அதன்பின்பு 155-ம் அப்பால் அதன் சூஸ்திரம் 55-ம் பார்க்கவேண்டுமா மென்ப,

## யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சுண்ண 300-க்குச் சூத்திரம் 155-க்கு பரிபாஷை அரும்பதவுரை.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

## யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

## சுண்ண சூஸ்திரம் 155-க்கு

# சூஸ்திரம் 55-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை

### ஆறுவது சாஸ்திரம்.

1-வது பாட்டு ஏரியிலே வளர்ந்த பிண்ட மென்பது—கண்மாய்களில் உண்டாகக்கூடிய கும்பிடுசிப்பி.

3-வது பாட்டு குக்குடமென்பது—கோழிப்புடம்.

4-வது பாட்டு முன்னீரென்பது-ஜெயநீர், குக்குடமென்பது-கோழிப் புடம்.

5-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

6-வது பாட்டு கனகமென்பது—தங்கம், ஆறுதலமேறிப் பாரென்பது—வாசிப் பழக்கத்தால் ஆறு ஆதாரங்களிலுமேறி நின்று பார்ப் பதாம்.

7-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

8-வது பாட்டு பொற்றலை யென்பது—கரிப்பான், ஏமமென்பது—தங்கம்.

9-வது பாட்டு சோமனென்பது—சந்திரன்.

10-வது பாட்டு கருநாக மென்பது—கருவங்கம், அசமென்பது—வெள் ளாடு, அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

11-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

14-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

15-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை.

16-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை.

17-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

18-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

20-வது பாட்டு பொற்றலை யென்பது—கரிப்பான், ஏமமென்பது—தங்கம்.

22-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

25-வது பாட்டு வாசுகியென்பது—நாகம், காரியென்பது—காரீயம், அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை.

26-வது பாட்டு எடுத்தன்னமென்பது—சோற்றுக்கற்றாழை, துருசு ரவி யென்பது—துருசுச் செம்பு, ஏமமென்பது—தங்கம்.

30-வது பாட்டு புகைநீரென்பது — திராவகம், கேசரமென்பது — உரோமம்.

31-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

32-வது பாட்டு அயச் செம்பென்பது—இரும்பு சேர்த்தெடுக்கக் கூடிய செம்பு.

34-வது பாட்டு வேதையென்பது—இரசவாதம்.

35-வது பாட்டு எரிபுழுவென்பது—சவ்வாது, வண்டென்பது—குரு வண்டு முப்பு, உரமென்பது—வெள்ளுரம், சூதமென்பது—ரசம், கார்முகியென்பது—கார்முகிற் பாஷாணம்.

35-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன்.

38-வது பாட்டு மட்டமென்பது—நாலுமாற்றுப் பொன்.

39-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

40-வது பாட்டு சோரமென்பது—உரோமம், மதியென்பது-வெள்ளி.

41-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

42-வது பாட்டு கேசரமென்பது—உரோமம்.

44-வது பாட்டு மால்தேவி யென்பது—அரிதாரம், சிலையென்பது—மலைச்சிலை, கெந்தியென்பது—கெந்தகம்.

47-வது பாட்டு சத்துருக்குங் காலமென்பது—ஐப்பசி கார்த்திகை மார்கழி மாதங்கள்.

48-வது பாட்டு குருமுடிக்குங் காலமென்பது—தை மாசி பங்குனி மாதங்கள்.

49-வது பாட்டு செந்தூரஞ் செய்யுங் காலமென்பது—ஆடி ஆவணி புரட்டாசி மாதங்கள்.

50-வதுபாட்டு புடத்திட்டமென்பது-எருவொன்று காடைப்புடமாம், எருமூன்று கௌதாரிப்புடமாம், பத்தெருகோழிப்புடமாம், ஐம்பதெரு வராகபுடமாம், நூறெருகெசபுடமாம், ஆயிரம் எரு கனபுடமென்ப.

53-வது பாட்டு எரிப்புத்திட்ட மென்பது—ஒரு விறகு தீபமாகும், இரண்டுவிறகு கமலமாகும், ஐந்துவிறகு காடாக்கினியாகும்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
சுண்ண சூஸ்திரம் 155-க்கு சூஸ்திரம்
55-க்கு பரிபாஷை அருப்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நவலோக

# செந்தூரம் 300-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை.

### ஏழாவது சாஸ்திரம்.

2-வது பாட்டு ஆகுவாகன மென்பது-மூஷிகம், நிற்க இவர் ஆயிரத்துச் சொச்சமென ஒரு நூல் பாடியிருக்கிறதாகத் தெரிகிறது. முன்னம் யாகோபென்ற இராமதேவர் பாடிய கற்பம் ஆயிரமென்ற ஒருநூல் அச்சிட்டிருக்கிறது. அதுதானோ அல்லது வேறுள தோ என்பது தெரியவில்லை. இவர் கூறியுள்ள எழுநூறிலும் மற்றைய நூல்களிலுங் காணப்படவில்லை.

3-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

5-வது பாட்டு புண்டரீக இலையென்பது—தாமரைஇலை. மேஷமென்பது—சித்திரை மாதம், சந்திரன்முன் என்பது-பௌர்ணையில் வைக்க ஜலம்பெருகும்.

6-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு, சீனமென்பது—சீனக்காரம்.

7-வது பாட்டு கிளிஞ்சில் நீரென்பது—சிப்பிச் சுண்ணும்பு, முன்னீரென்பது—அண்டச்செயநீர்.

10-வது பாட்டு கருவிற்றெளிந்த நீரென்பது-முட்டைக்கருத்தெளிந்த நீர், ஆட்டமுரி யென்பது—வெள்ளாட்டுநீர்.

11-வது பாட்டு நீலனென்பது—துருசு.

13-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

15-வது பாட்டு அருக்கன் பாலென்பது—எருக்கன்பால்.

16-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

20-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

21-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை, அரன்பீச மென்பது—ரசம், முன்னீரென்பது—கற்றாழைச்சாறு.

23-வது பாட்டு ரவியென்பது—செம்பு, காஞ்சனமென்பது—தங்கம்.

25-வது பாட்டு படைதறத்துமஞ்சனென்பது—வெடியுப்பு.

30-வது பாட்டு படைராஜனென்பது—வெடியுப்பு, நாகவல்லியென் பது—வெற்றிலை.

31-வது பாட்டு முன்சாறென்பது—வெற்றிலைச்சாறு, வன்னியென் பது—லிங்கம்.

33-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

36-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

37-வது பாட்டு அன்னமென்பது-சோற்றுக் கற்றாழை, முன்னீரென் பது—சோற்றுக்கற்றாழைச்சாறு.

38-வது பாட்டு மனிதருண்ணும் உப்பென்பது—கஞ்சியுப்பு.

40-வது பாட்டு சரியன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

41-வது பாட்டு ரவியென்பது—செம்பு, காஞ்சனமென்பது—தங்கம்.

44-வது பாட்டு நாதமென்பது—கெந்தகம், புகைநீரென்பது—வெடி யுப்புத்திராவகம்.

45-வது பாட்டு வன்னியென்பது—லிங்கம், புகைநீரென்பது—வெடி யுப்புத்திராவகம்.

46-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

49-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு, பாணியென் பது—தண்ணீர், பொட்டலையென்பது—வெடியுப்பு.

52-வது பாட்டு காணமென்பது—கொள்ளுப்பயறு.

54-வது பாட்டு முன்சாறென்பது—கொள்ளுச்சாறு.

55-வது பாட்டு ஆவின்பாலென்பது—பசுவின்பால்.

57-வது பாட்டு சுற்கெந்தியென்பது—கெந்தகம்.

58-வது பாட்டு மதுவென்பது—தேன்.

59-வது பாட்டு தில்லம்பாலென்பது—தில்லைப்பால்.

62-வது பாட்டு சிங்கியென்பது—மிருதார்சிங்கி, வச்சிரத்தின்பாலென்பது—சதுரக்கள்ளிப்பால்.

63-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, கிளிஞ்சிலென்பது—சிப்பி.

64-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

65-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

66-வது பாட்டு தில்லம்பாலென்பது—தில்லைப்பால், கிளிஞ்சிலென்பது—சிப்பி.

71-வது பாட்டு சீனமென்பது—சீனக்காரம்.

72-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது-சூடன், வெண்கருவென்பது—முட்டைககரு.

74-வது பாட்டு முன்பாலென்பது—சதுரக்கள்ளிப்பால்.

75-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

77-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

80-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, சீனமென்பது-சீனக்காரம்.

83-வது பாட்டு அண்டவெள்ளையென்பது-கோழிமுட்டை வெண்கரு.

85-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

88-வது பாட்டு அரைபொடி என்பது—இரும்புத்தூள்.

89-வது பாட்டு கருநாகமென்பது—கருவங்கம்.

90-வது பாட்டு பசப்பென்பது-மஞ்சல், அன்னமென்பது-சோற்றுக்கற்றாழை.

91-வது பாட்டு அன்னநீரென்பது—சோற்றுக்கற்றாழைநீர்.

92-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

94-வது பாட்டு தாரமீயமென்பது—அரிதாரத்தி லெடுக்கக் கூடிய சபம்.

95-வது பாட்டு கருநாகமென்பது—கருவங்கம், அசம் நீரென்பது—வெள்ளாட்டுநீர், அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை.

96-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

97-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

100-வது பாட்டு வங்கத்தில் சத்திருந்து வங்கத்தை யுண்டபேர்க்கென்பது—நேர்வாளஞ்சேர்ந்த மருந்தைப் பேதிக்குக் கொடுத்துப் பின்பு தேங்காய்ப்பால் பிழிந்து சுடுசாதத்தில் ஊற்றிச்சாப்பிட வங்கதோஷம் நீங்கும்.

101-வது பாட்டு வங்கச்செந்தூரச் சோதனை—சீனக்காரத்தில் வங்கச் செந்தூரத்தைப் போட்டரைத்துக் கரியிலிட்டுருக்கிப் பார்க்க அது உருகுமாகிற் புசிக்கக்கூடாது.

110-வது பாட்டு சடலநீரென்பது—அமுரி, சாணமென்பது—கொள்ளுப்பயறு, பாணியென்பது—தண்ணீர்.

113-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு, மதுவென்பது—தேன், சீனமென்பது—சீனக்காரம்.

114-வது பாட்டு வன்னியென்பது—லிங்கம்.

120-வது பாட்டு ஒழுகரையென்பது—இரும்பு.

122-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

123-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

124-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

126-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்,

127-வது பாட்டு பீதரென்பது—மஞ்சள் நிறம்.

128-வது பாட்டு பொற்றலையென்பது—கரிப்பான், ரவியென்பது—செம்பு.

129-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

134-வது பாட்டு நிகடையென்பது—குகை, முன்னுரைத்த சாறென்பது—கரிப்பான்சாறு.

135-வது பாட்டு நாளமென்பது—தருத்தி, கிளிஞ்சிலென்பது—சிப்பி.

136-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

137-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம்.

138-வது பாட்டு தந்தியென்பது—நேர்வாளம்.

139-வது பாட்டு நெல்லிமுள்ளியென்பது—நெல்லிவற்றல்.

140-வது பாட்டு முக்கண்ணனென்பது—தேங்காய்.

141-வது பாட்டு அன்னமென்பது—அரிசிச்சோறு.

150-வது பாட்டு திரிபலையென்பது—கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.

155-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

156-வது பாட்டு முக்கண்ணனென்பது—தேங்காய், தந்திவிரை யென்பது—நேர்வாளம்.

158-வது பாட்டு கம்பியுப்பென்பது—வெடியுப்பு, சீனமென்பது—சீனக்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

159-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

160-வது பாட்டு அண்டோடு என்பது—கோழிமுட்டை, பழமென்பது—எலுமிச்சம்பழம்.

162-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, பழமென்பது—எலுமிச்சம்பழம்.

163-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

164-வது பாட்டு ஆட்டமூரியென்பது—வெள்ளாட்டுநீர்.

167-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

168-வது பாட்டு லவணமென்பது—உப்பு.

169-வது பாட்டு கம்பியுப்பென்பது—வெடியுப்பு, காஞ்சனமென்பது—தங்கம்.

173-வது பாட்டு கம்பியுப்பென்பது—வெடியுப்பு, சீனமென்பது—சீனக்காரம்.

175-வது பாட்டு வன்னியென்பது—லிங்கம்.

176-வது பாட்டு மயிர்க்குச்சென்பது—புருசு.

177-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

178-வது பாட்டு மயிர்க்குச்சியென்பது—புருசு.

180-வது பாட்டு கம்பியுப்பு என்பது—வெடியுப்பு, சீனமென்பது—சீனக்காரம்.

182-வது பாட்டு பற்பக்கல்லென்பது—மாக்கல்.

183-வது பாட்டு உமிழ்நீரென்பது—வாய்நீர், ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

184-வது பாட்டு ஆறுதலமென்பது—ஆறுதாரம்: அவை மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, என்பன. ரவியிலேற்று என்பது—சந்திரகலையிற் செல்லாமற் சூரியகலையிலேற்றுதலாம்.

185-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

186-வது பாட்டு வன்னிரசமென்பது—லிங்கரசம், பற்பக்கல்லென்பது—மாக்கல்.

187-வது பாட்டு முக்கண்ணனென்பது—தேங்காய்.

190-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

191-வது பாட்டு காகதுண்டியென்பது—காக்கைப்பொன்.

192-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

198-வது பாட்டு சிவன்விந்தென்பது—சூதம்.

200-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

202-வது பாட்டு மயிர்க்குச்சி யென்பது—புருசு.

203-வது பாட்டு கம்பியுப்பென்பது—வெடியுப்பு, சீனமென்பது—சீனக்காரம், நிம்பமதுப் பழமென்பது—எலுமிச்சம் பழம்.

204-வது பாட்டு பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

206-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

211-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

212-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது--சூடன், பாணியென்பது—தண்ணீர், ரவியென்பது—செம்பு.

213-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, பாணியென்பது—தண்ணீர்.

215-வது பாட்டு காரியென்பது—கருவங்கம், பொற்றலையென்பது—கரிப்பான்.

216-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

218-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

221-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம், ரவியென்பது-செம்பு, வேதையென்பது—ரசவாதம்.

223-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

225-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

227-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

228-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

230-வது பாட்டு பாட்டு மதியென்பது-வெள்ளி, காஞ்சனமென்பது-தங்கம்.

239-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், தந்திவிரையென்பது-நேர்வாளம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

240-வது பாட்டு முக்கண்ணனென்பது—தேங்காய்.

243-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

244-வது பாட்டு கிளிஞ்சிலென்பது—சிப்பி.

246-வது பாட்டு தந்தியென்பது—நேர்வாளம்.

249-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

250-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, பழமென்பது-எலுமிச்சம்பழம்.

252-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

255-வது பாட்டு சிவன்விந்தென்பது—ரசம், சிற்றண்டமென்பது—முட்டையோடு, கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

258-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, தாரமென்பது—அரிதாரம்.

261-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

262-வது பாட்டு பொற்றலையென்பது—கரிப்பான், முன்சாறென்பது—கரிப்பான்சாறு.

263-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

264-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

266-வது பாட்டு காஞ்சனமென்பது—தங்கம்.

271-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

272-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

273-வது பாட்டு கொள்ளி என்பது-காணப்பயறு, பாணீயென்பது-தண்ணீர்.

275-வது பாட்டு முன்னீரென்பது—கொள்ளுக்கியாழம், காஞ்சனமென்பது—தங்கம்.

281-வது பாட்டு முன்சாறென்பது—புளிப்புமாதுளைச்சாறு.

2[illegible]2-வது பாட்டு காணமென்பது—கொள்ளுப்பயறு.

283-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

284-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், சிவன்விந்தென்பது—சூதம். சந்தியென்பது—நேர்வாளம்.

285-வது பாட்டு கெந்திரசமென்பது—கெந்தகம் ரசம், தந்தியென்பது—நேர்வாளம்.

286-வது பாட்டு கம்பியுப்பென்பது—வெடியுப்பு, பாணியென்பது—தண்ணீர்.

287-வது பாட்டு முக்கண்ணனென்பது—தேங்காய்.

290-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

291-வது பாட்டு மயூரமென்பது—மயிலிறகு, பூநீரென்பது—முப்பூ.

292-வது பாட்டு பூநாகமென்பது—நாக்குப்பூச்சி.

294-வது பாட்டு கருநாகமென்பது—கருவங்கம்.

295-வது பாட்டு பொற்றலையென்பது—கரிப்பான்.

296-வது பாட்டு முத்தீயென்பது—தீபாக்கினி, கமலாக்கினி; காடாக்கினி.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நவலோகச் செந்தூரம் 300-க்குப் பரிபாஷை அரும்பதவுரை

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நவலோகச் செந்தூர முந்நூறுக்குச்

# சூஸ்திரம் 155-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை

### எட்டாவது சாஸ்திரம்.

1-வது பாட்டு பருதிமதியென்பது—சூரியன், சந்திரன்.

6-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, மேனிச்சாறென்பது—குப்பைமேனிச்சாறு, அருக்கன்பாலென்பது—எருக்கண்பால்.

8-வது பாட்டு கரியுப்பென்பது-கஞ்சியுப்பு, மேனியென்பது-குப்பைமேனி.

11-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

13-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

14-வது பாட்டு கெந்தியென்பது-கெந்தகம், மேனியென்ப்து-குப்பைமேனி.

19-வது பாட்டு வெண்கருவென்பது-கோழிமுட்டைக்கரு, முன்னுப்பென்பது-கஞ்சியுப்பு, அருக்கன்பாலென்பது-எருக்கன்பால்.

23-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர், வெண்கருவென்பது—முட்டைக்கரு.

24-வது பாட்டு அண்டோடென்பது-முட்டையோடு, அண்டநீரென்பது—முட்டைக்கரு.

30-வது பாட்டு கொடியோனென்பது—சூடன்.

34-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

40-வது பாட்டு கள்ளிப்பாலென்பது—திருகுகள்ளிப்பால்.

46-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

48-வது பாட்டு முன்னீரென்பது—நாயுருவிச்சாறு.

51-வது பாட்டு முன்சாறென்பது—நாயுருவிச்சாறு.

53-வது பாட்டு முன்னீரென்பது—உப்புச்செயநீர், மடந்தையென்பது—அரிதாரம்.

54-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

55-வது பாட்டு * தூமவேதையென்பது—புகைவேதை.

56-வது பாட்டு பாரையுப்பென்பது—திருப்புல்லாணியுப்பு.

58-வது பாட்டு அண்டவெள்ளைக்கரு வென்பது-கோழிமுட்டைக்கரு.

59-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனிச்சாறென்பது-குப்பைமேனிச்சாறு.

61-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

63-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

65-வது பாட்டு பரியென்பது—தங்கம், ரவியென்பது—செம்பு.

66-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

71-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

72-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

74-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனியென்பது-குப்பைமேனி.

75-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு.

76-வது பாட்டு பொற்றலை யென்பது—கரிப்பான், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

77-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

---

* தூம வேதை யென்றும் பாடம்.

86-வது பாட்டு கள்ளிப்பாலென்பது—சதுரக்கள்ளிப்பால்.

87-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம்.

88-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

89-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

90-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

91-வது பாட்டு அன்னமென்பது-சோற்றுக்கற்றாழை, தாரமென்பது—அரிதாரம்.

95-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், சுடரென்பது—சூடன்.

96-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

101-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், கொடியோனென்பது—சூடன்.

104-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், 'பழமென்பது—எலுமிச்சம்பழம்.

106-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம், அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

107-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன்.

108-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

112-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

117-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

119-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன், கெந்தியென்பது—கெந்தகம்.

125-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

128-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், வாழ்மடந்தையென்பது—அரிதாரம்.

129-வது பாட்டு மடையனென்பது—பால்துத்தம், கெந்தியமென்பது—கெந்தகயியம்.

130-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பழமென்பது-எலுமிச்சம்பழம், வண்டிலென்பது—வெண்காரம்.

131-வது பாட்டு முன்னீரென்பது—எலுமிச்சம்பழச்சாறு, மதியென்பது—வெள்ளி.

133-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

134-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை, ரவியென்பது—செம்பு.

140-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

142-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

143-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

150-வது பாட்டு ரசவாதியென்பது—ரசத்தைத் தங்கமாக்குவோன்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
நவலோக செந்தூரம் முந்நூறுக்குச் சூஸ்திரம் 155-க்கு
பரிபாஷை அருப்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

செந்தூரசூத்திரம் நூற்றைம்பதுக்குச்

# சூஸ்திரம் 50-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை.

### ஒன்பதாவது சாஸ்திரம்.

1-வது பாட்டு நித்தியமாய் நிறைந்த குருநபிமா ரென்பது—எப்பொழுதும் பூரணமாய் நிறைந்த பரப்பிர்ம சொரூபத்தை அறிந்து அந்நிலையிலிருக்கக்கூடியவர்.

3-வது பாட்டு சத்தென்பது—கெந்தகம், அயம், தாளக முதலிய லோகங்களிலிருந் தெடுக்குஞ் சாரமாகிய செம்பு, அயச் செம்பை யெடுத்து வகாரவேலை செய்தால் வகாரமாவதிற் றடையில்லையாமென்ப.

4-வது பாட்டு கெர்தியென்பது—கெந்தகம்.

6-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

7-வது பாட்டு பொரிகாரியென்பது—பொரிகாரம்.

9-வது பாட்டு சந்தாணியென்பது—வெண்காரம்.

10-வது பாட்டு முன்னீரென்பது—செவ்வல்லிப் பூச்சாறு, ரூபியென்பது—இந்திரகோபம்.

11-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

17-வது பாட்டு கெர்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

19-வது பாட்டு கருப்பியென்பது—இரும்பு, பழமென்பது—எலுமிச்சம்பழம், சந்தாணியென்பது—வெண்காரம்.

20-வது பாட்டு நாளத்தியென்பது—உலைதுருத்தி, மதியென்பது—வெள்ளி.

21-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், குமரியென்பது—சோற்றுக்கற்றாழை, மதியென்பது—வெள்ளி.

23-வது பாட்டு சந்தாணியென்பது—வெண்காரம், கொடியோனென்பது—சூடன்.

25-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

26-வது பாட்டு சந்தாணியென்பது—வெண்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

27-வது பாட்டு நாகரசமென்பது—நாகம், சூதம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

28-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

29-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம்.

30-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

33-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

35-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பாணியென்பது—தண்ணீர், பஞ்சமித்திரமென்பது—நல்லெண்ணெய் இலுப்பெண்ணெய் தேங்காயெண்ணெய் நெய் முதலியவைகளில் உலோகங்களைப் பேதிக்கச் செய்தல்.

36-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

40-வது பாட்டு தேன்பூச்சியென்பது—தேனீ.

43-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

44-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

45-வது பாட்டு கருப்பியென்பது—இரும்பு.

46-வது பாட்டு முன்போட்டமருந்தென்பது—கெந்தகசத்து.

49-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பொரிகாரியென்பது—பொரிகாரம், பண்ணையென்பது—வெடியுப்பு, மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

52-வது பாட்டு ஆகாதென்பது-பொன்னில்லாதவாதமுந் துருசில்லாச் சத்தும், சத்தெடுக்காத செம்பும்—பழக்கமில்லாத கைபாகமும், வெடியுப்பில்லாத வேலையும், கல்லுப்பில்லாத வாதமும், குருவில்லாத வித்தையும், பிரயோஜனமில்லையாம்.

54-வது பாட்டு நூலினுடமர்மங்கண்டென்பது—இந்நூல்கள்முழுவதும் பார்த்துச் சத்தெடுக்கும் வித்தையும் களங்குசெய்யக்கூடிய கருத்தையும், செந்தூரஞ்சுண்ணஞ்செய்யக்கூடியமுறையையும் கைபாகமாய் நன்குதெரிந்து வகாரவேலை செய்தால், தங்கமாவதிற் றடையில்லையாம்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
செந்தூர சூஸ்திரம் நூற்றைம்பதுக்குச்
சூஸ்திரம் 55-க்குப் பரிபாஷை
அரும்பதவுரை

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற
யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
வகாரக் களங்கென்னும்

# வாதவைத்தியம் 300-க்கு
## பரிபாஷை அரும்பதவுரை

### பத்தாவது சாஸ்திரம்.

1-வது பாட்டு உயிர்களென்பது—மானிடசீவன்கள்.

9-வது பாட்டு ரவியென்பது—செம்பு, கருப்பியென்பது—இரும்பு, சத்தியென்பது—கெந்தகம், பழமென்பது-எலுமிச்சம்பழம், கொடியோனென்பது—சூடன்.

10-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், சத்திவீரமென்பது—கெந்தகம் வீரம், கொடியோனென்பது—சூடன்.

11-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

12-வது பாட்டு சத்தியென்பது—கெந்தகம், கொடியோனென்பது—சூடன், முன்னீரென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

19-வது பாட்டு சத்தியென்பது—கெந்தகம், முன்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

20-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், மதியென்பது—வெள்ளி, காஞ்சனமென்பது-தங்கம், ஏமமென்பது—தங்கம்.

25-வது பாட்டு சிவவிந்தென்பது—சூதம்.

26-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், நீருப்பென்பது—கஞ்சியுப்பு.

27-வது பாட்டு முன்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு, கொடியோனென்பது—சூடன்.

28-வது பாட்டு ரவியென்பது—செம்பு, ஏமமென்பது—தங்கம்.

31-வது பாட்டு வன்னிகற்பமென்பது—லிங்கரசம்.

32-வது பாட்டு கொடியோனென்பது—சூடன்.

33-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், காதவீரமென்பது—கெந்தி வீரம்.

34-வது பாட்டு கொடிச்சியென்பது—சூடன், முன்னீ ரென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

35-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

42-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, முன்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

46-வது பாட்டு கறைகண்டனென்பது—துருசு, பழமென்பது—எலுமிச்சம்பழம், ரவியென்பது—செம்பு.

49-வது பாட்டு முன்னீரென்பது—எலுமிச்சம்பழச்சாறு, வேதையென்பது—ரசவாதம், கெந்தியென்பது—கெந்தகம்.

50-வது பாட்டு முன்னீரென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

51-வது பாட்டு கனகமென்பது—தங்கம்.

53-வது பாட்டு சூரியனென்பது—செம்பு, நாறும்பூ வென்பது—கெந்தி, கொடியோனென்பது—சூடன், பருத்திச்சாறென்பது—வேலிப்பருத்திச்சாறு.

54-வது பாட்டு கறைகண்டரென்பது—துருசு, சாற்றுலென்பது—எருக்கன்சாறு, முன்குருவென்பது—செம்புக்குரு.

55-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், கெந்தியென்பது—கெந்தகம்.

58-வது பாட்டு தோதுவுமென்பது—நவச்சாரம், வளையமென்பது—சீனம், வடமென்பது-வெடியுப்பு, அஞ்சுருவாணி யென்பது-பூநீறு.

60-வது பாட்டு சோரனென்பது—நாகம்.

61-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், இடையென்பது-எடையென்றறிக, நாறும்பூ வென்பது—கெந்தகம்.

62-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பொற்றலை யென்பது—கரிப்பான்.

64-வது பாட்டு வேதையென்பது—வகாரம்.

66-வது பாட்டு நீலனென்பது—துருசு.

67-வது பாட்டு அப்புவென்பது—வங்கம், லவணமென்பது—உப்பு

71-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

74-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம்.

81-வது பாட்டு தாசியென்பது—துருசு, வாழ்மடந்தையென்பது—அரிதாரம், கள்ளிச்சாறென்பது—குமரிச்சாறு.

82-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம், கொடியோனென்பது—சூடன்.

83-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம், வயது எட்டென்பது—மாற்று எட்டு.

85-வது பாட்டு கருப்பியென்பது—இரும்பு, நீலனென்பது—துருசு, நாற்றமென்பது—கெந்தகம், வண்டிலென்பது—வெண்காரம்.

86-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், வண்டிலென்பது—வெண்காரம்.

87-வது பாட்டு அப்புவென்பது—வங்கம், நாறும்பூவென்பது—கெந்தகம், பொற்றலையென்பது—கரிப்பான்.

88-வது பாட்டு முன்னீரென்பது—கரிப்பான்சாறு, கொடியோனென்பது—சூடன், ரவியென்பது—செம்பு, ஏமமென்பது-தங்கம்.

90-வது பாட்டு கனகமென்பது—பொன், தங்கம்.

91-வது பாட்டு வேதையென்பது—இரசவாதம்.

92-வது பாட்டு உபரசமென்பது—சேர்க்கை, லோகமென்பது—நவலோகம்.

96-வது பாட்டு சத்திசிவமென்பது—கெந்தகம், ரசம்.

97-வது பாட்டு கறைகண்டனென்பது—துருசு, நாறும்பூவென்பது—கெந்தகம்.

98-வது பாட்டு வண்டிலென்பது-வெண்காரம், கொடியோனென்பது—சூடன், கன்னிநீரென்பது—சோற்றுக்கற்றாழை நீர்.

99-வது பாட்டு அண்டோடென்பது—மண்டையோடு, கிளிஞ்சிலென்பது—சிப்பி, பாணியென்பது—தண்ணீர்.

100-வது பாட்டு வெண்கருவென்பது—முட்டைக்கரு, வளையமென்பது—சினக்காரம், முன்னீரென்பது—சோற்றுக் கற்றாழைநீர்.

101-வது பாட்டு குழவியென்பது—குழப்பி, அல்லது பெருமை, கண்டரென்பது—துருசு, வண்டிலென்பது—வெண்காரம்.

102-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, வேதையென்பது—இரசவாதம்.

103-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

104-வது பாட்டு செந்தூரத்திற் கெல்லாந்துருசு முக்கியமாய்ச்சேர்க்கவேண்டுமாம்.

106-வது பாட்டு பாணிதனையறியாமலென்பது—பூநீரெடுக்குங்காலத்தில் அதிலிருந்த உப்பையுந் தண்ணீரையும் வெவ்வேறாகப் பிரிக்கத் தெரியாமலிருப்பது.

109-வது பாட்டு கொடியோனென்பது—சூடன்.

110-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

115-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

117-வது பாட்டு கண்டரென்பது—துருசு, சத்தியென்பது-கெந்தகம், பாணியென்பது—தண்ணீர்.

118-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பழமென்பது—எலுமிச்சம்பழம், ஏமமென்பது—தங்கம்.

119-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், மடந்தையென்பது—தாளகம், கொடியோனென்பது—சூடன், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

120-வது பாட்டு மதியென்பது-வெள்ளி, எட்டரையென்பது-பொன்மாற்று.

122-வது பாட்டு வண்டிலென்பது—வெங்காரம், உப்பென்பது-கஞ்சியுப்பு.

123-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

126-வது பாட்டு நாறும்பூவென்பது—கெந்தகம்.

127-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம், வடமென்பது-வெடியுப்பு, வளையமென்பது—சீனக்காரம்.

131-வது பாட்டு வெள்ளையென்பது—பாஷாணம், குதிரைப்பல்லென்பது—குதிரைப்பாஷாணம், தொட்டியென்பது—தொட்டிப் பாஷாணம்.

138-வது பாட்டு குத்துக்கல்லென்பது—பூநீறு, பாணியென்பது—தண்ணீர், சுக்கான்நீரென்பது—சுண்ணும்புத் தண்ணீர்.

141-வது பாட்டு நீலலென்பது—துருசு.

144-வது பாட்டு கருநாகமென்பது—கருவங்கம், குமரிச்சாறென்பது-கற்ருழைச்சாறு.

145-வது பாட்டு வடமென்பது—வெடியுப்பு, வளையமென்பது-சீனக்காரம்.

148-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

151-வது பாட்டு ரவியென்பது-செம்பு, குமரிப்பாலென்பது-சோற்றுக் கற்ருழைப்பால்.

152-வது பாட்டு தேவியென்பது—கெந்தகம், அரசனென்பது—ரசம்.

153-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், ரவியென்பது—செம்பு.

155-வது பாட்டு சத்திசிவமென்பது-கெந்தகம் ரசம், மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

159-வது பாட்டு சத்திரசமென்பது—கெந்தக ரசம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

160-வது பாட்டு கொடியோனென்பது—சூடன்.

161-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம், ஏமமென்பது—தங்கம்.

161-வது பாட்டு அப்பு உப்பென்பது—பூநீறு, கஞ்சியுப்பு.

165-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

167-வது பாட்டு அரபொடியென்பது—இரும்புப்பொடி, பழமென்பது—எலுமிச்சம்பழம், நீலனென்பது—துருசு.

168-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

170-வது பாட்டு மாடமென்பது*—துருசு, முன்னீரென்பது—எலுமிச்சம்பழச்சாறு, லோகமென்பது—தாமிரம்.

171-வது பாட்டு காற்றமென்பது—கெந்தகம்.

172-வது பாட்டு சிவன்விந்தென்பது—ரசம், பொற்றலையென்பது—கரிப்பான், கொடியோனென்பது—சூடன்.

184-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி,

185-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம், சுடரென்பது—சூடன்.

187-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம், வேதையென்பது—ரசவாதம்.

193-வது பாட்டு கொள்ளுச்சாறென்பது—கொள்ளுப்பயறின் சாறு.

194-வது பாட்டு கன்னியாகுமரிச்சாறென்பது-சோற்றுக்கற்றாழைச் சாறு.

195-வது பாட்டு கன்னிநீரென்பது—சோற்றுக் கற்றாழைநீர்.

196-வது பாட்டு கண்டரென்பது—துருசு.

199-வது பாட்டு வடமென்பது—வெடியுப்பு, வளையமென்பது—சீனக்காரம், அன்னமென்ற பேதியென்பது—அன்னபேதி.

201-வது பாட்டு கண்டரென்பது—துருசு, சத்தியென்பது-கெந்தகம்.

202-வது பாட்டு மாடனென்பது-துருசு, புகைநீரென்பது-திராவகம்.

203-வது பாட்டு புகைநீரென்பது—திராவகம்.

207-வது பாட்டு நிகளையென்பது—குகை, ரவியென்பது—செம்பு.

208-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

---

* சந்தேகம் பெரியோர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

209-வது பாட்டு வடமென்பது—வெடியுப்பு, வளையமென்பது-சீனக்காரம், புளியென்பது—குழம்புப்புளி.

211-வது பாட்டு லவணமென்பது—உப்பு.

214-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

222-வது பாட்டு கெந்தியென்பது — கெந்தகம், மதியென்பது — வெள்ளி.

225-வது பாட்டு கல்லுப்பென்பது-கஞ்சியுப்பு, மேனிச்சாறென்பது-குப்பைமேனிச்சாறு.

226-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

229-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

231-வது பாட்டு ஒழுகரையென்பது—இரும்பு, சத்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

232-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம்.

233-வது பாட்டு சுடர்க்காளையென்பது—சூடன், கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனியென்பது—குப்பைமேனி.

234-வது பாட்டு முன்னீரென்பது—மேனிச்சாறு.

243-வது பாட்டு பரியென்பது—தங்கம், சத்தியென்பது—கெந்தகம், சிகரமென்பது—பூநீறு.

244-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம், பாணியென்பது—தண்ணீர்.

245-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன்.

257-வது பாட்டு நிகடையென்பது—குகை.

259-வது பாட்டு சிகரமென்பது—தாமிரம், கைத்தபழமென்பது—சோற்றுக்கற்றாழைப்பால்.

261-வது பாட்டு ஆலாத்தியென்பது—சூடன், வண்டிலென்பது—வெண்காரம்.

262-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், குருக்கிடை யென்பது—குறுக்கு வழி, கருக்கிடையென்பது-கருத்தோடுசெய்வது.

263-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

272-வது பாட்டு கண்டரென்பது—துருசு, சத்தியென்பது—கெந்தகம், அன்னமென்பது—சோற்றுக் கற்றாழை, வண்டிலென்பது—வெண்காரம்

273-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை, சித்தருடரூபி யென்பது—இந்திரகோபம், கெந்தி.

274-வது பாட்டு பொற்றலையென்பது—கரிப்பான், மதியென்பது—வெள்ளி.

275-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

279-வது பாட்டு சித்தநூற்றெளிவென்பது—வழலையென்றும் முப்பூவென்றும் சித்தர்கள் மறைத்துச் சொன்னதை இந்நூலில் வெளியாகச் சொல்லி யிருக்கின்றாராம்.

285-வது பாட்டு வண்டிலென்பது—வெண்காரம், கொடியோனென்பது—சூடன்.

290-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், வடமென்பது—வெடியுப்பு.

291-வது பாட்டு சீனமென்பது—சீனக்காரம், கத்தபநீரென்பது—கழுதைநீர், கரியுப்பென்பது—கஞ்சியுப்பு.

292-வது பாட்டு கன்னியாகுமரியென்பது—சோற்றுக்கற்றாழை.

293-வது பாட்டு சத்தியென்பது—கெந்தகம்.

294-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பொற்றலையென்பது—கரிப்பான்.

295-வது பாட்டு முன்னீரென்பது—கரிப்பான்சாறு.

301-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன், மதியென்பது—வெள்ளி, வேதையென்பது—ரசவாதம்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
வகாரக்களங்கென்னும் வாதவைத்திய 300-க்குப்
பரிபாஷை அரும்பதவுரை

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

பஞ்சபூதச்சரக்குகளின்

# பஞ்சமித்திரம் 300-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை

### பதினோராவது சாஸ்திரம்.

1-வது பாட்டு எல்லாம் படைப்பவ னென்பது—இறையவன் அதாவது கடவுள்.

10-வது பாட்டு பா்ரையின்நாதமென்பது-பூநீறு, பழமென்பது—எலுமிச்சம்பழம், மேனியென்பது—குப்பைமேனி.

11-வது பாட்டு முன்னீரென்பது—குப்பைமேனிச்சாறு.

12-வது பாட்டு சுடரென்பது—சூடன், பாணியென்பது—தண்ணீர்.

13-வது பாட்டு டங்கணமென்பது—வெண்காரம்.

14-வது பாட்டு சந்தாணியென்பது-வெண்காரம், அல்லது சீனக்காரம், முன்பூவென்பது-செவ்வல்லிப்பூ, பாணியென்பது-தண்ணீர்.

15-வது பாட்டு சந்தாணியென்பது-வெண்காரம் அல்லது சீனக்காரம்.

18-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

19-வது பாட்டு நாதமென்பது—பூநீறு, பூச்சாறென்பது-செவ்வல்லிப் பூச்சாறு.

20-வது பாட்டு சந்தாணியென்பது—ரசம் அல்லது வெண்காரம்.

21-வது பாட்டு சுடரென்பது—சூடன், சந்தாணியென்பது—வெண்காரம் அல்லது சீனக்காரம்.

22-வது பாட்டு சரவுலையென்பது — இரட்டைத்துருத்தி போட்டு ஊதும்படியான ஓர்வகை அடுப்பு.

25-வது பாட்டு நாளமென்பது—உலையின்உட்டுளை.

28-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

29-வது பாட்டு சுடரென்பது—சூடன், பூச்சாறென்பது-செவ்வல்லிப் பூச்சாறு.

43-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

46-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

47-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம்.

48-வது பாட்டு தாரமென்பது—அரிதாரம், பூச்சாறென்பது—செவ் வல்லிப் பூச்சாறு.

49-வது பாட்டு ரவியென்பது—செம்பு, மதியென்பது—வெள்ளி.

57-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

58-வது பாட்டு நாற்றமென்பது — கெந்தி, சுடர்க்கொடியோனென் பது—சூடன், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

59-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

61-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், பாணியென்பது— தண்ணீர்.

62-வது பாட்டு சந்தாணியென்பது-சீனக்காரம் அல்லது வெண்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

64-வது பாட்டு வேதையென்பது-ரசவாதம், மதியென்பது-வெள்ளி.

65-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

66-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், சந்தாணியென்பது— சீனக்காரம் அல்லது வெண்காரம்.

68-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம்.

69-வது பாட்டு பூச்சாறென்பது—செவ்வல்லிப்பூச்சாறு.

90-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, நாற்றமென்பது— கெந்தகம்.

91-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

92-வது பாட்டு பாணியென்பது—தண்ணீர்.

93-வது பாட்டு ஆட்டமுரியென்பது—வெள்ளாட்டுநீர்.

95-வது பாட்டு சோறுதெளிந்தநீரென்பது—சோற்றுக்கற்றாழைநீர்.

98-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

99-வது பாட்டு சுடரென்பது—சூடன், பூச்சாறென்பது-செவ்வல்லிப் பூச்சாறு.

100-வது பாட்டு சந்தாணியென்பது-ரசம் அல்லது வெண்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

101-வது பாட்டு சாணூர்காசென்பது—தங்கம்.

105-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

107-வது பாட்டு சந்தாணியென்பது—சீனக்காரம், அல்லது ரசம் வெண்காரம்.

111-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், கொடியோனென்பது—சூடன்.

112-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

115-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, ஏமமென்பது—தங்கம்.

119-வது பாட்டு கெந்தியென்பது — கெந்தகம், சுடர்க்கொடியோனென்பது—சூடன்.

120-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

121-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

122-வது பாட்டு நாறும்பூவென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

123-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

125-வது பாட்டு மாடனென்பது*—வெள்ளைத் துத்தம்.

126-வது பாட்டு கிராவணமென்பது—வங்கம், ஆட்டமுரியென்பது—வெள்ளாட்டு நீர் சந்தாணியென்பது—சீனக்காரம் அல்லது வெண்காரம்.

127-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை, திரிபலாதியென்பது—கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

* சந்தேகம் பெரியோர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

128-வது பாட்டு சந்தாணியென்பது—சீனக்காரம் அல்லது ரசம் வெண்காரம், அன்னநீரென்பது—சோற்றுக்கற்றாழைநீர்.

129-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

131-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

132-வது பாட்டு ஏமமென்பது—தங்கம், காறும்பூவென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

134-வது பாட்டு மாடமென்பது*—துருசு, பூச்சாறென்பது—செவ்வல்லிப்பூச்சாறு, சந்தாணியென்பது—சீனக்காரம் அல்லது வெண்காரம்.

136-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், குக்குடமென்பது—கோழிப்புடம்.

140-வது பாட்டு வடமென்பது—வெடியுப்பு.

141-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

142-வது பாட்டு ரவியென்பது—செம்பு.

143-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், சிகாமென்பது-பூநீறு, பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

144-வது பாட்டு சுடரென்பது—சூடன்.

147-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

154-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், பாணியென்பது—தண்ணீர், ரவியென்பது—செம்பு, சந்தாணியென்பது-சீனக்காரம் அல்லது வெண்காரம்.

155-வது பாட்டு சந்தாணியென்பது—சீனக்காரம் அல்லது வெண்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

156-வது பாட்டு சந்தாணியென்பது—சீனக்காரம் அல்லது வெண்காரம்.

157-வது பாட்டு சந்தாணியென்பது—சீனக்காரம் அல்லது வெண்காரம்.

159-வது பாட்டு காறும்பூ வென்பது—கெந்தகம்.

160-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

---

* சந்தேகம் பெரியோர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

161-வது பாட்டு நீலனென்பது—துருசு.

167-வது பாட்டு பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

168-வது பாட்டு கொடியோனென்பது-சூடன், முன்பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

175-வது பாட்டு அதரென்பது—மருந்துக் கசடு.

178-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு.

179-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி, அதரென்பது—மருந்துக் கசடு.

180-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம், கொடியோனென்பது—சூடன்.

182-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

185-வது பாட்டு அதரென்பது—மருந்துக்கசடு.

186-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

187-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன்.

191-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

192-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பாணியென்பது—தண்ணீர்.

193-வது பாட்டு சுடர்க்கொடியோனென்பது—சூடன்.

195-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனியென்பது—குப்பைமேனி.

196-வது பாட்டு அதரென்பது—மருந்துக்கசடு, நாற்றமென்பது—கெந்தகம், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

202-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

206-வது பாட்டு நீலனென்பது—துருசு, நாறும்பூவென்பது—கெந்தகம், பாணியென்பது—தண்ணீர்.

207-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், மேனியென்பது—குப்பைமேனி.

208-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு

209-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனியென்பது—குப்பைமேனி

210-வது பாட்டு சந்தாணியென்பது—வெண்காரம் அல்லது சீனகாரம்.

211-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

212-வது பாட்டு சந்தாணியென்பது—வெண்காரம், அல்லது சீனகாரம்.

215-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

216-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

217-வது பாட்டு பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

218-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

220-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, வேதை யென்பது—ரசவாதம்.

233-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம்.

236-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

237-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

239-வது பாட்டு வீரம் கெந்தமென்பது—வீரம் கெந்தகம், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

240-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

248-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

249-வது பாட்டு வடமென்பது—வெடியுப்பு.

250-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு, சந்தாணியென்பது — வெண்காரம் அல்லது சீனக்காரம்.

255-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

250-வது பாட்டு அல்லிப்பூச்சாறென்பது—அல்லிபுஷ்பச்சாறு.

257-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

260-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

265-வது பாட்டு காணமென்பது—கொள்ளுப்பயறு.

266-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, மேனியென்பது—குப்பைமேனி,

268-வது பாட்டு கொடியோனென்பது—சூடன், பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

269-வது பாட்டு அஞ்சாங்காய்ச்சலுப் பென்பது—வெடியுப்பு.

271-வது பாட்டு அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

273-வது பாட்டு நாளமென்பது—உலை.

274-வது பாட்டு நாற்றமென்பது—கெந்தகம்.

275-வது பாட்டு பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு, நிகடையென்பது—குகை.

276-வது பாட்டு பூச்சாறென்பது—செவ்வல்லிப் பூச்சாறு.

281-வது பாட்டு கரும்பொன்னென்பது—கருவங்கம்.

287-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

290-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், சிகரமென்பது-பூநீறு, பழமென்பது-எலுமிச்சம்பழம், கிளிஞ்சி லென்பது—சிப்பி, மேனியென்பது—குப்பைமேனி.

292-வது பாட்டு ஆட்டமுரிமென்பது—வெள்ளாட்டுநீர்.

293-வது பாட்டு கல்லுப்பென்பது—கஞ்சியுப்பு, சீனமென்பது—சீனக்காரம், பழமென்பது—எலுமிச்சம்பழம்.

295, 296, 298, பாட்டுகளில் அன்னமென்பது—சோற்றுக்கற்றாழை.

300-வது பாட்டில் தான்பாடிய நூலின்கோர்வைகளைக் கூறுகிறார்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
பஞ்சமித்திரம் 300-க்குப் பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# எடைபாகம் 16-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை

### பனிரெண்டாவது சாஸ்திரம்.

1-வது பாட்டு சத்தெடுக்க எடைபாகமாவது—துருசுக்குக்கெந்தகம் முக்காலெடை சேர்க்க வேண்டுமாம். செம்பைவெள்ளியிற் சேர்க்கத் தங்கமாம்.

2-வது பாட்டு எடைபாகந்தவறிக் கூடியுங்குறைந்து மிருக்குமாகில் சத்துக்கள் கருப்பாகுமாம்.

3-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம், பழமென்பது—எலுமிச்சம் பழம்.

4-வது பாட்டு காளமென்பது—உலே.

6-வது பாட்டு வெள்ளிக்கு வங்கம் சரியெடைசேர்க்க வேண்டுமாம்.

9-வது பாட்டு மட்டப் பொன்னுக்கு ஓரெடை தங்கஞ்சேர்க்கவேண்டு மாம்.

10-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

11-வது பாட்டு மட்டப்பொன் தங்கமாகு மென்பது—சுத்திசெய்த தங்கத்தூளைச் சேர்த்துருக்கப் பத்துமாற்றாகுமாம்.

13-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

14-வது பாட்டு நீற்றினத்தை 600ரிற் சொல்லியிருக்கிறதாம்.

15-வது பாட்டு சத்துள்ளதென்பது—செம்பு, தாயென்பது—தங்கம், வகையுடன் சேரேமமாகுமென்பது—முறைதவறாமல் கணக் குடன் சேர்த்துச் செய்தால் தங்கமாகும். அவ்வாறு செய் கிறவன் தனவந்தனாயிருப்பான்.

16-வது பாட்டு செய்தாற் பலனுண்டாமென்பது—முறைதவறாமல் (அதாவது) செய்பாக கைபாக எடைபாக புடபாகங்களுடன் வகாரவேலை செய்யத் தங்கமாகுமாம். அன்றியும், மூலிகை வகை களினாலும், பாஷாணச் சரக்குகளினாலும், கடைச்சரக்குகளினாலும், உப்புச்சரக்கு களினாலும் அரிய செந்தூரம், பற்பஞ், சுண்ண முதலியவைகளை முடிக்கிறவர்கள் ஷை சரக்குகளைக் கட்டுதல் சுருக்கிடுதலாகிய பல கைபாக செய்பாக எடைபாக முறைகளைத் தவறாது செய்ய வேண்டுமா மென்றறிக.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
எடைபாகம் 16-க்கு
பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# செய்பாகம் 16-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை.

### பதிமூன்றாவது சாஸ்திரம்.

2-வது பாட்டு பாஷாணப் புகைச் சரக்குகள்—கௌரி, லிங்கம் சூதம், தாளகம், துருசு, மனோசிலை, கெந்தகம், பாஷாணம், வீரம், பூரம், முதலியன.

3-வது பாட்டு உருக்கினச் சரக்குகள்—தங்கம், வெள்ளி, செம்பு, கருவங்கம், வெள்வங்கம், அயம், நாகம், குடவன், வெண்கலம் முதலியன.

4-வது பாட்டு சுண்ணஞ் செய்வதா யிருந்தால்—சுண்ணக்காண்டம் 600-ரைப் பார்த்துச் செய்யவும். அதன்படி செய்யும்போது தவறிடிற் சுண்ணமுந்நூரைப் பார்த்துச் செய்யவும், அதிலும் பாகந்தவறினால் சுண்ணச் சூஸ்திரம் 155ப் பார்த்துச் செய்தால் நலம். அதிலும் பாகந்தவறிடிலைம்பத் தேழைப் பார்த்துச் செய்யவும். புடமாறிப் போனாலென்பது—குறை நிறையச் சரியதாக்கிப் புடம்போட மல்லிகைப் பூப்போலச் சுண்ணமாகு மென்ப.

8-வது பாட்டு செந்தூரஞ் செய்யவென்றால்—வைத்திய சிந்தாமணி எழுநூறின் படி செய்யவேண்டுமாம் அதிற்றவறிடுமானால் செந்தூர முந்நூரையும் அதன் சூஸ்திரம் 155-யும் அதன், சுருக்கம் 55-யும் பார்த்துச்செய்ய வேண்டியதாம்.

10-வது பாட்டு செந்தூரஞ் செய்யும்போது செந்தூர மாகாமற் கருத்துப்போனால் அம்மருந்தை வெளியிலெறிந்திடாமல் மனஞ் சலியாது மறுபடியும் கைபாக யிடைபாகம் பார்த்துச் செய்தால் செந்தூரமாகும்.

14-வது பாட்டு வைத்தியஞ் செய்வதற்கு வைத்திய சிந்தாமணி எழுநூறில் செந்தூரங்கள், சுண்ணங்கள், பற்பங்கள், லேகியங்கள், கிருதங்கள், கியாழங்கள், தைலங்கள், எண்ணெய்கள், திராவகங்கள், முதலிய யாவுஞ் செய்பாகங்களுடன் ஏராளமாய்ச் சொல்லியிருப்பதன்றியும், அவைகளுக் கனுப்பான முறைகளையும் இன்னுஞ்சில ஔடதங்களையும், கியாழங்களையும் வைத்தியம் முந்நூறில் நன்கு தெளிவாய்க் கூறியிருக்கிறார்.

வைத்திய வாதசூஷ்திரம் 400ல் வைத்திய வாதங்களைச் செய்யக்கூடிய பக்குவ முறைகளை மிக்க இலேசாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அவை குருக்கிடையாதலா லதிகக்கஷ்டமாகத் தோற்றும். கவனித்துச் செய்யவேண்டுமென்று மிக வற்புறுத்திக் கூறுகிறார். இன்னும் ஷை சூஸ்திரம் 400ல் யோகஞான சமாதி விஷயங்களையும் நன்றாய்த் தெரியும்படி சொல்லி யிருக்கிறார்.

வைத்தியச் சுருக்கம் 55ல் வெளியாகச் சில ஔடதங்களையும் தண்டகம் 110ல் குருமுடிப்பதற்குச் சில அனுபவ முறைகளையும் நன்கு கூறியிருக்கிறாரென்றறிக.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
செய்பாகம் 16-க்குப்
பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

## வைத்திய வாத

# சூஸ்திரம் 400-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை

### பதினான்காவது சாஸ்திரம்.

1-வது பாட்டு சீர்யென்பது—சிறப்பு அல்லது பெருமை.

2-வது பாட்டு நீக்கினகுருவென்பது-அரிதாரம்-1, லிங்கம்-2, ரசம்-3, செம்பு-4, தொட்டிப் பாஷாணம்-5, இதற்கு ஆதாரம்—கல்லுப்பு-1, சத்திசாரம்-2, வெடியுப்பு-3, வெண்காரம்-4, சூடன்-5, மேற்கண்ட வகை இரண்டுக்கும் ஆதாரம், குருவண்டு 1, உரம்-2, நாவி-3, செரிவிஷம்-4, புனுகு-5. அவுரி, வாழை, அரசு, நாயுருவி, தெங்கு, இந்த ஐந்தையுஞ் சுட்டு அமுரியை விட்டுக்குழப்பி மூன்றுநாள் தெளியவைத்து அந்தத்தெளிவைவிட்டு மேற்கூறிய மருந்துகளை யரைத்துக் காயவைத்துப் பின்பு சரக்கு களுக்குப்பூசி அவைகளையுங் காயவைத்து முப்புச் சுண்ணமிட்டுப் புடமிடப் பற்பமாகும்.

9-வது பாட்டு மருந்தென்பது—குரு, பனிதாங்கி யென்பது—பூநீறு.

10-வது பாட்டு முதல் 12, 14, 16, 17, 19, 20, 22, 25, 26, 27, 28-வது பாட்டுகள் வரை மருந்தென்பது—குரு.

29-வது பாட்டு ரசம் பத்துக்கு ஒன்றென்பது—குரு

33-வது பாட்டு முதல் 35, பாட்டுகள்வரை மருந்தென்பது—குரு.

36-வது பாட்டு கட்டிக்குப் பூசி என்பது—குரு.

37-வது பாட்டு முதல் 39, 41, 42, பாட்டுகள் வரை மருந்தென்பது—குரு.

43-வது பாட்டு லவணமென்பது—உப்பு.

47-வது பாட்டு சீனமென்பது—சீனக்காரம், சிங்கியென்பது—மிருதார் சிங்கி, கெந்தியென்பது—கெந்தகம்.

48-வது பாட்டு உவர்நீரென்பது—பூநீறு, மருந்தென்பது—குரு.

50-வது பாட்டு முதல் 52, 53, 54, 55, 56, 57, 58, 59, பாட்டுகள் வரை மருந்தென்பது—குரு.

62-வது பாட்டு கல்லாணையென்பது—பூநீறு.

70-வது பாட்டு நிம்பப்பழமென்பது—எலுமிச்சம்பழம், குக்குடமென்பது—கோழிப்புடம்.

72-வது பாட்டு பழமென்பது—எலுமிச்சம்பழம், நவநீதமென்பது—பசுவின் வெண்ணெய்.

74-வது பாட்டு முத்துச்சிப்பி யென்பது—கடற்சிப்பி, கண்ணியென்பது—பொன்னாங்கண்ணி.

75-வது பாட்டு வெண்ணெய்யென்பது—பசுவின் வெண்ணெய்.

77-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

79-வது பாட்டு நிம்பப்பழமென்பது—எலுமிச்சம்பழம்.

81-வது பாட்டு கீழ்க்காயென்பது—கீழ்க்காய் நெல்லி, பண்ணைக் கீரையென்பது—மலைப்பண்ணைக் கீரை, வார்மூலி யென்பது—பூநீறு.

82-வது பாட்டு படிகாரமென்பது—சீனக்காரம், நவநீதமென்பது—பசுவின் வெண்ணெய்.

83-வது பாட்டு பலகரையென்பது—சோகி, நிம்பப் பழமென்பது—எலுமிச்சம்பழம், பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

86-வது பாட்டு குன்மந்திர உப்பென்பது—கஞ்சியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, கரியுப்பு, பொட்டிலுப்பு, நவச்சாரம், உவர்ப் பூநீறு.

87-வது பாட்டு நிம்பப்பழமென்பது—எலுமிச்சம்பழம், மேனியென்பது — குப்பைமேனி, கெந்தகச்சா றென்பது — கழற்சிக் காய்ச்சாறு

107-வது பாட்டு நிம்பப்பழமென்பது—எலுமிச்சம்பழம்.

112-வது பாட்டு மனந்தானென்பது—சிவம்.

123-வது பாட்டு மெழுகெடுத்துத் தங்கமானதென்பது—ஏமாற்றஞ் செய்தலாம்

131-வது பாட்டு மத்தனென்பது—கருவூமத்தை.

134-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

141-வது பாட்டு வார்ப்பூண்டென்பது—பூநீறு,

151-வது பாட்டு பொடிமூலியென்பது—பூநீறு.

152-வது பாட்டு கொடிப்பூண்டென்பது—மாக்கொடி.

153-வது பாட்டு பிரமவேரென்பது—மாக்கொடி, மலைதாங்கி யென்பது—பொன்முசுட்டை.

161-வது பாட்டு கூவென்ற சொற்கேட்டென்பது—நபிமார்கள் சந்தோஷமடைந்தார்களா மென்ப.

198-வது பாட்டு குமரியென்பது—சோற்றுக் கற்றாழை.

200-வது பாட்டு சிற்றண்டமென்பது—கோழிமுட்டை.

203-வது பாட்டு கெந்தியென்பது—கெந்தகம்.

204-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம்.

205-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

208-வது பாட்டு நிலாவரையென்பது—நிலவாகை.

211-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

216-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, வயதென்பது—மாற்று.

217-வது பாட்டு தாம்பிரமென்பது—தாம்பிரம், வேதையென்பது—ரசவாத வுருக்குமுகம்.

218-வது பாட்டு ஊமையென்ற பூடென்பது—பிண்டம், மமதையடக்குமூலியென்பது—கருந்தேன், : அக்கிப்பூண்டென்பது—கொடிமா.

219-வது பாட்டு மலைதாங்கி வேரென்பது—பொன்முசுட்டை, நாய்வணங்கி இலையென்பது — நாயுருவியிலை, உத்தாமணியிலையென்பது—வேலிப் பருத்தியிலை, சிறுமூலி யென்பது—விஷ்ணுகரந்தை

220-வது பாட்டு பன்றிதோண்டிப் பூடென்பது—கோரைக்கிழங்கு, மாணிக்கப்பூடென்பது—பிண்டம்.

221-வது பாட்டு ஏமமென்பது—தங்கம்.

223-வது பாட்டு வேதையென்பது—ரசவாதம், ஏமமென்பது-தங்கம்.

225-வது பாட்டு குருவென்பது—முப்பூ.

229-வது பாட்டு மதியென்பது—வெள்ளி.

230-வது பாட்டு வினைபோக்கும் மூலியென்பது—கொடிமா, வெடிக்குஞ் சூரியென்பது—நத்தைச்சூரி.

233-வது பாட்டு வார்மூலியென்பது—பூநீறு.

235-வது பாட்டு மதமடக்கி நீரென்பது—கருந்தேன்.

237-வது பாட்டு ஐயிரண்டுவயதென்பது—பத்துமாற்று.

343-வது பாட்டு வண்டுமூலியென்பது—முப்பு.

346-வது பாட்டு தேர்ப்பூண்டென்பது—பூநீறு.

350-வது பாட்டு மதியென்பது—வெள்ளி, வேதையென்பது-உருக்குமுகத்திற் குருக்கொடுத்துச் செய்யக்கூடிய இரசவாதம்.

351-வது பாட்டு வெட்பூண்டென்பது—வெள்ளைப் பூண்டு.

352-வது பாட்டு வயதென்பது—தங்கத்தின் மாற்று.

355-வது பாட்டு உத்தாமணியிலை யென்பது—வேலிப்பருத்தி, மேனியென்பது—குப்பைமேனி.

357-வது பாட்டு தூண்டிமூலியென்பது—கௌதும்பை.

358-வது பாட்டு சுருட்டிமூலியென்பது—பொன்முசுட்டை.

364-வது பாட்டு வார்மூடியென்பது—பூநீறு, மதியென்பது-வெள்ளி.

403-வது பாட்டு சஞ்சீவிமுலிகை யிருக்குமிடமென்பது—சதுரகிரி முதலிய பல இடங்களாம்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
வைத்திய வாதசூஸ்திரம் 400-க்குப்
பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற
## யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
# வைத்தியம் 300-க்கு
## பரிபாஷை அரும்பதவுரை

### பதினைந்தாவது சாஸ்திரம்.

1-வது பாட்டு ஆதியிலே இராமனென்பது—முன்பு இராமதேவராய் யிருந்து அப்பால் யாகோபென்னும் நாமங்கொண்டனராம்.

3-வது பாட்டு துலுக்கன் மொட்டையென்பது—சதுரகிரியின் மத்தியில் யாகோபு அவர்கள் முன்வசித்திருந்த வனத்தின் பெயராம்.

9-வது பாட்டு காட்டோலையென்பது—பனையோலை, நசலென்பது—சீக்கு அல்லது வியாதி.

13-வது பாட்டு சுத்திமுறையென்பது—சரக்குகளைச் சுத்தி செய்ய வேண்டிய முறைகளைப்பற்றி கூறுவது. அதனை வைத்திய சிந்தாமணி 700ரில் வகாரஞ்செய்ய வேண்டிய சரக்குகளுக்குச் சுத்திமுறை சொல்லியிருக்கிறு ரென்றறிக.

59-வது பாட்டு நாடிபிறந்திருக்கும் வகையென்பது—நாடி நரம்புகளுதிக்கின்ற இடங்களையும் அவையொடுங்குகின்ற இடங்களையும், நாடிகள் நடக்கும் விதங்களையும், இன்ன நாடியெனத் தெரிந்து கொள்ளும் மர்மத்தின் விபரங்களையும், நன்குவிளங்கக் கூறியிருக்கிறதாம்.

160-வது பாட்டு வியாதிவருமுலமென்பது—அரிவையர்களினுசையை அதிகம் விரும்புதல், உணவுகளை அளவுக்கு மீறிக்கொள்ளுதல். அளவுக்குக் குறைத்துப் புசித்தல், மாலைநேரம் எண்ணை முழுகிக்கொள்ளுதல், மலச்சிக்கல், இரவு உறங்காதிருத்தல் ஆகிய பற்பல குற்றங்களினுல் வியாதிவருமெனத் தெரிந்து கொள்வதாம்.

172-வது பாட்டு வெளிச்சிப் பிசினென்பது—ஓரரிய பிசின், அஃது பழநி என்னும்பதியில் விசேடமா யுற்பத்தியாகி ஆங்குகடைகளில் விற்பனையாகி வருகிறது.

206-வது பாட்டு மேனியென்பது—குப்பைமேனி.

209-வது பாட்டு கனியளவென்பது—எலுமிச்சங்கனியளவு.

212-வது பாட்டு திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

244-வது பாட்டு அசுவகெந்தியென்பது—அமுக்கிருக்கிழங்கு.

253-வது பாட்டு உத்தாமணி யென்பது-வேலிப்பருத்தி, திரிகடுகென்பது—சுக்கு திப்பிலி மிளகு.

254-வது பாட்டு அசுவகெந்தியென்பது—அமுக்கிருக் கிழங்கு.

260-வது பாட்டு காராடென்பது—வெள்ளாடு.

276-வது பாட்டு கேசரியென்பது—கழுதை.

289-வது பாட்டு பழந்துணியிற் றடவென்பது—ஒரு வெள்ளைத்துணியைக் கசக்கிக்காயவைத்து அரைத்த மருந்துகளை ஒருபக்க மட்டுந் தடவுவது.

290-வது பாட்டு பின்புமறுபக்க மென்பது—மற்றொரு பக்கத்திற் றடவுவது.

295-வது பாட்டு நிம்பயெண்ணெய் யென்பது—வேப்பெண்ணெய்.

305-வது பாட்டு பழம்பட்டென்பது—கிழிந்தபட்டுத்துணி.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
வைத்திய 300-க்குப்
பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

## இராமதேவரென்ற
யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# தண்டகம் 110-க்கு

## பரிபாஷை அரும்பதவுரை

### பதினாறுவது சாஸ்திரம்.

1-வது பாட்டு ஆதியே அண்டபிண்டமென்பது—ஆகாயம், உலகம், கருப்பமுதலியவைகளிலெங்கும் நிறைந்த இறைவன்.

8-வது பாட்டு கருவானநாதமென்றும் விந்துவென்று மென்பது—அகார உகாரமாம், அதையின்னதென்று தெரிந்துகொண்டேனென்பதாம்.

7-வது பாட்டு ஆறுவரையடுக்கண்டேனென்பது—ஆறுதாரத்தின், முடிவைத் தெரிந்தேனென்பதாம்.

8-வது பாட்டு பஞ்சவர்களைந்து பேர்களென்பது—பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்ற பஞ்சபூதங்களைந்தாம்.

13-வது பாட்டு ஆறுதலமென்பது—மூலாதாரம், சுவாதிஷ்டானம் மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவையாம்.

20-வது பாட்டு அருளான பொருளென்பது—மந்திரமாகும்.

29-வது பாட்டு சிதம்பரமென்பது—சிதம்பரச்சக்கரமும், மந்திரமுஞ் சொல்லுவதாகும்.

46-வது பாட்டு நாற்பத்துமுக்கோணமென்பது—43 இதழ்வரும் படி வரைந்த சக்கரம் தேவிதானமாகிய சத்திபீடம், அந்தப் பீடத்தைத்தாபித்து நியமத்துடன் 46, 47, பாட்டுகளிற் கூறியிருக்கிறபடி முறைகள்தவறாது பூசிக்கச் சகலகாரியங்களும் சித்தியாகும்.

47-வது பாட்டு அன்னசத்தியென்பது—நெய்.

50-வது பாட்டு ஆதியென்றகுருவென்பது—வாசியோக ஞானங்களை அடைவதற்கு உரித்தான முப்புக்குரு.

59-வது பாட்டு சுண்ணத்தில் சுவரசத்தையும், உமிழ்நீரையும் விட்டுக் குழைத்துச் சரக்குகளுக்குப்பூசிப் புடமிடச் சுண்ணமாகும். அச்சுண்ணம் அறுபத்து நான்கு சரக்குகளையுங் கொல்லும். உமிழ் நீரென்பது—வாயிலிருந்து ஊறுஞ்சலம். அல்லது வாய் நீர் என்ப.

71-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு, காட்டு முட்டையென்பது—காட்டெரு.

85-வது பாட்டு ஆனந்தசற்குரு வென்பது—முப்பூ, காட்டு முட்டையென்பது—காட்டெரு.

இவர் இந்நூலில் முப்பூக்குரு, அட்டமாசித்திக்குரு, ஞானக்குரு, ஆகிய இவைகளைப்பற்றித் தண்டகமாகச் சொல்லச் சித்தர்கள் புஷ்பமாரி பெய்தார்களாம்.

88-வது பாட்டு நோயென்பது-குன்மம், சூலை, சுரம், காஷம், குஷ்டம் பாண்டு, மூலம், வெடிசூலை, கண்டமாலை, விப்புருதிக்கட்டி, முதலிய சகல வியாதிக்கும் பசுவின் வெண்ணெயிற் பண விடை கொடுக்கத்தீரும்.

90-வது பாட்டு பத்தியக்குறை யென்பது—பத்தியத்துடன் மருந்து சாப்பிடும்போது வேணுமென்ற பதார்த்தங்களைப் புசித்தாற் குற்றமேற்படும். குற்றமென்பது — கால் கை முடக்கல், மொளிக்கு மொளி நீர்கட்டுதல் முதலியவைகளாம்.

91-வது பாட்டு சிவயோக சமாதியிற் கற்பமுண்ணும்போது சூடு கொண்டால் மேற்சொன்ன செந்தூரஞ் சாப்பிடச் சூடுநீங்கித் தொண்ணூற்றாறு தத்துவத்தையும் வெல்லலாம்.

96-வது பாட்டு காட்டுமுட்டையென்பது—காட்டெரு.

97-வது பாட்டு செந்தூரம் பணவிடை கொண்டாலென்பது—நீடூழி காலம்வரை காயம் நிலைக்கும். அப்பொழுது தேகம் பத்தரை மாற்றுப் பொன்போ லிருக்கும் பரிமளவாடையும் வீசுமென் பதாம்.

99வது பாட்டு சாவென்ற புரளிபோச்சென்பது—எமன் கிட்டவர மாட்டானென்பதாம்.

100-வது பாட்டு இராஜயோகம், மௌனயோகம், ஞானயோகம், வாசியோகம், சஞ்சாரசமாதி, யோகசமாதி, விகற்பசமாதி.

நீரணத்தின்குறி அட்டமாசித்திகள், அஞ்சனமறைப்பு, வசியமந்திர வாதங்கள் முதலிய யாவற்றையுமறிந்து காயசித்தி பெற வேண்டுமெனச் சொல்லுகிறார்.

109-வது பாட்டு சொரூபகாதவிந்தென்பது—சத்தியாற் கிடைக்கப் பெற்றதாம்.

110-வது பாட்டு தண்டகத்தின் முடிவைக்கண்ட சித்தர்கள் யாவரும் சந்தோஷ முற்றவர்களாய்ப் பல வாத்தியங்கள் கோஷிக்கப் புட்பமாரிபெய்து இந்நூலாகிய அமுதத்தைப் புசித்து ஆசி கூறினர்களாம்.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
தண்டகம் 110-க்குப்
பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்தியசூஸ்திரம் 55க்கு

## பரிபாஷை அரும்பதவுரை.

### பதினேழாவது சாஸ்திரம்.

1-வது பாட்டு பூரணமாய் நிறைந்ததென்பது—கடவுள்.

2-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

6-வது பாட்டு தாளகச்செந்தூரஞ் செய்யும்போது முப்பூக்குருச் சுண்ணஞ் சேர்த்துக் கொடுக்கச் செந்தூரமாகும்.

9-வது பாட்டு எரண்டமென்பது—முத்தெண்ணெய்.

12-வது பாட்டு மயானப்பூடென்பது—அஸ்தி, எரண்ட மென்பது—முத்தெண்ணெய்.

14-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

17-வது பாட்டு கொடுப்பை யென்பது—பொன்னுங்கண்ணி.

23-வது பாட்டு காரசாரமென்பது—பூநீர்க்குரு, பழச்சாறென்பது—எலுமிச்சம் பழச்சாறு.

24-வது பாட்டு இஞ்சிச்சாற்றிற் சுண்டக்காயள வென்பது—சன்னிக் குழம்பைச் சுண்டைக்காயளவு சேர்த்துக் கரைத்துக் கொடுப்பது.

25-வது பாட்டு அமுதப்பாலென்பது—குழந்தைப்பால்

26-வது பாட்டு சூரணமென்பது-கர்ப்பமுண்டாகக் கொடுக்கக்கூடிய கர்ப்பச் சூரணம்.

27-வது பாட்டு வேலியுட பருத்திச்சாறென்பது—வேலிப்பருத்திச் சாறு.

28-வது பாட்டு விலக்குநாளென்பது-பெண்கள் மாதவிடாயானநாள்.

29-வது பாட்டு தானதுவே மாதமென்பது—அப்பொழுதே கர்ப்ப முற்பத்தியாகு மென்ப.

30-வது பாட்டு வேறுமொரு மருந்தென்பது—ஒரு வைத்தியரிடம் மருந்து சாப்பிடும்பொழுது அதைவிட்டு வேறுமருந்துகளைச் சாப்பிட்டால் வியாதி தீராமலுர் திரேகமெலிவுற்று மிருக்கும் அப்பொழுது அம்மருந்து முறிவுக்குக் கியாழஞ் சாப்பிடத் தீருமென்றறிக.

32-வது பாட்டு அதைக்கலக்கிக் கொண்டாரானு லென்பது—அந்த மருந்தைக் கலக்கிச் சாப்பிடவேணுமென்பது.

33-வது பாட்டு வில்வமர மூலமென்பது—வில்வவேர், முல்லையுட மூல மென்பது—முல்லைவேர்.

34-வது பாட்டு குண்டமென்பது—சட்டி.

36-வது பாட்டு முழுகுவதென்பது—காலையில் ஸ்நானஞ் செய்வது.

37-வது பாட்டு மூலமென்பது—வேர், பாண்டமென்பது—சட்டி.

40-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

45-வது பாட்டு கேசரிப்பா லென்பது—கழுதைப்பால்.

51-வது பாட்டு வயதுதான் பேசிடாமலென்பது-அந்தப் பச்சிலையைப் பிடுங்கும்போதும் அதைக் கொண்டுவரும்போதும் எவரிடத் திலும் வார்த்தையாட லாகாதென்பதாம்.

52-வது பாட்டு முன்மெழுகென்பது—கஞ்சாங் கோரையிலையும் மஞ் சளுஞ் சேர்த்து அரைத்த மெழுகு.

53-வது பாட்டு பழச்சாறென்பது—எலுமிச்சம்பழச்சாறு.

55-வது பாட்டு முன்னமுள்ள முந்நூறென்பது—வைத்திய முந்நூறு மென்ப.

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
வைத்திய சூஸ்திரம் 55-க்குப்
பரிபாஷை அரும்பதவுரை
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# புதிய புத்தக கேட்லாக்

## இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

## பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி.

( இது ஓர் பெரிய வைத்திய அகராதி. )

பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்கள், பஞ்சபூதச் சரக்குகள், உபரசச் சரக்குகள், 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகைகள் உப்பாகுஞ்சரக்குகளின் விபரமும், மருந்துகள் செய்யச் சரக்குகளின் சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரமும், 64 பாஷாணங்களின் பெயர்களும், அதற்கு சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும், 4448வியாதிகளின் விபரங்களையும் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தைப் பார்க்க வேண்டியதவசியம். 280 பக்கங்கள் கொண்டது. புத்தகம் 1க்கு ரூ 2...0...0

## அகத்தியர் பரிபாஷை 300.

ஓலைச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் அச்சிட்டு வெளிவந்தது (பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் முன்னம் இருந்து வருவதில் இது பின்பாகம் மூன்று காண்டங்கள் புதிதாக இப்பொழுது அச்சிட்டது புத்தகம் 1க்கு விலை அணு 0...8...0

## அகத்தியர் கற்ப மூப்புக் குரு நூல்

இதில் கற்பம், கற்ப தீட்சை, முப்பூ முடிக்கும் விபரம், பற்பம் செந்தூர முறைகள், சுண்ணம், மெழுகு, தைலம், வாலை பூஜா விதிகளும் தெளிவாகச் சொல்லியது. புத்தகம் 1க்கு விலை அணு 0—8—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் இதுவரையும் வெளி வராதது இதில் ஞானம், யோகம், இன்னதென அவரவர்களே எளிதில் தெரிந்து கொள்வதுடன் தன்னைத் தானறிந்து ஞான யோக சாதனை யடைந்து கற்ப தேகியாகும் விபரங்களும் சொல்லி யுள்ளது. புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம். வைத்திய காண்டம், வாத காண்டம், சுண்ணக் காண்டம், செந்தூரக் காண்டம், பற்ப காண்டம், தைலக் காண்டம், கற்ப காண்டம், யோக ஞான காண்டம், தீட்சா விதிகாண்டம், சாபநிவர்த்தி காண்டம், ஜால காண்டம், மந்திர காண்டம், ஆக 12 காண்டங்கள் புத்தகம் 1க்கு விலை அணு 0—8—0

## அகத்தியர் ஐந்து சாவ்ஸ்திரங்கள்.

மணக் கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிறுக்கு நூல் என்னும் கிரிகை சாவ்ஸ்திரம் ஆ 5 சாஸ்திரங்கள் )

இதில் வயித்திய பாகங்கள் பாசாணங்களில்லாது கடைச் சரக்குகளைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்களையும் தீர்க்கும் முறைகளைச்சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களும் தெளிவாகக் கூறியுள்ள அரிய சாஸ்திரம். இதுவரை வெளிவராத நூல், புத்தகம் 1க்கு அணு 0...12...0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.
புத்தகம் 1-க்கு விலை அணு 0—3—0

# அகத்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் எட்டுப் பிரதியாக அனுபவத்தில் யிருந்து வந்தது இம் முறைகளை யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம், மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க பாகங்களாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இதில் பதினெண் சித்தர்களால் பாடிய நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அதிலுள்ள மர்மமான பதங்களை புலத்தியர் கேட்க அதன் தாத்பரியங்களை தெளிவாக சொல்லியது.

புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## அகத்தியர் பூஜா விதி 200, ஞான சைதன்யம் 51ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் ஷ பூசையும் அட்ட கன்ம பூசா விபரங்களும், தேவி பூசா மார்க்கமும், மவுன யோக ஞான சாதன விபரமாய்க் கூறியுள்ளது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் வகார சூத்திரம் 200.

ஷ சுருக்கம் 100ம் சேர்ந்தது.

இதில் வகார முறைகளும், யேக மூலிகை யின்ன தென்ற விபரமும் குரு முடிக்கும் விபரமும் தெளிவாய் யாவருக்கும் நன்கு புலப்படு வண்ணம் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் மூலிகை என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வகாரம் முடியுமென்றும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும், இன்னு மநேக பரிபாஷைப் பெயர்களையும் விபரமாகச் யிருக்கிறது புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடு விதமும், அக்காலத்தில் ஏற்படும் சூடு சோபதாபங்களுக்கு வேண்டிய கிசாயங்களும், ஸ்நானம் செய்யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங்களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் செய்ய வேண்டிய முறையும், வாத முறைகளும், சுத்தி முறைகளும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம். புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது. இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 மட்டுந்தான் முன் அச்சிட்டிருக்கிறது இப்பொழுது இந்தப் பரிபாஷை 300 அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 மாத்திரம் முன் அச்சிட்டிருக்கிறது முதல் காண்டமும், நடுக்காண்டமும் இதுவரை கிடைக்காமலிருந்து இப்பொழுது நடுக்காண்டம் 500 மாத்திரம் ஒரு ஏட்டுப் பிரதி கிடைத்து அச்சிட்டிருக்கிறது.

புத்தகம். 1-க்கு விலை அணா 0—10—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

ஞானவெட்டி 1500-க்கு சூஸ்திரமான

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் பூநீர் முப்பூ வழலை விபரங்களும், தெளிவாகக் கூறியுள்ளது புத்தகம் 1க்கு விலை அணு 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகம் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள் மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது புதிதாக அச்சிட்டது. புத்தகம் 1க்கு விலை அணு 0—8—0

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இதில் ரசவாதத்துக் குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூர வேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தகத் தைலம், நாகரச கெந்தி, 'தைலத்தின் பெருமை, தங்க உரம், வெள்ளி உரம், செய்யும் முறைகளும். சரக்கு கட்டு வகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாக ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணு 0...8...0

குரு. இராமசாமிக் கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

# காகபுசண்டர் 1000.

இவர் பிரளயகாலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலத்தையும் பார்த்துவந்தவர். இவர் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இதுவரை ஏட்டுப் பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250 - பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

## 17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவராக இருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசியதில் அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோக முறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புத்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோக முதலிய விபரங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானையாகவும், பல சந்தங்களாக இக்கலியுக தருமம் எவ்விதம் நடைபெறு மென்பதை விபரமாயும் சூட்சம மாயும் சொல்லியிருக்கிறது.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# இராமதேவர் சிவயோகம்

இதில் யோகம், நிஷடை மார்க்கம், வகாரம், மருந்து, பஞ்ச பூதங்களின் விபரம், முதலிய வகைகளை விபரமாகக் கூறியிருக்கிறது. 200 பாடல்கள் அடங்கியது. புத்தகம் 1க்கு விலை அணா 0...6...0

# இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகள், சத்துரு மித்துருச் சரக்குகள், தைலமுறைகள், வைத்திய முறைகள், அஷ்டகர்ம விபரங்கள், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரம், பற்பம், செந்தூரம், சுண்ணம், செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை ரூ 1—0—0

## விஷ வைத்திய மென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பது ஆரூட சாஸ்திரங்கள் ஒரேபுத்தகமாகச் சேர்ந்துள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, பூரான், செய்யான், வண்டு, முதலானவைகளால் விஷ மேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச் சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்கு எளிய முறைகளாய்ச் சமயோசிதம் போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. 392-பக்கங்கள் கொண்ட புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

## உலகரகசிய வெளிப்படை யென்னும்பஞ் சலட்சணத்

# திருமுக விலாசம்.

சோதிடர், வைத்யர், சாமியார், கோடாங்கி, தட்டார், தாசி, காசுக் கடைக்காரர், ஜவுளிக்கடைக்காரர், லேவாதேவி செய்வோர், முதலான வர்கள், தங்கள் சாமர்த்தியத்தால், பிறர்கள் தெரிந்துகொள்ளா வண்ணம், செய்யும் ஏமாற்றங்களையும், சாமர்த்தியங்களையும், வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிறது இதை வாசிப்போர் கேட்போர் பிறர்களிடம் எவ்வகையிலும் ஏமாந்துவிடாது இருந்துகொள்ளலாம் விடாநகைப்பை உண்டு பண்ணும். ரூ 1—0—0

## கோரக்கர் மலைவள சாஸ்திர மென்னும்

# மலை வாகடம்.

இந்நூலில் திருவனந்தபுரம் பென்னும் மலையாள எல்லையி லிருந்து நீலகிரி மலை வரையிலு முள்ள எல்லா மலைகளையும், அம் மலைகளில் ஆங்காங்கு கிடைத்தற் கரிதாகிய பொருள்களையும், சித்தர்கள் குகை வாசஞ்செய்து வந்த இடங்களையும், முப்பூவின் மர்மங்களையும், உதகங்களின் விபரங்களையும், மூலிகை, கற்பம், இவைகளிருக்கு மிடங்களையும், அவைகளை எடுத்து உபயோகிக்கு மார்க்கங்களையும் யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளு வண்ணம் வசன ரூபமாகக் கூறியிருக்கிறது. கிளேஸ் கடிதம் புத்தகம் 1க்கு விலை ரூ 1...8...0

## சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு

இதில் சோலைமலையி லெழுந்தருளியிருக்கும் அழகமலையாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை போகும் வரை பூராவும் வர்ணிப்பாகப் பாடியிருக்கிறது. விலை அணு 0—2—0

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடித்துக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி யாடிகளுக்கும், ஆருடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், மூத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் மிகவும் முக்கியமானது. புத்தகம் பாகம் 1-க்கு விலை அணு 0—2—0

## வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரத் திரட்டு.

இதில் அநேக சித்தர்களால் பாடிய சாஸ்திரங்கள் சில்லரை ஏடுகளாயிருந்ததைச் சேகரித்து 10 பாகங்களாக அச்சிட்டிருக்கிறது பாகம் 1க்கு விலை ரூ 1...4...0